விலை: 30.00
பக்கங்கள் : 16 + XVI
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 12 ஞாயிற்றுக்கிழமை (29.09.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 284

கோத்தாவுக்கு ஆதரவாக

## தமிழர்கள் மத்தியில் மைத்திரி களமிறங்குவார்?

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடக்கு கிழக்கில் பிரசாரங்களில் ஈடுபடுவது என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் இணக்கத்திற்கு வந்துள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் மகிந்த ராஜபக்சவும் கோத்தபாய ராஜபக்சவும் 15

## நாட்டு மக்களை ஏமாற்றும் தற்போதைய ஆட்சியாளர்களே மோசமானவர்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டு மக்களை ஏமாற்றி ஆட்சி செய்து வரும் தற்போதைய ஆட்சியாளர்களே மிகவும் மோசமானவர்களென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொறளையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மகிந்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளதாவது, பேருவளையில், முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் எமது காலத்தில் மேற்கொள்ளப்பட்டி 15

## போர்க் குற்றத்தில் ஈடுபட்டவர்கள்

# தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது

### ஐ.நா இயக்குநர் லூயில் சர்பொனேயு

(ஜெனிவா)

இலங்கையின் இறுதிக்கட்ட போரின் போது போர்க்குற்றத்தில் ஈடுபட்ட படையினர் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஐ.நா விற்கான இயக்குநர் லூயில் சர்பொனேயு தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படையினரை ஐ.நாவின் அமைதிகாக்கும் படை யணியின் நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தியதன் மூலம் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்களை தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிப்பதற்கு எதி 15

## விவசாயத்திற்கு முன்னுரிமை

### கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

விவசாயத்துறைக்கு முன்னுரிமை வழங்கும் தேசிய கொள்கை ஒன்றை செயற்படுத்தவுள்ளதாக ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித் 15

## மகேஸ் சேனநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் இயக்கத்தின் (National People's Movement - NPM) சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர் இன்று அறிவிக்கப்படவுள்ளார்.

ஜெனரல் மகேஸ் சேனநாயக்க இன்று நடைபெறும் கூட் 15

## ஜனாதிபதி வேட்பாளர் ஆக நிபந்தனை எதனையும் ஏற்றுக்கொள்ளவில்லை



### சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கியதேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்பிரேமதாச ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக நிபந்தனைகள் எதனையும் ஏற்றுக் கொள்ளவில்லை என குறிப்பிட்டுள்ளார். செய்தியாளர்களின் கேள்வி 15

வீட்டுக்குள் புதைத்து வைத்திருந்த

## 36 கிலோ கேரளகஞ்சா அல்வாய் பகுதியில் மீட்பு



(கரணவாய்)

36 கிலோ கிராம் கேரள கஞ்சா போதைப்பொருளை தனது வீட்டுக்குள் குழி தோண்டி புதைத்து வைத்திருந்த ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை அல்வாய் பகுதியில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போதே கஞ்சா மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவும் 15

பற்றைக்குள் இருந்து

## யாழில் மூதாட்டி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

காணாமற்போன மூதாட்டியினை தேடி அலைந்த உறவினர்களுக்கு, காகங்கள் அடையாளம் காட்டியதனால் பற்றைக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று மதியம் 15

## ராஜபக்ச சகோதரர்கள் ஜனாதிபதி மைத்திரியுடன் சந்திப்பு

### இணக்கப்பாடு எட்டப்படவில்லை

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவின் தலைவர்களிற்கிடையிலுமான சந்திப்பில் குறிப்பிடத்தக்க இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் பொதுஜன பெரமுனவின் மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோருக்கிடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது. 15

புரட்டாதிச் சனி விரதத்திற்காக

## யாழில் கோவிலுக்குச் சென்ற பெண்ணின் கைப்பை திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புரட்டாதிச் சனி விரதத்திற்காக கோவிலுக்குச் சென்ற பெண்ணொருவரின்கைப்பை திருடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலில் இடம்பெற்றுள்ளது.

புரட்டாதி சனி விரத வழிபாட்டிற்காக யாழ்ப்பாணம் 15

## கணவன், மனைவியை கட்டிவிட்டு 30 பவுண் நகை கொள்ளை

### மீசாலை வடக்கில் அதிகாலை சம்பவம்

(சாவகச்சேரி)

மீசாலை வடக்கு புத்தூர் வீதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் நேற்று சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் உள்நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்தவர்களைக் கட்டி வைத்து விட்டு முப்பது பவுண் நகையினைக் கொள்ளையிட்டதுடன் வீட்டு உரிமையாளரின் மோட்டார் சைக்கிளினை எடுத்துக் கொண்டு தப்பித்தும் சென்றுள்ளனர். 15

# நிர்வாக சேவை அதிகாரிகள் நாளை முதல் சேவை நிறுத்தம்

(கொழும்பு)

சம்பள முரண்பாட்டை நீக்குதல் உட்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து அரச நிர்வாக சேவை அதிகாரிகள் நாளை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர்.

கடந்த 12ம் திகதி முதல் மட்டுப்படுத்தப்பட்ட சேவை நேர தொழிற்சங்க போராட்டத்தை கைவிட்டு நாளை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அரச நிர்வாக சேவை அதிகார சங்கத்தின் தலைவர் ரோஹண டீ சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் வேலை நிறுத்தம் தொடர்பாக தெரிவித்ததாவது.

மட்டுப்படுத்தப்பட்ட வேலை நேர போராட்டத்தை கைவிட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட இருக்கிறோம்.

எமது பிரச்சினைகள் குறித்து பல சுற்று பேச்சுவார்த்தைகளைக் அரசாங்கத்திடம் நடத்தினோம்.

எனினும் எந்த தீர்வும் கிடைக்கவில்லை.

கடந்த 11,12ஆம் திகதிகளில் சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டோம். அதன் பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட சேவை நேர தொழிற்சங்க போராட்டத்தை நடத்தினோம்.

எனினும் எந்தவிதமான தீர்வும் கிடைக்கவில்லை. நாம் ஆரம்பிக்கபோகும் வேலை நிறுத்தத்தால் பொதுமக்கள் பாதிக்கபடுவதுடன் பெரும் வருமான இழப்பும் ஏற்படும். இதனை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# ஐ.தே.க சகல தொகுதி அமைப்பாளர்களையும்

## கொழும்பு வர அழைப்பு

ஐக்கிய தேசிய கட்சியின் சகல தொகுதி அமைப்பாளர்களும் நாளை திங்கட்கிழமை கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் இடம்பெறவுள்ள விசேட கூட்டம் ஒன்றில் பங்கேற்பதற்காகவே அவர்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 9.30க்கு இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கை உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன.

இந்த கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-3)

# சம்பந்தன், சுமந்திரன் தமிழ் பிரதிநிதிகள் இல்லை சிங்களப் பிரதிநிதிகளே

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் ராஜ்குமார் தெரிவிப்பு

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகிய இருவரும் தமிழர்களுக்கான பிரதிநிதிகள் இல்லை. அவர்கள் சிங்களவர்களுக்கான பிரதிநிதிகளே என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதில் வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் பொதுப் பிரச்சினைகள், போராட்டங்கள் எதிலும் கலந்து கொள்வதில்லை. குறிப்பாக நீராவியடி பிள்ளையார் கோவில் விவகாரம் மற்றும் காணாமல் ஆக்கப் பட்டவர்கள் போராட்டங்களில் திறமை வாய்ந்த சட்டத்தரணியாக இருக்கும் சுமந்திரனாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினாலும் ஏன் குறித்த விடயம் தொடர்பில் தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை என ஊடகவியலாளர்களால் கேள்வி கேட்ட போது,

இதன்போது பதில் வழங்கிய காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் ராஜ்குமார், ஒருநாடு என் கோட்பாடு மற்றும் வடக்கு கிழக்கை ஏற்றுக் கொண்டவர்கள் இவர்கள் தமிழர்களுக்கான பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு தரமாட்டார்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் விலை போய்விட்டார்கள். தமது பதவிகளும் சுகபோகங்களுமே இவர்களுடைய குறிக்கோள் எனவும் நீராவியடி சம்பவத்தில் சட்டத்தரணிகள் குரல் கொடுத்திருந்தார்கள். ஆனால் தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட சம்பந்தன் ஐயா இது வரைக்கும் வாய்திறந்து கதைக்கவில்லை. 300 கோடி ரூபாய் வீட்டை வாங்கியவரால் வாய்திறந்து கதைக்க முடியாது. இதேபோல சுமந்திரனும் அதற்கு அடிமை எனவும் பல குற்றச்சாட்டுக்களை தெரிவித்தார்.

இதன்போது வவுனியாவில் உருவாக்கப்பட்ட தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கமே முதலில் ஆரம்பிக்கப்பட்டதென்றும் இச் சங்கமே தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டு வருவதாகவும் ஏனைய சங்கங்கள் போராட்டங்களை மழுங்கடிப்பதாக ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ம-3,299)

பிரதேச சிகரம் தொழில் முகவர்

கிளிநொச்சி விசுவமடு – பூநகரி – புதுக்குடியிருப்பு – முல்லைத்தீவு மல்லாவி நெடுங்கேணி புளியங்குளம் – வவுனியா மன்னார் வலிகாமம் – தென்மராட்சி வடமராட்சி தீவகம்

25,000 50,000 /= வருமானம் + கமிஷன்

கல்வி தொழில் வழிகாட்டி சேவையில் 10 ஆண்டுகளை நிறைவுசெய்து, வடக்கின் 1ஆவது ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமான Emerald Isle ஆரம்பித்திருக்கும் சிகரம் நிறுவனம், தற்போது அறிமுகப்படுத்தியிருக்கும் அதிதுரித தொழிற்கல்வி, மற்றும் வெளிநாட்டுக் கல்வி விசா சேவைகளையும் வடக்கு மாகாணம் தழுவிய அளவில் விரிவாக்க

பிரதேச 'சிகரம் தொழில் முகவர்'களை நியமிக்கவுள்ளது

ஓரளவு கல்வித் தகைமையுடன் மோட்டார் சைக்கிள் உள்ள ஆண் – பெண் இருபாலரும், சுயவிபரக்கோவை, கிராமசேவையாளரின் நற்சான்றிதழுடன், விண்ணப்பிக்கும் பிரதேசத்தை குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு ஒக்டோபர் 3ம் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.



SIKARAM ACADEMY
இல. 221 1/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9221, 077 732 4004
FB: Sikaram Academy

உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா?

பால்மா குளிசை

15 நாட்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்

தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளர வேண்டுமா? பேன் பொடுகு தொல்லையா? முடி கொட்டுகிறதா? இளநரையா? தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? புதிதாக முடி முளைக்க வேண்டுமா? பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் குளிசை

இந்த எண்ணெயைப் பாவித்து பயனடைய (463)

077 210 6155 221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

சிறுகுறிஞ்சா இலை தேவை

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ள ஒரு மருத்துவ ஆய்விற்கு பெருமளவில் சிறுகுறிஞ்சா இலை தேவைப்படுவதால் வழங்கக்கூடியவர்கள் கீழ்க்காணும் தொலைத்தொடர்பு இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சுத்தமான கொடிகள் அற்ற தனித்த இலைகள்
1 Kg ரூபாய் 100 வீதம் கொள்வனவு செய்யப்படும். (448)

தொடர்பு:- 0778052520 - மருத்துவ ஆய்வுக்குழு

எங்கும் கிடைக்காத
மாபெரும் விலைக்கழிவு!
12,000/- கழிவு
நீர் பரிசோதனை இலவசம்...!
பொருத்துதல் இலவசம்...!




SPECIAL OFFER
42,000/-
30,000/-
மட்டுமே..
* நியந்தனைகளுக்குட்பட்டது.
2019 ஒக்ரோபர்
01 முதல் 5 வரை
"Smart Water
Smart life"
உங்கள் வீட்டிலுள்ள நீர் தொடர்பான ஆலோசனைகளுக்கு...
Yarl Smart
Water Solution (Pvt) Ltd
No. 341, K.K.S Road, Jaffna.
Hotline:- 076 666 5267 , 077 473 9802
yarlsmartwater@gmail.com www.yarlsmartwater.com

# இந்து மக்களே எழுச்சி கொள்க!

## மன்னாரில் மாபெரும் சைவ மாநாடு








(மன்னார்)

மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் ஏற்பாட்டில் "இந்து மக்களே எழுச்சி கொள்க" எனும் தொனிப்பொருளில் மாபெரும் சைவ எழுச்சி மாநாடு நேற்றுக் காலை 8 மணியளவில் மன்னார் பாலத்தடியிலிருந்து நடராஜர் சிலை நகர சபை மண்டபம் வரை பேரணியாகக் கொண்டு வரப்பட்டு ஆரம்பமானது.

மன்னார் மாவட்டத்திலுள்ள இந்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் மாற்று மதத்தின் இடையூறுகள் இன்றியும் மாற்று மத மக்களுக்கு இடையூறு இன்றியும் வாழ்வது தொடர்பாகவும் இந்து நீதி இந்துக்களுக்கு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என்பது தொடர்பாகவும் இம் மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்டது.

குறித்த எழுச்சி மாநாட்டில் யாழ்.சின்மியா மிஷன் சுவாமிகள், தென்கயிலை ஆதீனம், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், தமிழருவி த.சிவகுமாரன், செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், இந்து அறநெறி ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் இந்து மதமும் திருக்கேதீஸ்வரத்தின் தொண்மையும் பாலாவியின் புனிதம், மன்னாரும் இந்து மதமும் போன்ற தலைப்புக்களில் விரிவுரைகள், கருத்துரைகள் வழங்கப்பட்டன. (இ-285)

# புதிய போத்தலில் பழைய வைன்; சஜித்தால் மக்களைக் கவர முடியாது

## டிலான் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பழைய வைனை புதிய போத்தலில் அடைத்துத் தருவதைப் போன்றே சஜித் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார். ரணில் விக்கிரமசிங்க பிரதமர் வேட்பாளர் எனில் சஜித்தால் மக்களைக் கவர முடியாது என்று மகிந்த அணியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அத்துடன் சுமந்திரனும் சம்பந்தனும் சஜித்திற்கு ஆதரவளித்தாலும் முழுமையான கூட்டமைப்பின் முடிவாக அது அமையாது என்றும் டிலான் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டமை மற்றும் ஜனாதிபதித் தேர்தல் செயற்பாடுகள் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியால் தெரிவு செய்யப்பட்டார். தான் புதிய பயணத்தை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் சஜித் கூறுகிறார்.

ஆனால் அவரால் புதிய பயணத்தை மேற்கொள்ள முடியாது. காரணம் அவர் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமர் வேட்பாளர் என்று அறிவித்தார். அது மட்டுமன்றி யானைச் சின்னத்தில் போட்டியிடாமல் அன்னம் சின்னத்திலேயே போட்டியிடப்போவதாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்த இரண்டு விடயங்களையும் பார்க்கும்போதே சஜித் புதிய பயணத்தை முன்னெடுத்துள்ளதாகக்கூற முடியாது. இங்கு பழைய வைனை புதிய போத்தலில் அடைத்துத் தருவதைப் போன்றே சஜித் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் என்று தெரிகின்றது. ஆனால் அது ஒட்டுமொத்த கூட்டமைப்பின் முடிவாக இருக்காது. சுமந்திரனும் சம்பந்தனும் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்தாலும் முழுமையான கூட்டமைப்பின் முடிவாக அது அமையாது.

சஜித் பிரேமதாஸ்வால் அரசியல் தீர்வை வழங்க முடியும் என்று கூற முடியாது. கூட்டமைப்பினருடன் ரணில் விக்கிரமசிங்க நெருக்கத்துடன் இருந்தார். அவ்வாறு இருந்தும் அவரால் தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்க முடியவில்லை. அவ்வாறு இருக்கும்போது சஜித்தால் வழங்க முடியும் என்று நம்ப முடியாது.

அண்மையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றியமைக்கும் யோசனைக்கு சஜித் அணி எதிர்ப்புத் தெரிவித்தது. அது தொடர்பில் கூட்டமைப்பினர் விசனம் வெளியிட்டிருந்தனர். ஆனால் மறுபுறம் எமது வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ சிறப்பான முறையில் மக்கள் ஆதரவைப் பெற்று வருகிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி பிரேமதாஸவின் கீழ் ஐ.தே.க.அரசு விரைவில் உதயம்

## ரோஷி அதீத நம்பிக்கை



(கொழும்பு)

பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரைக் காட்டிலும் சஜித் பிரேமதாஸ இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான அதிக வாய்ப்புக்கள் காணப்படுவதாக கொழும்பு மாநகர சபையின் முதல்வர் ரோஷி சேனநாயக்க தெரிவித்தார்.

அத்தோடு, ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்படும் வரையில் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாக அவர் தெரிவித்தார்.

போட்டியின்றி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளதாக தெரிவித்த அவர், பல வருடங்களின் பின்னர் ஜனாதிபதீ பிரேமதாஸவின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒன்று உருவாக வுள்ளதாகவும் ரோஷி சேனநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# யானைகள் உயிரிழப்பு ஏழாக அதிகரிப்பு

## மரணங்களால் மக்கள் அதிர்ச்சி



(ஹபரணை)

ஹபரணை, ஹிரிவதுன்ன வாவிக்கு அருகில் நேற்று முன்தினம் நான்கு யானைகள் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த நிலையில் நேற்றுக் காலையும் யானை ஒன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றுப் பிற்பகல் இரு யானைகள் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டன.

இரண்டு நாட்களில் ஏழு யானைகள் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


அத்தோடு யானைகளின் உயிரிழப்பிற்கு யார் காரணம் ? என்ற கோணத்தில் வனவிலங்குத் துறை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யானைகள் உயிரிழப்பு குறித்து ஆராய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### விராட் கோலியின் பளுவைக் குறைக்க

# ரோகித் சர்மாவிடம் இருபது -20 கப்டன் பொறுப்பை கொடுக்கலாம்

## யுவராஜ்சிங் தெரிவிப்பு



மூன்று வகை கிரிக்கெட்டிலும் கப்டனாக இருக்கும் விராட் கோலியின் பளுவை குறைக்க இருபதுக்கு -20 கப்டன் பதவியை ரோகித் சர்மாவிடம் கொடுக்கலாம் என யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய ஒருநாள் மற்றும் இருபதுக்கு-20 கிரிக்கெட் அணியின் தொடக்க வீரராக களம் இறங்கி விளையாடி வரும் ரோகித் சர்மா, ஐபிஎல் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். இவரது தலைமையில் மும்பை இந்தியன்ஸ் மூன்று முறை சம்பியன்ஸ் பட்டம் வென்றது.

இதனால் அவரை கப்டனாக நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துக் கொண்டே இருக்கிறது. இந்நிலையில் இருபதுக்கு- 20 கிரிக்கெட்டிற்கு ரோகித் சர்மாவை கப்டனாக நியமிக்கலாம் என யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

ரோகித் சர்மா குறித்து யுவராஜ் சிங் கூறுகையில் "முன்னதாக ஒருநாள் மற்றும் டெஸ்ட் என இரண்டு வகை கிரிக்கெட் முறைதான் இருந்தது. இதனால் ஒரே கப்டன் என்பது சரியானதாக இருந்தது. தற்போது மூன்று வகை கிரிக்கெட் இருக்கிறது. விராட் கோலி வேலைப்பளு அதிகம் என்று உணர்ந்தால், மற்றொருவரிடம் இருபதுக்கு-20 அணி கப்டன் பொறுப்பை கொடுக்க முயற்சி செய்யலாம். ரோகித் சர்மா மிகவும் வெற்றிகரமான கப்டன்.

விராட் கோலியின் வேலைப்பளுவை அணி நிர்வாகம் எப்படி எடுத்துக் கொள்ள போகிறது என்று எனக்குத் தெரியாது. அவர்கள் இருபதுக்கு-20-யில் ஏதாவது செய்ய விரும்பினால், அவர்கள் எதிர்காலத்தில் எப்படி செல்ல இருககிறார்கள் என்பதை பொறுத்தது. விராட் கோலி சிறந்த பேட்ஸ்மேன். அவரது வேலைப்பளுவை எப்படி நிர்வகிப்பார்?. இதுகுறித்து அணி நிர்வாகம்தான் முடிவு செய்ய வேண்டும்" என்றார். (ம)

# சரியான நேரம் வரும் போது டோனி தனது முடிவை அறிவிப்பார்

## தவான்



இன்றியமையாத தருணங்களில் பல முக்கிய முடிவுகளை எடுத்தவர் டோனி. அவரது ஓய்வு முடிவை அவரிடமே விட்டு விடுங்கள் என இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரரான தவான் தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பை அரையிறுதியில் நியூசிலாந்து அணிக்கு எதிரான தோல்விக்கு பின் மிகப் பெரிய விவாதமாக இருப்பது டோனி எப்போது ஓய்வு பெறுவார் என்பது தான். அதன் பிறகு கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஆட்டங்களில் டோனி இடம் பெறவில்லை. சமீபத்தில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நடைபெற்ற ஆட்டங்களிலும் டோனி இடம்பெறவில்லை.

ஓய்வு முடிவு குறித்து இது வரை எங்களிடம் டோனி எதுவும் கூறவில்லை என இந்திய அணியின் கப்டன் விராட் கோலி ஒரு முறை தெரிவித்தார். நான் ஓய்வு பெற வேண்டும் என்று நிறைய பேர் விரும்புகிறார்கள் என டோனியே ஒரு முறை வெளிப்படையாக கூறியிருந்தார்.

ராணுவ சேவையில் மிகுந்த ஈடுபாடு காட்டியதால் கடந்த 2011-ம் ஆண்டு அவருக்கு ராணுவம் சார்பில் கவுரவம் அளிக்கப்பட்டது. அதன் காரணமாக ராணுவ பணிகளில் ஈடுபட்டார். ஜூலை 31 முதல் ஆகஸ்ட் 15 வரை காஷ்மீரில் உள்ள 106 டி ஏ பட்டாலியன அணியில் சேர்ந்து டோனி ரோந்து பணிகளில் ஈடுபடுத்தப்பட்டார்.

இந்நிலையில், டோனியின் ஓய்வைப் பற்றி அவரே முடிவு எடுப்பார் என இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரரான தவான் தெரிவித்துள்ளார்.

"டோனி நீண்ட காலமாக இந்திய அணிக்காக விளையாடி வருகிறார், அவர் எப்போது ஓய்வு பெற வேண்டும் என்பது அவருக்கு தெரியும் என்று நான் நினைக்கிறேன். இது அவருடைய முடிவாக இருக்க வேண்டும். அவர் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் இந்திய அணிக்காக இன்றியமையாத தருணங்களில் பல முக்கியமான முடிவுகளை எடுத்துள்ளார். நேரம வரும்போது அவர் தனது ஓய்வை அறிவிப்பார் என்று நான் நம்புகிறேன். அணியின் ஒவ்வொரு வீரரின் திறனையும் மேம்படுத்துதில் டோனியை விட சிறந்தவர்கள் யாரும் இல்லை" என தவான் கூறினார். (ம)

# ரக்பி உலகக்கிண்ணத்தொடர் வெற்றியை ருசித்தது ஜப்பான்



இரசிகர்களை உச்ச விறுவிறுப்பில் ஆழ்த்திவரும் ரக்பி உலகக் கிண்ண தொடர், தற்போது ஜப்பானில் நடைபெற்று வருகின்றது.

9ஆவது அத்தியாயமாக நடைபெற்று வரும் இத்தொடரில், தற்போது முதல் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற போட்டியொன்றில், பலம் பொருந்திய அயர்லாந்து அணியும், தொடரை நடத்தும் ஜப்பான் அணியும் களத்தில் முட்டி மோதிக் கொண்டன.

எதிர்பார்ப்புக்கு மத்தியில் குழு ஏ பிரிவில் ஷிசுயோகா விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், அயர்லாந்து அணிக்கு ஜப்பான் அணி, கடும் நெருக்கடி கொடுத்தது.

அயர்லாந்து அணிக்கு இறுதி வரை விட்டுக்கொடுக்காமல், சளைக்காமல் விளையாடிய ஜப்பான் அணி, 19-12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

# கொரியா ஓபன் பட்மின்ரனில் அரையிறுதியில் காஷ்யப் தோல்வி



கொரியா ஓபன் பட்மிண்டனில் நேற்று நடைபெற்ற அரையிறுதி போட்டியில் ஜப்பான் வீரர் கென்டோ மோமோட்டோவிடம் இந்திய வீரர் காஷ்யப் தோல்வியடைந்து வெளியேறினார்.

கொரியாவில் உள்ள இன்செயோனில் கொரியா ஓபன் பட்மிண்டன் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்திய வீரர் காஷ்யப் பாருபல்லி, 2 முறை உலக சம்பியனும், நம்பர் வன் வீரருமான ஜப்பானின் கென்டோ மோமோட்டாவை எதிர்கொண்டார்.

காஷ்யப் முதல் செட்டை 13-21 என இழந்தார். இரண்டாவது செட்டிலும் ஜப்பான் வீரரின் ஆதிக்கம் தொடர்ந்தது. இதையடுத்து, 15 -21 என்ற கணக்கில் காஷ்யப் தோல்வியடைந்து வெளியேறினார்.

# ஆதரவு இருந்திருந்தால் இன்னொரு உலகக் கிண்ணத்தில் ஆடியிருப்பேன்

## யுவராஜ்சிங் உருக்கம்



இந்திய கிரிக்கெட் அணி நிர்வாகம் எனக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து இருந்தால் இன்னொரு உலகக்கிண்ண போட்டியில் விளையாடி இருப்பேன் என்று யுவராஜ் சிங் ஆதங்கம் தெரிவித்தார்.

2007-ம் ஆண்டு 20 ஓவர் உலக கோப்பை மற்றும் 2011-ம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தவர் யுவராஜ் சிங். 2011-ம் ஆண்டு உலக கிண்ணப் போட்டிக்கு பிறகு புற்றுநோய் பாதிப்புக்கு சிகிச்சை பெற்று களம் திரும்பிய யுவராஜ் சிங் 2017-ம் ஆண்டு ஜூன் மாதத்துக்கு பிறகு அணியில் சேர்க்கப்படாததால் கடந்த ஜூன் மாதம் கிரிக்கெட்டில் இருந்து விடை பெற்றார். இந்த நிலையில் யுவராஜ் சிங் தனியார் சேனலுக்கு அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது:-

2011-ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிக்கு பிறகு இன்னொரு உலக கிண்ணப் போட்டியில் என்னால் விளையாடி இருக்க முடியும். இந்திய அணி நிர்வாகத்தில் இருந்தவர்களோ? என்னை சுற்றி இருந்தவர்களோ? எனக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து இருந்தால் நான் மேலும் ஒரு உலக கோப்பை போட்டியில் விளையாடி இருக்கலாம். நான் ஆடிய ஆட்டங்கள் அனைத்தும் எனது சொந்த முயற்சியில் நடந்தவை யாகும். எனக்கென்று ஒருபோதும் யாரும் அரணாக இருந்தது கிடையாது.

2017-ம் ஆண்டு நடந்த சாமபியன்ஸ் கிண்ணப் போட்டியில் 2 ஆட்டத்தில் ஆட்ட நாயகன் விருது பெற்றேன். இலங்கை தொடருக்கு முன்பு காயம் ஏற்பட்டதால் அதில இருந்து மீண்டு வர தயாராகி கொண்டு இருந்த நிலையில் அணியில் இருந்து நீக்கப்படுவேன் என்று நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை.

என்னால் 'யோ-யோ' தகுதி தேர்வில் தேர்ச்சி பெற முடியாது என நினைத்தார்கள். ஆனால் நான் 36 வயதில் யோ-யோ தகுதி தேர்வுக்கு தயாராகி அதில் தேர்ச்சியும் பெற்றேன். பிறகு என்னை உள்ளூர் போட்டியில் விளையாடும் படி சொன்னார்கள். அதன் பிறகு என்னை எளிதாக நிராகரித்து விட்டார்கள். 15 ஆண்டுகளுக்கு மேல் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையாடிய ஒரு வீரரை மரியாதை நிமித்தமாக அழைத்து சூழ்நிலையை விளக்கி கூறாமல் அணியில் இருந்து நீக்கியதை துரதிர்ஷ்டமாக கருதுகிறேன்.

முன்பு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி மட்டுமே இருந்தது. அதற்கு ஒருவரே கப்டன பொறுப்பை வகித்தது பொருத்தமானதாக அமைந்தது. தற்போது 20 ஓவர் போட்டி உள்பட மூன்று வடிவிலான போட்டிகள் நடைபெறுகிறது. எல்லா வகையிலான போட்டிகளுக்கும் கப்டனாக இருப்பதை விராட்கோலி அதிக சுமையாக கருதினால் 20 ஓவர் போட்டிக்கு வேறு ஒருவரை கப்டனாக கொண்டு வர முயற்சி செய்யலாம். 20 ஓவர் போட்டியை பொறுத்தமட்டில் ரோகித் சர்மா மிகவும் வெற்றிகரமான கப்டன். இந்த விஷயத்தில் அணி நிர்வாகம் தான் முடிவெடுக்க முடியும்.

பேட்டிங்கில் 4-வது வரிசையில் களம் இறங்கக்கூடிய அளவுக்கு விஜய் சங்கர், ரிஷாப் பண்ட் ஆகியோருக்கு போதிய அனுபவம் இல்லை. தினேஷ் கார்த்திக் அனுபவம் வாய்ந்த வீரர். அவரை வெளியில் வைத்து விட்டு உலகக் கிண்ண அரைஇறுதியில் திடீரென களம் இறக்கினார்கள். ஒரு வீரரிடம் இருந்து சிறப்பான ஆட்டத்தை வெளிக்கொண்டுவர வேண்டும் என்றால் அணியில் வீரரின் இடத்துக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும். அணியில் இடம் பெறுவதில் நிச்சயமற்ற தன்மை இருந்தால் ஒரு வீரரால் ஒருபோதும் சிறப்பாக செயல்பட முடியாது. அது தான் இந்த உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற முடியாமல் போனதற்கு முக்கிய காரணமாகும்.

இவ்வாறு யுவராஜ் சிங் கூறினார்.


# போதைப்பொருட்களைக் கண்டறிவதற்கான அதி நவீன உபகரணத்தை வழங்கியது சீனா

(கொழும்பு)

போதைப்பொருட்களை கண்டறிவதற்கான அதிநவீன உபகரணத்தை சீன தூதுவர் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

750 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க, போதைப்பொருட்கள் மற்றும் வெடிபொருட்களை கண்டறிவதற்கான அதிநவீன உபகரணங்களை சீன அரசாங்கம் இலங்கைக்கு அன்பளிப்பு செய்ததுடன், அவற்றை சீனத் தூதுவர் Chang Xueyuan நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்தார்.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கமைய இந்த அதிநவீன உபகரணம் சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டதுடன், இத்தகைய நவீன உபகரணங்



களை போதைப்பொருள் தேடுதல்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக இலங்கை பாதுகாப்பு துறையினர் உபயோகிக்கும் முதலாவது சந்தர்ப்பம் இது வாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

05 மீற்றர் தூரத்திற்குள் இருக்கும் நபர்கள் அல்லது பொருட்களுக்கிடையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிபொருட்கள் மற்றும் போதைப்பொருட்களை தன்னிச்சையாக இனங்கண்டு கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட விசேட ரோபோ இயந்திரங்கள் மூன்றும் இதற்குள் உள்ளடங்குகின்றன. இந்த ஒரு இயந்திரத்தின் பெறுமதி 85.5 மில்லியன் ரூபாவாகும்.

நபர்களால் உடலில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்களை தன்னிச்சையாக இனங்காண்பதற்காக தயாரிக்கப்பட்ட 90.5 மில்லியன் ரூபா பெறுமதியான Explosive Detector இயந்திரங்கள் மூன்றும் இந்த இயந்திரங்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பயணப் பொதிகள் உள்ளிட்ட பொதிகளில் மறைத்து வைக்கப்படும் வெடிபொருட்களையும் போதைப் பொருட்களையும் இனங்காணும் விசேட உபகரணமான X-Ray Security Inspection System ஐம்பதும் இவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஒரு இயந்திரத்தின் விலை 4.2 மில்லியன் ரூபா பெறுமதியைக் கொண்டுள்ளதுடன், அவற்றின் மொத்தப் பெறுமதி 210.5 மில்லியன் ரூபாவாகும்.

ஆயுதங்களை உடனடியாக இனங்காணும் ஆற்றலுடைய 25 Walk Through Safety Inspection Gates இயந்திரங்களையும் சீன அரசாங்கம் இலங்கைக்கு பெற்றுக்கொடுத்துள்ளதுடன், அவற்றின் மொத்தப் பெறுமதி 6.5 மில்லியன் ரூபாவாகும்.

வாகனங்களை ஸ்கான் செய்து அவற்றில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்களை பரிசோதிக்கும் அதிகாரிகள் அவற்றை உடனடியாக இனங்காண்பதற்கான ஆற்றலுடைய 3.2 மில்லியன் ரூபா பெறுமதியுடைய 25 Hand Held Vehicle Scanners இயந்திரங்களும் இவற்றுள் உள்ளடங்குகின்றன.

நபர்களிடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களை உடனடியாக இனங்காணும் ஆற்றலுடைய 2.75 மில்லியன் ரூபா பெறுமதியுடைய 500 Hand Held Metal Detector இயந்திரங்களும் பாதுகாப்பு துறையின் பயன்பாட்டிற்காக சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டன.

சீன அரசாங்கத்தின் விசேட தூதுக்குழுவினரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஜீவானந்தன் பிரகாஷ்

(திதி:28 புரட்டாதி அமாவாசை)

தோற்றம் 28 . 04 . 1988

மறைவு 29 . 09 . 2008



11 ஆண்டுகள் ஓடி
மறைந்தாலும்
ஆறிடுமோ உமது
நினைவுகள்
எழுதி வைத்த ஓவியம்
போல் இருக்கின்றாய்
என் மனதில்
ஆற்றொணாத் துயரமது
வாட்டுதைய்யா என்னை
என் உயிர்
உள்ளவரை என்றும்
உன் நினைவுடனே...

(451)

20 A, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் உன் நினைவுடன் உயிர் வாழும்
அம்மம்மா M.சரோஜினிதேவி


# தற்கொலைதாரியின் உடற்பாகங்கள் பலத்த பாதுகாப்புடன் புதைப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட நசார் மொஹமட் ஆசாத்தின் உடற்பாகங்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புதிய காத்தான்குடி பெரிய ஜூம்ஆ பள்ளிவாசல் மையவாடியில் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் புதைக்கப்பட்டன.

குறித்த தற்கொலை குண்டுதாரியின் தலை மற்றும் உடற்பாகங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த உடற்பாகங்களை அரச செலவில் புதைக்குமாறு அரசாங்க அதிபருக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டிய மருத்துவ குறிப்புக்கள்

### தேன் தடவினால் முடி நரைக்குமா?

தேன் தடவினால் தலையில் உள்ள முடிகளெல்லாம் நரைத்துவிடும் என்று பலரால் நம்பப்படுகிறது. ஆனால் இது தவறான தகவல் என்று டாக்டர்கள் கூறுகின்றனர். முடி நரைப்பது அவரவர் மரபணுக்களைப் பொறுத்த விஷயம்.

முடியில் உள்ள "மெலனின்" என்னும் நிறமியால் தான் நமது தலை முடி கறுப்பாக உள்ளது. மெலனின் உற்பத்தி குறைந்து விட்டால் முடி நரைக்கத் தொடங்கும். மெலனின் உற்பத்தி தொடர்வதும் நிற்பதும் மரபணு அமைப்பு மற்றும் சத்துக் குறைவு ஆகியவற்றைப் பொறுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## இராசி பலன்

29.09.2019

புரட்டாதி 12, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பிரதமை முன்னிரவு 10.27 மணிவரை
அத்தம் முன்னிரவு 9.51 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
நவராத்திரி விரதாரம்பம், அமிர்தசித்தம்

வளவன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
புரட்டாதி, உத்திரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| சனி, கேது | குரு | சூரி, சந் | ராகு |

**மீனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் வருகையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மேடம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களின் ஆற்றலும் ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்:** அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள், அருமையான நாள்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிபுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், உறவினர், நண்பர்களுடன் சிறு முரண்பாடுகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.

**கடகம்:** உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** ஏட்டிக்குப்போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பேச்சில் இனிமை பிறக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு:** செய்தொழில் முன்னேற்றத்திற்காக அதிகம் பாடுபடுவீர்கள், ஆரோக்கியமான நாள், தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும் நாள்.


**விருச்சிகம்:** வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய வேண்டி வரலாம், மற்றவர்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

# சைவ ஆசிரிய கலாசாலையை அரசு அமைக்காவிட்டால் துர்க்காதேவி தேவஸ்தானம் சகல ஏற்பாடுகளையும் செய்யும்

## கலாநிதி.ஆறு.திருமுருகன் உறுதி



(யாழ்ப்பாணம்)

யாழில் சைவசமயத்தின் ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாத்த சைவ ஆசிரிய கலாசாலையை அரசாங்கம் மீள அமைத்துத் தராவிட்டால் அதற்கான சகல ஏற்பாடுகளையும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக அத் தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் உறுதிபடத் தெரிவித்தார்.

யாழ்.இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற அறநெறி விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிற மதங்களுக்கு முன்னுதாரணமாக இருந்த எமது சைவ சமயத்தைப் பாதுகாப்பதற்கு தகுதி வாய்ந்த சைவ ஆசிரிய கலாசாலை ஆசிரியர்களை மீள உருவாக்குவதற்கு காணியையோ அல்லது கட்டட வசதியையோ வழங்க நாம் தயாராக இருக்கின்றோம். அதற்கான சகல ஏற்பாடுகளையும் துர்க்காதேவி தேவஸ்தானம் முன்னின்று செயற்படுத்தும்.

இலங்கையில் இந்து மதத்திலும் பார்க்க இஸ்லாம்.பௌத்தம் ஆசிய இரு மதங்களும் தமது மதம் சார்ந்த கல்வியைப் போதிப்பதற்கு பலதரப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே.

இஸ்லாம் மதத்தை எடுத்துக் கொண்டால் தமது அரபுக் கல்வியைப் போதிப்பதற்காக க.பொ.த உயர் தரத்தில் மூன்று பாடத்தில் சாதாரண (எஸ்) சித்தியடைந்தவர்களை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியப் பாடநெறிக்காக அனுமதி வழங்கப்படுகிறது.

அதுமட்டுமல்லாது கடந்த காலங்களில் முஸ்லிம் அமைச்சராக இருந்த ஒருவர் அரேபிய நாடுகளிடமிருந்து பெருந்தொகைப் பணத்தைப் பெற்று அரபு மொழிக்கான தனியார் பல்கலைக்கழகத்தையே உருவாக்கியுள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறையில் கற்கும் மாணவர்களின் தொகை மிகக் குறைவாகவுள்ளது.

இந்நிலையில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத இந்து அறநெறி சார்ந்த பாடங்களில் ஆர்வமுடையவர்கள் இந்து நாகரிகத்தில் எம்.ஏ.பட்டத்தை நிறைவு செய்வதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தில் மட்டும் 16 பேர் முன்பட்டப்படிப்பு எதுவும் இல்லாமல் இந்து நாகரிகத்தில் எம்.ஏ.பட்டம் முடிப்பதற்காக இணைக்கப்பட்டுள்ளனர்.

இதனை தற்போது அறநெறிப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தமக்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் சமய பாடத்தைப் போதிப்பதற்காக கல்வி அமைச்சால் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படவுள்ள நிலையில் அவர்களுக்கான ஆசிரியர் நியமனம் வாய்ப்பாக அமையும்.

எனவே எமது சமயத்தையும் அதனோடு இணைந்த பண்பாட்டு கலாசார விழுமியங்களை சிறந்த முறையில் எதிர்காலச் சந்ததியினருக்குக் கொண்டு செல்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## கருத்தாய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

அரசியல் தீர்வை வலியுறுத்துவதற்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் "தெற்கு தலைமைக்கான தேர்தலும் தமிழர்களின் உபாயமும்" எனும் தலைப்பில் கருத்தாய்வரங்கு இன்று 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில், யாழ்.நல்லூர் கோவில் வீதி, நல்லூர்பவன் விருந்தினர் விடுதியில் என். இன்பன் தலைமையில் இடம் பெறும்.

இதில், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியற்றுறை விரிவுரையாளர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் கருத்துரை வழங்குவார். (இ-5)




### அங்கஜன் நிதியொதுக்கீடு; சுகிர்தனுக்கு அழைப்பு

## சனசமூக நிலையத் திறப்பு விழா இறுதி நேரத்தில் இடைநிறுத்தம்



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட வள்ளுவர்புரம் திருவள்ளுவர் சனசமூக நிலையத் திறப்பு விழா நேற்று முன்தினம் மாலை இறுதி நேரத்தில் இடைநிறுத்தப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, 2017 ஆம் ஆண்டு குறித்த திருவள்ளுவர் சனசமூக நிலையத்துக்கான கட்டட நிர்மாணப் பணிக்காக 20 இலட்சம் ரூபாய் நிதி பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் ஒதுக்கப்பட்டது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியில் கட்டி முடிக்கப்பட்ட குறித்த சனசமூக நிலையம் நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனுக்கு அழைப்பு விடுக்கப்படாமல் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சுகிர்தனை பிரதம விருந்தினராக முன்னிலைப்படுத்தி அழைப்பிதழ் அச்சிடப்பட்டு திறப்பு விழா இடம்பெறயிருந்தது.

இந்நிலையில் இறுதி நேரத்தில் குறித்த திறப்பு விழா நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## சிறுவர், முதியோர் தின சேவை நயப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சி.சி.த.க பாடசாலையின் சிறுவர் , முதியோர் தின, சேவை நயப்பு நாளை மறுதினம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினர்களாக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியர், தேச கீர்த்தி ஞான திருக்கேதீஸ்வரன் மற்றும் திருமதி. தாட் சாயினி திருக்கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## காரணமின்றி கடமைக்குச் செல்லாத கால்நடை வைத்தியர்கள் மீது புகார்

(யாழ்ப்பாணம்)

கால்நடை வைத்தியர்கள் கடந்த 3 நாட்களாக கால்நடை வைத்திய நிலையங்களுக்கு கடமைக்கு வரவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டது.

வடமாகாணச் சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குட்பட்ட கால்நடை உற்பத்தி பணிமனையின் கீழுள்ள பிரதேச கால்நடை வைத்திய நிலையங்களிலேயே வைத்தியர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

குறித்த வைத்திய நிலையங்களுக்கு தமது கால்நடைகளுக்கான மருத்துவ உதவிகளையும் ஆலோசனைகளையும் பெறச் செல்பவர்களுக்கு குறித்த வைத்திய நிலையத்திற்கு என்ன காரணத்துக்காக வைத்தியர் வரவில்லை எனத் தெரிவிப்பதற்குக் கூட அவ்வைத்திய நிலையங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தயக்கம் காட்டுவதாகத் தெரிவித்தனர்.

எனவே முன்னறிவிப்புக்கள் எதுவுமின்றி மக்களை சிரமப்படுத்தாமல் உரிய தகவல்களை வழங்குவது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கடமையாகும் என சமூக ஆர்வலர்கள்சுட்டிக்காட்டினர். (இ-5-10)

## நிர்வாகசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச கலாசார அதிகார சபையின் நிர்வாக சபை கூட்டம் நாளை மறுதினம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் என நல்லூர் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் வேதநாயகம் தெரிவித்தார். (இ-10-217)





சர்வதேச சிறுவர் பணியக அனுசரணையுடன் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

## அனுமதியின்றி காட்சிப்படுத்தப்படும் பதாகைகள் அறிவித்தலின்றி அகற்றப்படும் - ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு மாநகர சபை எல்லைக்குள் அரசியல் கட்சிகளால் விளம்பரப் பதாகைகளைக் காட்சிப்படுத்துவதாயின் யாழ்.மாநகர சபையின் முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் அனுமதி பெறப்படாத பதாகைகள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி சபையால் அகற்றப்படும் என்பதையும் யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்தார். (இ-5)

# தவிசாளர் ஒத்திவைத்த அமர்வை உப தவிசாளர் தொடர முடியுமா?

## உறுப்பினர் கேள்வி

(சாவகச்சேரி)

தவிசாளரால் ஒத்தி வைக்கப்பட்ட அமர்வை உப தவிசாளர் தொடர முடியுமா? என சாவகச்சேரிப் பிரதேசசபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் குகானந்தன் கேள்வி எழுப்பினார்.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரிப் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இக் கேள்வியை எழுப்பினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஓகஸ்ட் மாத அமர்வானது தவிசாளரால் ஒத்திவைக்கப்பட்டது.

ஆனால் பின்னர் அதே அமர்வின் தொடர்ச்சிக்கு உப தவிசாளர் தலைமை தாங்கினார்.

ஒத்தி வைத்த தவிசாளரே அமர்வைத் தொடர வேண்டும். குறித்த அதிகார கையளிப்பை சபையிலுள்ள சில உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

அவ்வாறு அதிகார கையளிப்பு இடம்பெற வேண்டுமானால் சபையில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாத அமர்வின் போது உப்பள விவகாரம் தொடர்பாக தவிசாளருக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து சபை இடைநடுவே ஒத்தி வைக்கப்பட்டது.

இருப்பினும் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்ட சபைக் கூட்டத்தைத் தொடர்வதற்கு உப தவிசாளருக்கு சந்தர்ப்பம் வழங்கியிருந்ததாகத் தவிசாளர் கூறியமை குறிப்பிடத்தக்கது. (இ-5-30)


# S.V.M Fuel Mart




173 & 175 பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலியில்அமைந்துள்ள எமது

S.V.M

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 24 மணி நேரமும் எமது

Litro Gas

சமையல் எரிவாயுவினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு:
021 222 2041
021 221 2550
077 253 3223

LITRO GAS Your Trusted Energy Partner (சி-7728)



### மனித உரிமை தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி
### Certificate Course for Human Rights

பிரிவு IV ஆரம்பமாகிறது
'மனித உரிமைகள் பற்றிய அறிவு உடையவரே உன்னதமான சமூகப் பணியாளராக முடியும்'

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நடத்தும் மனித உரிமைகள் தொடர்பான குறுங்கால சான்றிதழ் கற்கைநெறி

யாழ்.மாவட்டத்தில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளை ஊக்குவித்தல், வலுப்படுத்துதல் மற்றும் ஆளணியை அதிகரிப்பதற்கான பயிற்சி நெறி.

**யார் விண்ணப்பிக்க முடியும்:**

1. மனிதவுரிமைச் செயற்பாட்டில் அக்கறையுள்ள அரச உத்தியோத்தர்கள்.
2. தொழிலாளர் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் தொழிற் சங்கத்தினர்.
3. சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள்.
4. அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள்/ தொண்டர்கள்.
5. சமூக சேவையில் ஆர்வமுள்ள இளைஞர்கள், யுவதிகள்.
6. பல்கலைக்கழக மாணவர்கள்.

இடம்: யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், 76, கோவில் வீதி, யாழ்ப்பாணம்
காலம் : ஐப்பசி 19 பங்குனி 2020 வரை. (04 மாதங்கள் - 80 மணித்தியாலங்கள்)
நேரம் : சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை
முழுப்பயிற்சிக் கட்டணம் ரூபா 6500/=

முன்னணி மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சட்டத்துறை சார்ந்தோர் மற்றும் மனிதவுரிமை அமைப்புக்களின் பணியாளர்களால் பயிற்சிகள் நடத்தப்படும். ஒரு பிரிவில் முப்பது பேர் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். தங்கள் சுயவிபரங்களை 15.19.2019ஆம் திகதிக்கு முன்னர் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம். பயிற்சி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: திரு.வரதராஜா முருகதாஸ்
கௌரவ தலைவர் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், 76, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3668 (சி-7732)



**காணி தேவை**

நல்ல சூழலில் 4 பரப்புக்குட்பட்ட அளவில் கட்டுவன், தெல்லிப்பளை மாவிட்டபுரம், புன்னாலைக்கட்டுவன், வயாவிளான், ஏழாலை பகுதிகளில் எதிர்பார்க்கப்படுகின்றது. (394)

தொ.இ. :-077 669 2415

**மணமகன் தேவை**

28 வயது பட்டதாரி இந்து கௌரவ குடும்ப, அரச சேவையில் உள்ள மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. (394)

தொ.இ.: 076 143 4393


### சில்லாலை வடக்கு-தெற்கு கமக்கார அமைப்பினால் வயல் உரிமையாளருக்கான இறுதி அறிவித்தல்

07.10.2019 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் கமநல சேவை நிலையத்தின் அரச அதிகாரிகள் வருகை தந்து உறுதிப்படுத்த இருப்பதனால் தும்பளப்பாய் வயல் வெளியில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் வயல் உரிமையாளர்கள் வந்து தமது நிலத்தினை உறுதிப்படுத்தவும்.

✦தவறும் பட்சத்தில் நிலம் கமநல திணைக்கத்தினால் பொறுப்பு கேட்கப்படும்.

எதிர்காலத்தில் இது தொடர்பான பிரச்சினைகளுக்கு சில்லாலை வடக்கு-தெற்கு கமக்கார அமைப்பு பொறுப்பு அல்ல.

இங்ஙனம்
நிர்வாகம்.

# ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகரமாக நடத்த முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குக

## பொலிஸாருக்கு ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இவ்வாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு ஆலோசனை வழங்கியதாக அவரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

எந்தவிதமான குற்றச்சாட்டுக்களுக்கும் உள்ளாகாத வகையில், பக்கச்சார்பற்ற முறையிலும் சுயாதீனமான முறையிலும் கடமைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.



பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி விக்கிரமரத்ன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீக்கிரை!

## விசமிகள் நாசவேலை



கனகராயன்குளம் தெற்குப் பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாத விசமிகளால் நேற்று அதிகாலை தீக்கிரையாக்கப்பட்டது. வீட்டார் உறங்கிக் கொண்டிருந்தபோது இனம்தெரியாத நபர்கள் இந்த டிஸ்கவர் ரக மோட்டார் சைக்கிளை எரித்தனர். வீட்டார் காலையில் எழுந்து பார்த்த போது மோட்டார் சைக்கிள் தீயில் முற்றாக எரிந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்ததுடன், கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இந்த முறைப்பாட்டிற்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-299)

## கோத்தாவுக்கு வெற்றி நிச்சயம்

# ஐ.தே.கவின் உறுப்பினர்களே சஜித்தை வீழ்த்துவது உறுதி

## கூட்டு எதிரணி கூறுகிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை அக்கட்சியின் உறுப்பினர்களே வீழ்த்துவார்கள். தமது ஆதரவு எத்தரப்பினருக்கு என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 30 ஆம் திகதி இடம்பெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் எனக் கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,



2015 ஆம் ஆண்டு அன்னப் பறவைக்கு வாக்களித்து நாட்டு மக்கள் செய்த தவறை மீண்டும் செய்யமாட்டார்கள். பொதுவேட்பாளராக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவை களமிறக்கியே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலையும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பொதுத்தேர்தலையும் வெற்றி கொண்டார்.

இம்முறையும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி தனது அரசியல் பயணத்தைத் தொடரலாம் என்று பிரதமர் ரணில் பாரிய முயற்சிகளை மேற்கொண்டார். கட்சியின் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் தமது அரசியல் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு அமைச்சர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு வழங்கினர்.

ஐக்கிய தேசியக் கட்சி இக்கட்டான நிலைமைக்குச் சென்றதைத் தொடர்ந்தே பிரதமர் ரணில் பல நிபந்தனைகளுடன் ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை அறிவித்துள்ளார். நிபந்தனைகளுக்கு தான் அடிபணியவில்லை என்று அமைச்சர் சஜித் குறிப்பிடுகின்றார். மறுபுறம் நிபந்தனைகளின் பிரகாரமே வேட்பாளர் தெரிவு இடம்பெற்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் குறிப்பிடுகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை அக்கட்சியின் உறுப்பினர்களே வீழ்த்துவார்கள். நிச்சயம் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெறுவார். பொதுத்தேர்தலைத் தொடர்ந்து பிரதமர் ரணில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகிப்பார். ஆளும் தரப்பின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் சஜித்தின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்க தெரிவிக்கையில்,

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுஜன பெரமுனவுடன் கூட்டணியமைத்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும். அன்னப்பறவை சின்னத்திற்கு 2015 ஆம் ஆண்டு வாக்களித்து வடக்கு-கிழக்கு உட்பட மலையகத் தமிழ் மக்கள் பெற்றுக்கொண்டது ஏமாற்றங்களேயாகும்.

ஏமாற்று அரசியல்வாதிகளின் கருத்துக்களுக்கு கவனம் செலுத்தாமல் தமிழ் மக்கள் தனித்து அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுக்க வேண்டும். நாம் போலியான வாக்குறுதிகளை ஒருபோதும் வழங்க மாட்டோம் என மேலும் தெரிவித்தார். (இ-7)

# துறைமுக வசதிகளை மேம்படுத்தி இலங்கை சர்வதேச நாடுகளுடன் போட்டி போட வேண்டும் -சாகல

(கொழும்பு)

இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் கொள்கலன் போக்குவரத்துக்கான இடைத்தரிப்பிட துறைமுக வசதிகளை வழங்குவதில் போட்டி போட்டுக்கொண்டு செயற்படுகின்றன.

இவ்வாறான வசதிகளை வழங்குவதில் இலங்கையின் துறைமுகம் முன்னேற்றமடைய வேண்டுமானால் அவற்றின் செயற்திறனை அதிகரிக்க வேண்டும் என்று துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

சர்வதேச சமுத்திரவியல் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் மஹாபொல துறைமுகங்கள் மற்றும் சமுத்திரவியல் கற்கை நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாடசாலை மாணவர்



களுக்கான தெளிவூட்டல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வாரம் சமுத்திரவியல் வாரமாக அறிவிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு கப்பற்றுறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்துக்கொள்ள வேண்டியது விசேட தேவையாக மாறியுள்ளது.

ஆகவே பெண்களை கப்பல் துறைக்குள் இணைத்துக்கொள்வதில் விசேட கவனம் செலுத்தி வருகிறோம். இவ்வாறு துறைமுகம் மற்றும் கப்பற்றுறையில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிப்பது குறித்து இன்று சர்வதேசமும் முக்கிய அவதானம் செலுத்தியுள்ளது.

துறைமுகம் மற்றும் கப்பற்றுறைசார் தொழில்களில் பெண்களால் பங்குபற்ற முடியாது என்ற நிலைப்பாடே எமது சமூகத்தில் இருந்து வருகிறது.

ஆனால் எமது நாட்டில் இன்று துறைமுகம் மற்றும் கப்பல் துறைசார்ந்த தொழில்களில் அநேகமான பெண்கள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 280 | 320 |
| தக்காளி | 140 | 140 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| கோவா | 130 | 120 | 120 | 140 |
| கரட் | 100 | 120 | 120 | 120 |
| பூசணி | 80 | 60 | 60 | 80 |
| புடோல் | 140 | 130 | 80 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 140 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 350 | 300 | 240 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 30 | 140 |
| பயற்றங்காய் | 250 | 200 | 200 | 160 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 80 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 160 | 160 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 120 | 200 | 100 | 120 |
| போஞ்சி | 250 | 200 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | 100 |
| கீரை-1பிடி | 80 | 70 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40 | 20-40 |
| இராசவள்ளி | 300 | — | 220 | — |
| வெங்காயப்பூ | 250 | 20 | 160 | 200 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 35 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 40 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 60 | 60 |



**அருள்மிகு புற்றளைச் சித்திவிநாயகர் ஆலயம்**
**புற்றளை, புலோலி - 2019**

## ஆலய புனருத்தாரணப் பணி

புற்றளைச் சித்திவிநாயகரின் திருவருள் கொண்டு 05.09.2019 அன்று சுபவேளையில் குருக்களினால் ஆலய புனருத்தாரணப் பணிகள் 17 வருடங்களின் பின்பு ஆரம்பித்து வைக்கப்பட்டு அடியார்களின் ஒத்துழைப்புடன் இனிதே நடைபெற்று வருகின்றது.

பருத்தித்துறை பிரதேசசபை - புலோலி மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சினது அனுமதியின் படி நாம் புனருத்தாரணப்பணிகளை ஒருவருடகாலத்தில் நிறைவு செய்யத் திட்டமிட்டுள்ளோம். மஹா கும்பாபிஷேகத்தினை ஒருவருடகாலத்தினுள் நடாத்தவேண்டும் என்ற அடியார்களின் வேண்டுகோளிற்கு இணங்க பணிகள் விரைவாக நடைபெறுகின்றன.


உலகெங்கும் பரந்து வாழும் புற்றளையான் அடியார்களினை இப்பணியில் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். தங்களாலான நிதி, பொருள் மற்றும் சரீர உதவிகளை இப்பணி இனிதே நிறைவேற தந்துதவுவீர்களாக.

உங்கள் அன்பளிப்புக்களினை பரிபாலனசபைக் காரியாலயத்தில் வழங்கி பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும். நிதி உதவிகள் வங்கிக்கணக்கிற்கு வைப்பிலிடவும் வசதிகள் செய்துள்ளோம்.

மேலதிக விபரங்களுக்கு
K.B கதிர்காமு - தலைவர் 077 809 7352
V. லோகநாதன் - பொருளாளர் 077 915 0928

**புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயம்**
**பரிபாலன சபை, புலோலி.**

C-7735




# சஜித்திற்கு எஸ்.பி.நாவின்ன ஆதரவு



(கொழும்பு)
பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.நாவின்ன ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்தார்.

நேற்றுக் காலை நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினுடைய உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர். பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.நாவின்ன கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற அரசியல் நெருக்கடியின் போது மகிந்த தரப்பினருடன் இணைந்து செயற்பட்டார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வவுனியா வைத்தியசாலையின்

# தாதிய உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும்

## அத்தியட்சகர் நந்தகுமார் உறுதி

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கே.நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 2009 ஆம் ஆண்டு சுற்றறிக்கையின் பிரகாரம் தாதிய உத்தியோகத்தர்களின் ஓய்வு நேரக்கொடுப்பனவு மற்றும் ஓய்வு நேரக் கடமை தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் 2012 ஆம் ஆண்டு சில திருத்தங்களுடன் பின்னிணைப்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் அதே ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் மூலம் நிறுத்தப்பட்டது.

இதனால் வவுனியா பொது வைத்தியசாலை கணக்காளரால் சுற்றுநிருபத்தை மீறி தமது கொடுப்பனவுகள் குறைக்கப்படுவதாகத் தாதியர்கள் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இது தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி சுற்றுநிருபத்தின் அடிப்படையில் அவர்களின் கழிக்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்தியட்சகர் நந்தகுமார் மேலும் தெரிவித்தார். (இ-10)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2 ஆம் பாதம்<br>கி.பா: 38 ½ 7 இல் செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L கணனி விரிவுரையாளர், லண்டன்<br>எதிர்பார்ப்பு:சைவபோஷணம் மட்டும்<br>தொ.இ:B10085 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1 ஆம் பாதம்<br>கி.பா: 32 செவ். 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:Accountant<br>எதிர்பார்ப்பு: டாக்டர்,எஞ்ஞினியர், கணக்காளர்<br>தொ.இ:G/10112 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2 ஆம் பாதம்<br>கி.பா: 7 இல் செவ்<br>உயரம்: 180 cm<br>தகைமை/தொழில்:Industrial Product Definition Study வியாபாரம் (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ:B/10087 | பிறப்பு: 1991 இந்து<br>உயரம்: 5'5"<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1 ஆம் பாதம்<br>கி.பா: 8 இல் செவ்.<br>தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: எஞ்ஞினியர் அல்லது வேறு உயர் பதவி<br>தொ.இ:G/10114 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3 ஆம் பாதம்<br>கி.பா: 34<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Post man<br>எதிர்பார்ப்பு:வேலை பார்க்கும் பெண் விரும்பத்தக்கது.<br>தொ.இ:B/10088 | பிறப்பு: 1991இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2 ஆம் பாதம்<br>கி.பா: 2 4/3 சூரி.செவ். 10 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:பட்டதாரி (B.A (Hons) in Sociology (Special)<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி தொழில் புரிபவர்<br>தொ.இ:G/10115 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4 ஆம் பாதம்<br>கி.பா: 16<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: அரச திணைக்கள சாரதி<br>எதிர்பார்ப்பு:அரச அல்லது தனியார் உத்தியோகம்<br>தொ.இ:B/10095 | பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்:உத்திரட்டாதி 2ஆம் பாதம்<br>கி.பா: 29<br>உயரம்:153cm<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர் 2 பிள்ளைகள் உண்டு. வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/10117 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வா நியமனம்

# நாட்டிற்கு தாங்களே ஏற்படுத்திய ஒரு துன்பியல் பாதிப்பு

## உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பு சுட்டிக்காட்டு

(ஜொகனஸ்பேர்க்)

"சவேந்திர சில்வாவின் (இராணுவத் தளபதி) நியமனமானது நாட்டிற்கு தாங்களே ஏற்படுத்திக் கொண்ட ஒரு துன்பியல் பாதிப்பாக இருந்தது. கடந்த கால குற்றங்களுக்கு உண்மையான குற்றவியல் பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உண்மை மற்றும் நீதியைப் பெற்றுக் கொடுக்கவும், தற்போதும் இடம்பெற்றுவரும் சித்திரவதைகளை இல்லாமற் செய்வதற்கும் பாதுகாப்புச் சேவையில் மறுசீரமைப்பை ஏற்படுத்தவும் இலங்கையானது சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதைக் காண விரும்புகின்றோம்" என உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

அமைதி காக்கும் படையினராக இலங்கை இராணுவத்தினர் வெளிநாடுகளுக்குச் செல்வது இடைநிறுத்தப்பட்டிருப்பது பற்றிய ஐ.நாவின் அறிவிப்பு வந்திருப்பது நாட்டிற்கு ஒரு சோகமான நாள் ஆகும். இது அமைதி காக்கும் பணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் குற்றம்சாட்டப்பட்ட போர்க்குற்றவாளியான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத்தளபதியாக நியமிப்பதன் மூலம் தேர்தலுக்கான ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் ஜனாதிபதி மைத்திரியின்



நகர்விற்குக் கிடைத்த பதிலடி இதுவாகும்.

சவேந்திர சில்வா 2008-9 இல் இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப் பிரிவை வழிநடத்தினார். பொது மக்களுக்கு எதிரான கண்மூடித்தனமான மற்றும் வேண்டுமென்று நடத்தப்பட்ட தாக்குதல்கள், வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள், பாதுகாப்பு வலையங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களின் பாவனை போன்றவற்றில் அவரது படைகள் சம்பந்தப்பட்டிருந்தன என்பதை உறுதிப்படுத்துவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளன.

இது பொதுமக்களுக்கு இழப்புக்கள் மற்றும் காயங்கள் எனப் பேரழிவை ஏற்படுத்தியது. போர் முடிவடைந்து பத்து ஆண்டுகள் கடந்திருப்பினும் இலங்கையானது நிலைமாற்று நீதி திட்டத்திற்கு தனது ஈடுபாட்டைக் காட்டியிருப்பினும் இலங்கையின் அரசியல்வாதிகள் வெட்கப்படும் வகையில் சவேந்திர சில்வாவை ஒரு "போர் வீரன்" என அழைக்கின்றார்கள். இதன் விளைவான சிவில் போருக்குப் பின்னர் இணைந்து கொண்ட இளம் இராணுவ வீரர்கள் தற்போது அமைதி காக்கும் பணியில் இருந்து இடை நிறுத்தப்படுகின்றார்கள்.

ITJP ஆனது இலங்கையில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் பற்றிய அண்மைக் கால சம்பவங்களை ஆவணப்படுத்தி வருகின்றது.

கடந்த வருடம் உட்பட 2015 ஆம் ஆண்டிலிருந்து 79 இது போன்ற சம்பவங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

பல வருடங்களாக,ITJP இன் அதிகாரிகள் பாதுகாப்பு மற்றும் பொது அதிகாரிகளை ஆய்வுக்குட்படுத்தி வருகிறார்கள். இதற்காக தனித்தனியான அணிகள் பற்றியும் இறுதிப் போரின் போது அவை நின்ற இடங்கள் பற்றியும் நுட்பமான முறையில் ஆராய்ச்சி செய்து அந்த அணிகள் பற்றிய தகவல்களை கட்டியெழுப்பியதுடன் இதில் இருந்த தனிப்பட்ட நபர்கள் பற்றிய ஆவணக் கோவைகளையும் உருவாக்கியுள்ளனர்.

இந்த ஆய்வு நூற்றுக்கணக்கான உயிர்தப்பியவர்கள் மற்றும் நேரடிச் சாட்சிகளிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களுடன் இராணுவத்தால் இணையத்தில் இருந்து அழிக்கப்பட்ட ஆனால் எங்களால் மீட்டெடுக்கப்பட்ட இராணுவத்தின் நிலைமை அறிக்கைகள் உட்பட வெளி மூல ஆய்வையும் ஒன்று சேர்த்து போர் நடத்தப்பட்டது பற்றிய விரிவான தகவல்களைக் கொண்டுள்ளது.

இந்த முயற்சியின் போது இது போன்ற ஒரு நபரை ஐக்கிய நாடுகள் பணியில் ஈடுபடுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு உயர்வான ஆபத்தைக் கொண்டுள்ளது என்பதை வாதிடக்கூடியதாக சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்கள் இடம்பெற்றன் என்பதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்கள் இடம்பெற்ற ஒரு இடத்தில் இருந்த படையணிகளை அடையாளங்காண்பதில் கவனம் செலுத்தப்பட்டது.

"தமது படைகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என விரும்பிய பல சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் கவனமான முறையில் இந்த ஆய்வுக்கு உதவியதுடன் பாதுகாப்பு காரணங்களுக்காக அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடாத போதும் நாங்கள் அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டுள்ளோம்" என ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

"எனவே ஐ.நாவின் இவ்வாறான செயற்பாடு பற்றிய செய்தி இன்னும் எந்த நீதியுமே கிடைக்காத போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்துள்ளது."

இந்த இடைநிறுத்தம் பற்றி தெரியவருவது என்னவெனில், தற்போது பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை அமைதிகாக்கும் படைப் பிரிவுகள் தமது சுற்றுப்பயணம் முடியும் வரை அதே இடத்தில் இருக்கும் பின்னர் அவர்களுக்கான இடத்திற்கு வேறு ஒரு நாட்



டில் இருந்து படையினர் கொண்டு வரப்படுவார்கள்.

ஆயினும் அமை திகாப்பு நடவடிக்கைகளுக்கான ஐ.நாவின் திணைக்களம் ஐ.நாவின் நடவடிக்கைள் கடுமையாக ஆபத்திற்குள்ளாகும் பட்சத்தில் இந்த இடைநிறுத்தம் இரத்துச் செய்யப்படலாம் என்ற ஒரு நிபந்தனையும் சேர்த்திருப்பது போல் தெரிகின்றது.

"இது எதனைக் கருதுகின்றது என்பது பற்றி ஐக்கிய நாடுகளிடமிருந்து மேலும் தெளிவுபடுத்தலை நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். இந்த முக்கியமான மனித உரிமைகள் விடயத்தில் ஐ.நா. ஏமாற்ற முயற்சித்தால் அது அமைதி காக்கும் நடவடிக்கைகளுக் கான திணைக்களத்தின் நற்பெயரை பெரிதும் பாதிப்பதாக இருக்கும். 'பூச்சிய சகிப்புத்தன்மைக் கொள்கை' பற்றி நீங்கள் கதைத்தால் அது பூச்சியமாக இருக்க வேண்டும். அத்துடன் அது உறுதியான முறையில் செய்யப்பட வேண்டும்" என ஜஸ்மின் சூக்கா மேலும் தெரிவித்தார். (இ-7)

## கோரிக்கைகள் அனைத்தும் பூர்த்தியான பின்பும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதை ஏற்க முடியாது

### அமைச்சர் அபேசிங்க எச்சரிக்கை



(கொழும்பு)

புகையிரத சேவை ஊழியர்களின் கடந்தகால கோரிக்கைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் நிலையில் தற்போது அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும் எனப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்தார். அத்தோடு அவர்கள் முன்கூட்டியே வாய்மூலமோ அல்லது எழுத்து மூலமாகவோ அறிவிப்பொன்றை விடுக்காமல் இவ்வாறு வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது தவறானது.

எனவே புகையிரத சேவை ஊழியர்கள் அவர்களுடைய தற்போதைய கோரிக்கைகள் தொடர்பில் அவர்கள் எம்மோடு பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும். அவ்வாறில்லாத பட்சத்தில் நாளை திங்கட்கிழமையிலிருந்து புகையிரத சேவை உத்தியோகத்தர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## கடலில் விளையாடச் சென்ற மாணவன் சடலமாக மீட்பு

(புல்மோட்டை)

திருகோணமலை புல்மோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்மலைக்குடா கடற் பிரதேசத்தில் நேற்று முன்தினம் விளையாடச்சென்ற 12 வயது பாடசாலை மாணவன் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டதாக புல்மோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மதியம் மூன்று பாடசாலை மாணவர்கள் பொன்மலைக்குடா கடற்கரை பிரதேசத்திற்கு விளையாடச்சென்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றதாக புல்மோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கடலில் இறங்கிய மாணவர்களை அலை இழுத்துச்செல்லும் போது அங்கு நின்ற மீனவர்களால் இரு மாணவர்கள் காப்பாற்றப்பட்டபோதும் ஒருவர் காணாமல் போயிருந்த நிலையில் நேற்று அதிகாலை கடலுக்குள் தேடுதலுக்குச் சென்ற மீனவர்களால் சடலம் கண்டெடுக்கப்பட்டு கரைக்குக் கொண்டுவரப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர். சடலமாக மீட்கப்பட்டவர் 12 வயது மாணவன் மக்கீன் முனாஸ் என புல்மோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

### ஜனாதிபதித் தேர்தலில்

## தேசிய மக்கள் சார்பில் மகேஷ்?

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் இயக்கத்தின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர் குறித்த அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது. பல்வேறு சிவில் சமூக அமைப்புக்கள் அங்கம் வகிக்கும் தேசிய மக்கள் இயக்கத்தின் மாநாடு இன்று பிற்பகல் 1.30 மணியளவில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ளது.

இதன்போது இதுகுறித்த உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் இதுவரையில் குறித்த விடயம் உறுதிப்படுத்தப்படவில்லை. எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்.

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் சஜித் பிரேமதாஸவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் கோத்தபாய ராஜபக்ஷவும் தேசிய மக்கள் சக்தி ஊடாக அநுரகுமார திஸாநாயக்



கவும் பிரதான வேட்பாளர்களாக களமிறங்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# பல ஆண்டுகளுக்குப் பின்னர் வரலாற்று வெளிச்சத்திற்கு வந்திருக்கும் அரிய தமிழ்க் கல்வெட்டு

## தம்பலகாமத்தில் மீளவும் கண்டுபிடிப்பு

1796 காலப்பகுதில் திருகோணமலையின் ஆளுநராக இருந்த பன் - சென்டன் திருகோணமலைக்கான தனது சுற்றுப் பயணத்தின் போது தம்பலகாமம் வயல் வெளியில் நாட்டப்பட்டிருந்த கல்வெட்டு ஒன்றைப் பார்வையிட்டதாகவும், அக்கல்வெட்டின் காலத்தையும்.அதில் எழுதப்பட்ட வரலாற்று விடயங்களையும் அறிந்து கொள்வதற்கு அங்கு வாழ்ந்த மக்கள் உதவ முன்வரவில்லை என தனது பயணக் குறியில் பதிவு செய்துள்ளார். இக் கல்வெட்டை 1930 களில் பார்வையிட்ட பேராசிரியர் பரண விதான அக்கல்வெட்டின் முன்பக்கத்திலு ள்ள 11 வரிகளைப் படியெடுத்து அது பற்றிய செய்தியை முதன்முறையாக வெளிப்படுத்தியிருந்தார்.

தற்போது கொழும்பு அருங்காட்சியகத்தில் காணப்படும் தம்பலகாமம் கல்வெட்டின் மைப்பிரதி பேராசிரியர் பரண விதான வினாலேயே எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. ஆயினும் இக்கல்வெட்டு மைப்பிரதியில் உள்ள 11 வரிகளில் தெளிவாக உள்ள ஐந்துவரிகள் மட்டுமே ஓரளவிற்கு வாசிக்கப்பட்டிருந்ததால் தம்பலகாமம் பற்றிய வரலாற்றாய்வில் இக்கல்வெட்டு முழுமை பெற்றிருக்கவில்லை. பிற்காலத்தில் தமிழ் அறிஞர்கள் சிலர் இக்கல்வெட்டைநேரில பார்வையிட்டுப்படியெடுக்க முயற்சித்த போதும் குறித்த கல்வெட்டு தம்பலகாமம் வயல் வெளியில் காணப்படவில்லை. இதனால் அவர்களது ஆய்வுகளில் இக் கல்வெட்டு மறைந்த அல்லது மறைக்கப்பட்ட கல்வெட்டாகவே பார்க்கப்பட்டுவந்தது.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தின் வரலாற்றுச் சின்னங்களை ஆவணப்படுத்துவதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வரும் தம்பலாகமத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி தங்கராசா ஜீவராஜ் தமது குழுவைச் சேர்ந்த விஜயானந்தன் விஜயகுமார், வைரமுத்து பிரபாகர் ஆகியோரின் உதவியுடன் தம்பலகாமத்தில் இரு இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள கல்வெட்டுக்களை ஆய்வு செய்வதற்கு வருமாறு எம்மை அழைத்திருந்தார். அதன்பேரில் கடந்தவாரம் தொல்லியல் விரிவுரையாளர் கிரிகரன், தொல்லியல் இறுதி வருட மாணவர்களான கஜன் மற்றும் சுதர்சன் ஆகியோருடன் தம்பலகாமம் சென்றிருந்தோம். இவ்விடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்வதற்கான வசதிகளை வைத்திய கலாநிதி ஜீவராஜ்.வரலாற்று ஆர்வலர் பிரபாகர் ஊடாகச் செய்திருந்ததால் ஒரேநாளில் இரு இடங்களிலும் உள்ள கல்வெட்டுக்களைப் பார்வையிட முடிந்தது. அவற்றுள் சில கல்வெட்டுக்கள் கட்ட அழிபாடுகளுடன் தம்பலகாமம் காட்டுப் பகுதியில் உள்ள ஆழமான ஆற்றில் புதைந்து காணப்படுகின்றன.

இதனால் ஆற்றில் இறங்கி புதையுண்ட கல்வெட்டுக்களை வெளியே எடுத்துப் படிக்க முடியவில்லை. ஆயினும் இவ் ஆறு வற்றிய காலத்தில் அக்கல்வெட்டுக்களை வெளியே எடுத்துப் படியெடுத்துப் படிக்க முடியும் என்ற நம்பிக்கையுள்ளது.

### 1930இல் மறைந்த அல்லது மறைக்கப்பட்ட அரிய தமிழ்க்கல்வெட்டு

இக் கல்வெட்டு தம்பலகாமம் நாயன்மார் திடல், மாவிலாங்கடி பிள்ளையார் ஆலயத்தில் காணப்படுகின்றது. இக்கல்வெட்டை இவ்வாலயத்தின் தலைவர் முத்துக்குமார் குணராசா தம்பலகாமத்தில் தனியார் காணியில் இருந்து கண்டெடுத்து தனது ஆலயத்தில் வைத்து பாதுகாத்து வருகின்றார். இதன் எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டு இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு (கி.பி.12- 13ஆம் நூற்றாண்டில்) முன்னர் பொறிக்கப்பட்டதென்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. இதில் பொறிக்கப்பட்ட தெளிவான தமிழ்ச் சொற்களை வாசித்த போது இக்கல்வெட்டையே இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னர் திருகோணமலையில் ஆளுநர் தம்பலகாமம் வயல்வெளியில் பார்வையிட்டுள்ளார் என்பது தெரியவந்தது.

1930களில் இக் கல்வெட்டை படியெடுத்த பேராசிரியர் பரண விதான கல்வெட்டின் முன்பக்கத்தில் மட்டும் 11 வரிகளில் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் நாம் கல்லின் பின்பக்கத்தை நன்குதுப்புரவு செய்து பார்த்த போது அதிலும் 11 வரிகளில் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளதை கண்டுபிடிக்க முடிந்துள்ளது. ஆயினும் இக்கல்வெட்டு 1000 ஆண்டுகளுக்கு மேல் வயல் வெளிகளிலும், தனியார் காணிகளிலும், வீடுகளிலும் சரியாகப் பாதுகாக்கப்படாத நிலையில் வைக்கப்பட்டிருந்ததால் பல வரிவடிவங்கள் அழிவடைந்தும், தேய்வடைந்தும் காணப்படுகின்றன.





இவற்றைக் கருத்தில் கொண்டு இக்கல்வெட்டை பல்வேறு முறைகளில் படியெடுத்து தென்னாசியாவின் தலைசிறந்த கல்வெட்டறிஞர் பேராசிரியர் சுப்பராயலு மற்றும் சிரேஷ்ட கல்வெட்டறிஞர் கலாநிதி இராஜ கோபால் ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் உதவியுடன் இக்கல்வெட்டை ஓரளவிற்கு வாசிக்க முடிந்துள்ளது. அதன் வாசகம் பின்வருமாறு,

வரி:1 ----, 2 ----மாதி, 3 ------, 4 யிரண் ----தி, 5 ருக்கோணமலை, 6 உடையான்நிச்ச, 7 யித்தஜகதப்பழு, 8 கண்டன்சந்தி, 9 க்குநிலையாக ஜதரஸ, 10 தம்பலகாமஊ, 11 ரைநான்கெல், 12 லைக்குஉள்எல்லா, 13 வினியோ, 14 கங்கொள், 15 ளும்படிக்கு,16 ம் இதுக்கு,17 மேற், பன்னி,18 நான்ஒரு -, 19 ---------------, 20 -மாகில்நா, 21 -காகத்து, 22 க்கும் பிறந், வர்கள் ககல்வெட்டில் இருந்து திருகோணமலை உடையாரின் வேண்டுதலுக்கு இணைங்க ஜகதப்ப கண்டன் (சந்தி) பெயரில் உருவாக்கப்பட்ட நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு (ஆலயப் பணிகளுக்கு) தம்பலகாமம் ஊரின் அனைத்துவரிகளும் (அனைத்து விநியோகமும்) வழங்கப்பட்ட செய்திகளையும், ஆணையையும் அறிந்து கொள்ள முடிகின்றது. திருகோணமலை உடையாரின் தீர்மானத்திற்கு அமைவாக இத்தானம் உருவாக்கப்பட்டதால் தம்பலகாம ஊரின் வரிகள் அந்த ஊரில் இருந்த ஆலயத்தின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்டதா? அல்லது திருகோணமலையில் இருந்த ஆலயத்திற்கு வழங்கப்பட்டதா? என்பதை உறுதிப்படுத்த முடிய்வில்லை. இக்கல்வெட்டில் வாசிக்க முடியாதிருக்கும் சிலவரிகள் எதிர்காலத்தில் வாசிக்கப்படும் போது இவ்வாலயம் எங்கிருந்ததென்ற உண்மை தெரிய வரலாம்.

இக்கல்வெட்டு திருகோணமலை மாவட்டத்தின் அதிலும் சிறப்பாக தம்பலகாமத்தின் இடைக்கால வரலாற்றுக்கு நம்பகத்தன்மையுடைய புதிய சில ஆதாரங்களைத் தருவதாக உள்ளது. தம்பலகாமம் பிராந்தியத்திற்கு 2500 இற்கு முற்பட்ட வரலாறு உண்டு. அதை அப்பிராந்தியத்தில் பரவலாகக் காணப்படும் ஆதியிரும்புக்கால குடியிருப்புகளும், பெருங்கற்கால ஈமச்சின்னங்களும் உறுதி செய்கின்றன. இப்பிராந்தியம் பண்டு தொட்டு திருகோணமலைக் கோணேஸ்வரர் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப் படுகின்றன. அத்தொடர்பின் காரணமாகவே 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் திருக்கோணேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்ட போது அவ்வாலயத்தை நினைவுபடுத்தி தம்பலகாமத்தில் 17ஆம் நூற்றாண்டில் ஆதிகோணநாயகர் ஆலயம் அமைக்கப்படக் காரணமாகும். தற்காலத்தில் தம்பலகாமம் என அழைக்கப்படும் இப்பிராந்தியம் கல்வெட்டில் தம்பலகாம ஊர் எனக் கூறப்பட்டிருப்பதில் இருந்து இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பிராந்தியம் தமிழரின் பூர்வீக இடமாக இருந்ததை இக்கல்வெட்டு உறுதி செய்கின்றது.

ஆதிகால, இடைக்கால வரலாற்று இலக்கியங்களில் திருகோணமலையும், அங்குள்ள துறைமுகமும் கோணா, கோகர்ணம், கோகர்ணபட்டினம், திரிகூடகிரி, கோணமாமலை என அழைக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் இக்கல்வெட்டில் இப்பிராந்தியம் திருக்கோணமலை எனக் குறிப்பிடப்பட்டதிலிருந்து கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இப்பெயர் வழக்கில் இருந்ததற்கு இக்கல்வெட்டு மேலுமொரு சான்றாகக் காணப்படுகின்றது.

இக்கல்வெட்டு திருகோணமலை உடையார் பற்றிக் கூறுகின்றது. சாசன வழக்கில் உடையார் என்ற சொல் அரசனை அல்லது பெரு நிலக்கிழாரான அரச பிரதிநிதியைக் குறிப்பதாகப் பேராசிரியர் பத்மநாதன் கூறுகின்றார். இவற்றிலிருந்து 12ஆம் அல்லது 13 ஆம் நூற்றாண்டில் திருகோணமலைப் பிராந்தியம் அரசனின் அல்லது அரச பிரதிநிதியின் அதிகாரத்திற்கு உட்பட்ட இடமாக இருந்ததெனக் கூறலாம். இக்கல்வெட்டு திருகோணமலை உடையாரின் வேண்டுதலுக்கு இணங்க தம்பலகாம ஊரில் ஜகதப்பகண்டன் பெயரில் தானம் உருவாக்கப்பட்டதாகக் கூறுகின்றது. ஜகதப்ப கண்டன் என்பது இருவேறுபட்ட பொருளில் அமைந்தபெயராகும். ஜகதப்ப என்ற பெயர் அரசன் அல்லது போர்வீரனின் விருதுப் பெயரைக் குறிக்கின்றது. கண்டன் என்பது போர் வீரனைக் குறிக்கும் சொல்லாகும். இவற்றில் இருந்து ஜகதப்ப கண்டனை தம்பலகாமத்தில் இருந்த அரசனாக அல்லது படைத்தலைவனாகக் கருத இடமுண்டு.

இக்கல்வெட்டின் சமகால இலங்கை அரசியல் வரலாறு கூறும் பாளி,சிங்கள இலக்கியங்கள் கலிங்கமாகனது ஆட்சியில் சிங்கள, பௌத்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதால் பொலநறுவை இராசதானியும், சிங்கள மக்களும் தெற்கு நோக்கி நகர்ந்த போது வட இலங்கையில் கலிங்கமாகன் தலைமையிலான அரசு தோன்றியதாகக் கூறுகின்றன. இவனது அரசின் தலைநகர் எங்கிருந்ததென்பதை இவ்விலக்கியங்கள் கூறவில்லை. ஆயினும் அவனது படைகள் நிலைகொண்டிருந்த இடங்கள், நிர்வாக ஒழுங்குகள் பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் திருகோணமலைப் பிராந்தியத்தில் உள்ள கோகர்ணம், கந்தளாய், கட்டுக்குளம் கொட்டியாரம் ஆகிய இடங்களில் கலிங்கமாகன் படைகள் நிலைகொண்டிருந்ததாகக் கூறப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம். கலிங்கமாகன் ஆட்சியோடு கிழக்கிலங்கையில் வன்னிமைகளின் ஆட்சிதோன்றியதாகக்கூறுகின்றது.

கோணேஸ்வரர் கல்வெட்டு முதலான தமிழ் இலக்கியங்களும், ஒல்லாந்தர் கால ஆவணங்களும் திருகோணமலைப்பற்று, கட்டுக்குளப்பற்று, கொட்டியாரப்பற்று மற்றும் தம்பலகாமப்பற்று முதலான வன்னிமைகளின் ஆட்சிபற்றிக் கூறுகின்றன. இங்கே கல்வெட்டில் கூறப்படும் தம்பலகாமத்து ஜகதப்ப கண்டனனை அரசனாக அல்லது படைத்தலைவனாகக் கொள்ளுமிடத்து இக்கல்வெட்டு வடக்கில் கலிங்கமாகன் ஆதிக்கம் இருந்ததற்கான முதலாவது நம்பத்தகுந்த ஆதாரம் என்ற சிறப்பை பெறும். எதிர்காலத்தில் இக்கல்வெட்டுப் பற்றிய விரிவான ஆய்வுகள் இக்கருத்தை உறுதி செய்யலாம்.

இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் கல்வெட்டுக்கள் நம்பகத்தன்மை உடைய சான்றுகளாகும். இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்களில் அதிக எண்ணிக்கையிலானவை திருகோணமலை மாவட்டத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் அக்கல்வெட்டுக்களை ஒன்று சேர ஆவணப்படுத்தி குறிப்பிட்ட ஒரு இடத்தில் பாதுகாக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்ற ஆதங்கம் தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

ஆயினும் திருகோணமலை மக்களிடையே தமது பிரதேசத்தின் வரலாற்றுச் சின்னங்களை கண்டறிந்து ஆவணப்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு 1960 களில் இருந்து தோன்றிய வரலாறு காணப்படுகின்றது. அதனை சமகாலத்தில் முன்னெடுத்துச் செல்லும் துடிப்புள்ள இளைஞர்களில் ஒருவராக வைத்திய கலாநிதி ஜீவராஜை பார்க்கின்றேன். இதற்கு இவரின் தந்தை தங்கராசா, பேரன் அமரர் வேலாயுதம் ஆகியோர் ஆதிகோண நாயகர் கோயிலின் மரபுவழி அறங்காவலர்களாகும்.

இவர்கள் பத்திரிகை, கலை, இலக்கிய, வரலாறு ஆகிய பணிகளால் தமிழ் அறிஞர்களுக்கு நன்கு பரீட்சயமானவர்கள். இப்பின்புலத்தின் வழி வந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து உருவான வைத்திய கலாநிதி ஜீவராஜும், அவரின் சகோதரியான தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதியும் சமகாலத்தில் தமக்குரிய கடமைகளுக்கு அப்பால் தம்பலகாமத்தின் வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறிந்து ஆவணப்படுத் தும் பணிகளில் கடுமையாக உழைத்து வருவது இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வுக்குப் புது வழிகாட்டுவதாக உள்ளது.

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்,
தலைவர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி தருமபுரம் கட்டைக்காடு பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதுடன் கடந்த சில தினங்களாக ஊர்மனைகளுக்குள் புகுந்து தென்னைகளையும் ஏனைய பயன்தரு மரங்களையும் அழித்து வருகின்றன என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தருமபுரம் கட்டைக்காடு ஆகிய பகுதிகளுக்குள் கடந்த வியாழக்கிழமை புகுந்த காட்டு யானைகள் பயன்தரு தென்னை மரங்களை அழித்துள்ளன.

இதேவேளை கடந்த சில நாட்களாக இரவு வேளைகளில் யானை தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் இரவு விழித்திருக்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அண்மைய நாட்களாக அதிகரித்துள்ள இவ் யானைத்தொல்லையால் பெருமளவான பயிர்ச்செய்கைகள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (9-315-350)



# மூத்தோர் மனம் மகிழும் விளையாட்டுப் போட்டிகள்



(கிளிநொச்சி)

மூத்தோர்களுக்கான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் மாவட்ட கூட்டுறவாளர் மண்டப வளாகத்தில் இப் போட்டிகள் நடத்தப்பட்டன.

சங்கீதக் கதிரை, கூடைக்குள் பந்து போடுதல் ஆகிய போட்டிகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நடைபெற்றதுடன் 100 மீற்றர் வேகநடை ஆண்களுக்கும், கிடுகுபின்னுதல் பெண்களுக்கும் நடைபெற்றது.

பிரதேச செயலக மட்டத்தில் ஏற்கனவே நடத்தப்பட்ட மேற்படி போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்ற மூவர் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றினார்கள்.

மாவட்ட மட்டப் போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்களுக்கு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள கிளிநொச்சி மாவட்ட மூத்தோர் விழாவின் போதும், அதனைத் தொடர்ந்து வவுனியாவில் நடைபெறவுள்ள வடமாகாணத்திற்குரிய சர்வதேச விழாவின் போதும் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (9)

# வீதிகளைப் புனரமைக்க நிதியில்லை

## துணுக்காய் பிரதேச சபை தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 286 கிலோமீற்றர் வீதிகளில் 30 கிலோமீற்றர்களுக்கும் குறைவான வீதிகளே நிரந்தர வீதிகளாக புனரமைக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற பெருமளவான வீதிகள் சேதமடைந்தும் கைவிடப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன.

குறிப்பாக, ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான், தேறாங்கண்டல், கோட்டைகட்டியகுளம், தென்னியன்குளம், உயிலங்குளம் போன்ற பகுதிகளில் பெருமளவான வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் துணுக்காய் பிரதேச சபையிடம் தொடர்புகொண்டு கேட்டபோது. துணுக்காய் பிதேச சபையின் கீழ் சுமார் 286 கிலோமீற்றர் வீதிகள் காணப்படுகின்றன. இதில் 30 கிலோமீற்றர்களுக்கும் குறைவான வீதிகள் மாத்திரமே நிரந்தர வீதிகளாக புனரமைக்கப்பட்டிருக்கின்றன.

ஏனைய வீதிகளைப்புனரமைப்பதற்கு பெருமள வான நிதி தேவைப்படுகின்றது. வருமானங்கள் அற்ற சபைகளாகக் காணப்படுகின்ற இச்சபையில் வீதிகளைப் புனரமைக்கக் கூடிய வசதிகள் இல்லை. வேறு நிதிகளைப் பெற்றுத்தான் இவ்வாறான வீதிகளைப் புனரமைக்க வேண்டிய நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# காலபோக செய்கையில் ஆர்வம் காட்டியுள்ள முல்லை.விவசாயிகள்



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். 70 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை முயற்சிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

மாவட்டத்தின் முக்கிய குளங்களான வவுனிக்குளம், முத்தையன்கட்டுக்குளம், உடையார்கட்டுக்குளம் உட்பட அனைத்து குளங்களின் கீழும் விவசாயிகள் நெற் செய்கை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கமநல சேவை நிலையங்கள் ஊடாக மானிய உரங்கள் வழங்குவதற்கான பதிவுகளும் இடம்பெற்று வருகின்றன.

விவசாயத் திணைக்களம், கமநல சேவை நிலையங்கள் ஊடாகவும் உப பயிர்ச் செய்கைக்கான விதைகள், ஆலோசனைகள் வழங்குதல் இடம்பெற்று வருகின்றன.

இலங்கையிலேயே நிலக்கடலைச் செய்கை முல்லைத்தீவு மாவட்டத்திலே கூடுதலாகச் செய்கை பண்ணப்படுவதனால் விவசாயத் திணைக்களம் நிலக்கடலைச் செய்கையில் விவசாயிகளை கூடுதலாக ஈடுபடுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கி வருகின்றது. (9-350)

# வாழ்வாதார ஊக்குவிப்புக்கான காசோலை வழங்கி வைப்பு



(அக்கராயன்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் (European Union) நிதியீட்டத்துடன் Humanity & Inclusion (HI), வலது குறைவு சம்பந்தமான அணுகும் வசதி, கண்காணிப்பு மற்றும் தகவல்களுக்கான நிலையம் (CAMID), யாழ்.சமூக செயற்பாட்டு மையம் (JSAC) மற்றும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டுக்குட்பட்ட பெண்கள் விவசாய திணைக்களத்தின் அரைமானிய திட்டத்தின் கீழ் பயனடைவதற்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட 10 பெண் பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியிலுள்ள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (9)

# சஜித்துக்கு ஆதரவு

(அக்கராயன்)

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கே ஆதரவு வழங்குவதாக சமாசத் தலைவர் அன்ரனி ஞானதீபன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முல்லைத்தீவிற்கு விஜயம் செய்த சஜித் பிரேமதாஸவிடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடி நிலைமை தொடர்பாக எடுத்துரைத்திருந்தோம். சஜித் பிரேமதாஸவும் எமக்கு சாதகமான தீர்மானங்களை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். தற்போது அவர் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவருக்கு எமது ஆதரவினை வழங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-350)



**சுயாதீன தமிழ் இளைஞர் அமைப்பால் வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சம் பனை விதை நாட்டும் நிகழ்வு நேற்று மாளிகை குளக்கரையில் நடைபெற்றது. இதன்போது நொச்சிகுளம் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம அபிவிருத்திச்சங்கப் பிரதிநிதிகள், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள், சுயாதீன தமிழ் இளைஞர் அமைப்பின் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.**

நீ எதை சொல்கிறாய் என்பதை விட,
யாரிடம் சொல்கிறாய் என்பதே முக்கியம்.
– ஜீன் ஜாக்ஸ் ரூஸோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மறைமுகமான பேச்சுக்கள் எதுவும் வேண்டாம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் செயற்பாடு படுதோல்வி கண்டு விட்டது.

எனினும் அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகள் சரியானவை என்ற மனநிலையிலேயே இருக்கப் போகின்றனர்.

எதையும் அலசி ஆராய்ந்து எது சரி, எது பிழை என்ற முடிவுக்கு வராமல் எங்கள் நம்பிக்கைக்குரியவர்கள் செய்வதெல்லாம் நியாயமானவை, முழுக்க முழுக்கச் சரியானவை என்று நம்பி விடுகின்ற ஒரு பண்பாடு நம் இனத்தில் உண்டு.

இந்தப் பண்பாடு பற்றி நம் அரசியல் தலைவர்களும் நன்கு உணர்ந்திருக்கின்றனர்.

இதன் காரணமாக மக்களை எப்படியும் வாலாகப் பயன்படுத்த முடியும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

இதன்காரணமாக மக்கள் எங்களை ஒதுக்கி விடுவார்கள் அல்லது எங்களிடம் கேள்வி கேட்பார்கள் என்ற அச்சம் தமிழ் அரசியல் தலைமையிடம் இம்மியும் இல்லை.

இதனால் அவர்கள் தாம் நினைத்தபாட்டில் நடந்து கொள்கிறார்கள். எதுவும் செய்யலாம். எப்படியும் நடக்கலாம் என்ற அடிப்படையில் அவர்களின் அரசியல் சீவியம் நடந்தாகிறது.

தமிழ் மக்கள் தமது அரசியல் களநிலை தொடர்பில் கவனம் செலுத்தாதவரை தமிழ் மக்களுக்கு விமோசனம் இல்லை என்பது தான் நிறுதிட்டமான உண்மை.

இது பற்றிப் பலரும் பல தடவைகள் கூறி விட்டனர். இருந்தும் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இப்போதுகூட ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது. இதில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதில் ஜனாதிபதி வேட்பாளர்கள் கடும் பிரயத்தனம் செய்வர்.

இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினருடன் சில அரசியல் கட்சிகள் பேச்சுவார்த்தையும் நடத்தியுள்ளன. இதில் பேசப்பட்டவை என்ன என்பது இதுவரைக்கும் தெரியவில்லை.

தவிர இனியும் பேச்சுக்கள் நடக்கவுள்ளன. அதிலும் குறிப்பாக கோத்தபாய ராஜபக்ஷ, சஜித் பிரேமதாஸ, அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தமிழ்த் தரப்புகளுடன் பேச்சு நடத்துவர்.

இதன்போது தாம் ஜனாதிபதியாக வந்தால், தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடிய தீர்வு என்ன என்பது பற்றிப் பிரஸ்தாபிப்பர்.

இவையெல்லாம் தமிழ் மக்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

அதேநேரம் தமிழ் அரசியல் தரப்புகளிடம் கூறிய அதேவிடயத்தை குறித்த வேட்பாளர் அல்லது அவரது கட்சி சிங்கள மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். இதுவே வெளிப்படைத்தன்மையாகும்.

இதைவிடுத்து இந்த மக்களுக்கு என்ன தெரியப் போகிறது. இவர்களுக்குச் சொல்வதால் எதுவும் ஆகமாட்டாது என்று எழுந்தமானமாக ஜனாதிபதி வேட்பாளர் எவருடனும் உடன்பாடு காணப்பட்டால், அது மிகப்பெரிய ஏமாற்றத்தையே தரும்.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசியல் தரப்பு என்ற குறுகிய கட்டமைப்புக்குள் தீர்மானங்கள் முடங்கிப் போகாமல் பொதுவெளியில் பொதுமையான கட்டமைப்பு இது விடயத்தில் உள்ளடங்க வேண்டும்.

# இனக்கலவரத்தை ஏற்படுத்தி அரசியல் இலாபம் பெறுவதற்கு கோத்தாவின் அடிவருடிகள் சூழ்ச்சி!

## மங்கள காட்டம்

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷவின் அடிவருடிகள் நாட்டில் மீண்டும் இனக்கலவரத்தை ஏற்படுத்தி இம்முறையும் தேர்தலில் அரசியல் இலாபம் பெறுவதற்கு சூழ்ச்சி களை மேற்கொண்டு வருவதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சாட்டினார்.

மாத்தறை, கிரிந்த, பூஹுல் வெல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டமை குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியானதையடுத்து, பிரதேச இளைஞர்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்நிலையில் குறித்த பிரதேசத்தின் பிரதேசசபை தலைவரின் ஆதரவாளர் ஒருவர் பட்டாசு கொளுத்திய முஸ்லிம் இளைஞர் ஒருவருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டார்.

இதனையடுத்து நடந்த சில அசம்பாவிதச் சம்பவங்களால் பூஹுல் வெல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் பதற்றம் ஏற்பட்டது.

நிலைமை தற்போது முற்றாக வழமைக்குக் கொண்டு வரப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசத்தின் பாதுகாப்பு பணிகளில் விசேட அதிரடிப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டதாக பிரதி பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.லத்தீப் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் மங்கள சமரவீர,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட தலைவரே இவ்வாறான பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர் பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகரவின் சகா.

இச்சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் உடனடியாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். இதனையடுத்து பாதுகாப்பு தரப்பினர் தலையிட்டு பதற்றத்தை தணித்தனர்.

இதேவேளை ராஜபக்ஷவினரின் ஆதரவாளர்கள் சமூக வலைத்தளப் பக்கங்களில் மிகவும் அருவருப்புடன் நடந்து கொண்டதுடன் இந்தச் சம்பவத்தின் ஊடாக நாட்டைத் தீயிட முயற்சித்தனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் பொதுஜன பெரமுனவினர் இருக்கின்றனர் என்பதை நான் தெளிவாகக் கூறுகிறேன்.

கோத்தபாய இம்முறையும் இனவாதத்தைத் தூண்ட முயற்சித்து வருகிறார். நாங்கள் அதற்கு இடமளிக்க மாட்டோம் என மங்கள மேலும் தெரிவித்தார். (இ-7)

# பௌத்த தீவிரவாத நடவடிக்கைகளை தடுத்து நீதி வழங்க வேண்டியவர் ஜனாதிபதியே

## மாவை. எம்.பி. இடித்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

பௌத்த குரு ஞானசார தேரரும் மல்வத்த பௌத்த பீடமும் தமிழினத்தையும் இந்துமதம் முதலான ஏனைய மதங்களையும் மதத் தலங்களையும் எச்சரிப்பதையும் ஆக்கிரமிப்பதையும் அடக்கி ஆள முயற்சிப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் மக்களும் ஒரு பொழுதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பௌத்த மதத்திற்கு முன்னுரிமை என்று ஏனைய மதங்களை அடக்கி ஆள, ஒழித்து விட எடுக்கப்படும் முயற்சிகள் அரசியலமைப்பு ரீதியில் மதங்களின் சமத்துவத்தையும் மத நம்பிக்கையையும் பாதுகாக்க வேண்டுமென்பது அவசியமாகிவிட்டது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா எம்.பி தெரிவித்தார்.

இந்திய நாட்டில் பல மதங்கள்,பல மொழி இனங்கள், பல வகைப் பிரதேசங்கள் அங்கீகரிக்கப்படுவதை அரசியலமைப்பினூடாகப் பேணிப் பாதுகாப்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றது. அதனடிப்படையில் இந்திய அரசியலமைப்பு மதச்சார்பற்ற நாடு (Secular State) என்றே பிரகடனப் படுத்தியுள்ளது. இலங்கையிலும் எந்த ஒரு மதத்திற்கும் முன்னுரிமை வழங்காமல் பல இனங்களையும், பல மத நம்பிக்கைகளையும் மத பீடங்களையும் கொண்டுள்ள அடிப்படை விதியை ஏற்று மதச்சார்பற்ற அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சியாகவும் அண்மையிலும் ஞானசார தேரர் மத விரோத, இன விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றம் ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது. ஜனாதிபதி ஞானசார தேரரை மன்னிப்பளித்து விடுதலை செய்தமை மீண்டுமொருமுறை அரசியல் தவறிழைத்தமையையே நிரூபித்துள்ளது.

முல்லைத்தீவு செம்மலைப் பிரதேசத்தில் நீராவியடிப் பிள்ளையார் கோவில் எல்லைக்குள் அத்துமீறி, ஆக்கிரமித்து பௌத்த விகாரையைக் கட்டியிருந்த புத்த குரு புற்றுநோயால் கொழும்பு வைத்தியசாலையில் இறந்து விட்டார். ஆனால் அந்தப் புத்த குருவின் உடலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளவில் எரிக்க ஞானசார தேரரும் ஏனைய பௌத்த மத தீவிரவாதிகளும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த வளவில் பௌத்த விகாரை கட்டப்பட்டமை தொடர்பில் நீதிமன்ற வழக்கு நடைபெறுகிறது. மரண மடைந்த பிக்குவின் உடலை இந்து ஆலய வளவில் எரிப்பதற்கு எதிரான வழக்கு முல்லை நீதிமன்றில் விசாரணையில் இருந்த வேளை அந்தத் தீர்ப்பு நடைமுறைகளை மீறி ஞானசார தேரரின் வழிநடத்தலில் பொலிஸார் பாதுகாத்து நிற்க தேரரின் உடல் எரிக்கப்பட்டுள்ளமை நீதிக்கு விரோதமானதேயாகும். நீதிமன்ற அவமதிப்பாகும்.

அந்த நீதிமன்றம் நந்திக்கடல் நீரேரிக்கருகாமையில் பௌத்த தேரரை எரிப்பதற்குத் தீர்ப்பு வழங்கும் வேளையில் அத்தீர்ப்பு அறிவிப்பை மீறி நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளவருகில் தேரர் உடல் எரிக்கப்பட்டது நீதிமன்ற அவமதிப்பு மட்டுமல்ல இந்து மக்கள் தமிழ் மக்களு க்கு மத நம்பிக்கைகளுக்கு எதிரானதேயாகும்.

நீதிமன்றத் தீர்ப்போடு வந்த சட்டத்தரணிகளும் அவமதிக்கப்பட்டுள்ளனர், தாக்கப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக இவை தொடர்பிலான அனைத்து ஜனநாயகப் போராட்டங்களையும் ஆதரிக்க வேண்டும்.

எனவே நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பை ஏற்படுத்தியமைக்காகவும், சட்டத்தரணி, பொது மக்கள் தாக்கப்பட்டமைக்கு எதிராகவும் ஞானசாரதேரர் உட்பட்ட சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய உத்தரவிட வேண்டுமென ஜனாதிபதியை வற்புறுத்துகின்றோம்.

மல்வத்த பௌத்த பீடம் உள்ளிட்ட இனமத விரோத நடவடிக்கைகள் நீதிமன்ற அவமதிப்பு மற்றும் குறிப்பாக இந்துமத ஆலய ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ஜனாதிபதியே வழக்கைப் பதிவு செய்து நீதியை நிலைநாட்டவும் நாட்டைப் பாதுகாக்கவும் வேண்டுமென்றும் வற்பு றுத்துகின்றோம். அல்லது மத ரீதியாக, இன ரீதியாக, பிரதேச ரீதியாக இலங்கை பிளவுபட்டுவிடும் விளைவுகளுக்கு ஜனாதிபதியும் அரசுமே பொறுப்பாகி விடுமெனவும் கூறி வைக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பல திறமை வாய்ந்த நண்பர்களின் தொடர்பை விட பொறுக்கியெடுத்த சில புத்தகங்களின் உறவே அதிக நன்மையளிக்கும். -கால்டன்

## நவராத்திரி பாமாலை

வீரத்திற்கு இன்று முதலாம் நாள்



### துயர் துடைக்கும் துர்க்கை

கொற்றவைத் தெய்வம்
கொடுமை தவிர்க்க
துர்க்கையாகத் தோன்றி
துயர் கொள்ளும் மக்களுக்கு
ஆறுதல் அளித்தாள்
சிங்க ரத்தில் அவள் ஏறி
சீக்கிரம் விடைகாண துடித்தாள்
வீரத்தை மக்களுக்கு கொடுத்தாள்
வேகத்தை மனதில் நிறுத்தினாள்
நவராத்திரியில் துர்க்கை புகழ் பாடுவோம்
நாடிவரும் பக்தர் துயர் தீர்த்திடுவாள்
நன்னெறியில் வாழ வழிகாட்டிடுவாள்
நமது வேண்டுதலுக்கு வழி சமைத்திடுவாள்

பா.கலாதேவி,
யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி





ஈசன் மரீனா நிறுவனத்தால் தென்மராட்சியில் கடல் சுற்றுலாத்துறையில் அதிக பங்களிப்பை வழங்கும் பொருட்டு கேரதீவு பனையடி கடற்பரப்பில் கடந்த 26 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சிறிய படகுச்சவாரிப் போட்டி சாவகச்சேரி மறவன்புலோ பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், உபதவிசாளர் செ.மயூரன், பிரதேச சபை உறுப்பினர்களான சு.கேதீஸ்வரன், திருமதி க.லூர்துமேரி, கைதடி சனசமூக நிலைய ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் கந்தையா வாமதேவன் தலைமையில் பரிசுகள் அனைத்தும் வழங்கப்பட்டன.நாவாந்துறை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் கீ கனிசியஸ் அணி முதல் இடத்தை பெற்று 30 ஆயிரம் ரூபாவையும் பாஷையூர் கடற்றொழிலாளர் சங்கம் எ.றீகன் அணி இரண்டாவது இடத்தை பெற்று 20 ஆயிரம் ரூபாவையும் நாவாந்துறை கடற்றொழில் சங்கம் சா.குணசீலன் அணி மூன்றாவது இடத்தை பெற்று 10 ஆயிரம் ரூபாவையும் பெற்றுக் கொண்டனர். தொடந்து 10 ஆறுதல் பரிசாக தலா 3 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

(படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

# காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்கு முன்னேறிய செம்மலை உதய சூரியன்



சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழகம் மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முந்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மந்துவில் சென்.ஜோசப் அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் உதயசூரியன் அணி 03:01 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ஜ)

# அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது இரணைப்பாலை சென்.அன்ரனீஸ்

சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழகம் மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் இரணைப்பாலை சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து ஆனந்தபுரம் அண்ணா அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் அன்ரனீஸ் அணி 02:00 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ஜ)



# அசத்தல் வெற்றியை பதிவு செய்த தேவன்பிட்டி சென்.சேவியர் அணி



சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக்கழகம் மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கிளிநொச்சி இளந்தளீர் அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென். சேவியர் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் சென். சேவியர் அணி 03:01 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ஜ)

# இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது பொலிகை பாரதி



நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தி வருகின்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் பொலிகை பாரதி அணியை எதிர்த்து அண்ணா சிலையடி யுத் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் பொலிகை பாரதி அணி வெற்றி பெற்று இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றது.

பொலிகை பாரதி அணி சார்பாக நிதர்சன் ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார்.இப் போட்டியின் ஆட்ட நாயகனாக நிதர்சன் தெரிவு செய்யப்பட்டார். (ஜ)

# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி



நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தி வருகின்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து இமையாணன் மத்தி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:02 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்று இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது.

றேஞ்சர்ஸ் அணி சார்பாக சந்தோஸ் இரு கோல்கபை் பெற்று கொடுத்தார்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக சந்தோஸ் தெரிவு செய்யப்பட்டார். (ஜ)

## ஜனாதிபதித் தேர்...

டத்தில் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படவுள்ளார் என, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. பல்வேறு சிவில் சமூக அமைப்புகள் அங்கம் வகிக்கும் தேசிய மக்கள் இயக்கத்தின் மாநாடு இன்று பிற்பகல் 1.30 மணியளவில் கொழும்பு சுகததாச உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டிலேயே, தேசிய மக்கள் இயக்கத்தின் ஜனாதிபதி வேட்பாளர் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளார். (ம-3)

## யாழில் மூதாட்டி சடலமாக மீட்பு...

யாழ்ப்பாணம் கொட்டடியில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த இளையதம்பி சொர்ணம்மா (வயது -90) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மூதாட்டி திருமணம் செய்யாத நிலையில் தனிமையில் வசித்து வந்துள்ளார். இந் நிலையில் கடந்த 25ஆம் திகதி மாலை மூன்று மணிவரை வீட்டில் இருந்தவர் திடீரென காணாமற்போயுள்ளார்.

உறவினர்கள் எங்கும் தேடிய நிலையில் அன்று மாலை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இந்த நிலையில் வீட்டின் பின்புறத்தில் உள்ள பற்றைகாட்டினை சுற்றி காகங்கள் நீண்டநேரமாக கரைந்த வண்ணம் இருந்துள்ளன.

காகங்களின் போக்கினை அவதானித்து சந்தேகம் கொண்டு பற்றைக்காட்டிற்குள் சென்று பார்த்த போது காணமற்போன மூதாட்டி அழுகிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

பின்னர் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு எடுத்து செல்லப்பட்டது.

இறப்பு விசாரணையினை வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அலுவலர் நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-78)

## கணவன், மனைவியை கட்டி...

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது. நேற்று அதிகாலை 1.30 மணியளவில் குறித்த வீட்டின் பின் பகுதி ஊடாக வந்த திருடர்கள் வீட்டின் கூரையைப் பிரித்து உள் நுழைய முயற்சித்துள்ளனர். அவ் முயற்சி தோல்வியடைந்ததனை அடுத்து வீட்டின் குளியலறை யன்னலைப் பிரித்து உள் நுழைந்து வீட்டில் இருந்த கணவன் மற்றும் மனைவி ஆகியோரை அவர்கள் அணிந்திருந்த உடைகளால் கட்டிப் போட்டு விட்டு, அவர்கள் அணிந்திருந்த மற்றும் வீட்டில் இருந்த தங்க ஆபரணங்களைக் கொள்ளையிட்டுள்ளனர்.

தாலிக்கொடி, காப்பு, சங்கிலி மற்றும் மோதிரம் ஆகியன அடங்கலாக சுமார் முப்பது பவுண் நகை கொள்ளையிடப்பட்டிருப்பதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் திருடர்கள் செல்லும் போது கணவன், மனைவி இருவரது வாயினையும் துணிகளால் கட்டி விட்டு காலை ஐந்து மணிக்கு பின்னரே வெளியே வரவேண்டும் எனவும் மிரட்டி விட்டுச் சென்றுள்ளனர்.

செல்லும் போது வீட்டு உரிமையாளரின் மோட்டார் சைக்கிள் திறப்பு மற்றும் பிரதான வாயில் கதவு திறப்பு ஆகியவற்றைப் பெற்று மோட்டார் சைக்கிளில் தப்பித்துச் சென்று பின்னர் அருகில் உள்ள வயல் கரை ஓரமாக மோட்டார் சைக்கிளினைக் கைவிட்டு விட்டுச் சென்றுள்ளனர்.

கொள்ளை தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

அத கோடிபதி ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 745 வர்ணம் : மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 2019.09.28

SEASON

விசேட இலக்கம்

4562

வெற்றி இலக்கங்கள்

ஆங்கில எழுத்து

09 44 59 77 V

பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொலைபேசி: 0112 333 546-47

SATURDAY FORTUNE

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு இல: 3241 வர்ணம் : பச்சை

சீட்டிழுப்பு திகதி: 2019.09.28

அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்

ரூ. 62,512,430/-

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து போனஸ் இலக்கம்

08 22 27 75 X 43

தொலைபேசி: 0112 333 546-47

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1048

சீட்டிழுப்பு திகதி 28.09.2019 நீலம்

J 10 24 53 75

அடுத்த சுப்பர் ஜக்பொட்

ரூ.76,990,676

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## தமிழர்கள் மத்தியில் மைத்திரி...

அண்மையில் தனித்தனியாக பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர். கோத்தபாய இந்த வாரம் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்த இரண்டு பேச்சுவார்த்தைகளும் மிகவும் நட்புறவான முறையில் நடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், ஜனாதிபதிக்கும் மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச இடையில் நேற்று பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது.

இதில் பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கூட்டணியை ஏற்படுத்துவது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தலைவர்களுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டின் அடிப்படையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கோத்தபாய ராஜபக்ச சார்பில் வடக்கு கிழக்கில் நடைபெறும் தேர்தல் பிரசாரங்களில் உரையாற்ற உள்ளார். (ம-3)

## விவசாயத்திற்...

துள்ளார்.

இந்த கொள்கை செயற்பாடு மூலம் விவசாயிகளை பாதுகாத்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அதிகாரிகளின் தேசிய சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார். (ம-3)

## ராஜபக்ச சகோ...

ஜனாதிபதி மாளிகையில் இந்த சந்திப்பு நடந்தது.

இதன்போது, இரு கட்சிகளும் விரைவில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி கூட்டணியொன்றை அமைக்க வேண்டுமென மகிந்த ராஜபக்ச வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதாகவும், எனினும் அது குறித்து கட்சிக்குள் ஆலோசித்து பதிலளிப்பதாக மைத்திரி தெரிவித்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

சு.கவின் மத்தியகுழு இன்று மீளவும் கூடி இது குறித்து ஆராயவுள்ளது. (ம-3)

## யாழில் கோவிலு...

பெருமாள் கோவிலுக்கு சென்ற குறித்த பெண்ணின் கைப்பை கோவிலில் வைத்து இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளது.

குறித்த கைப்பையில் ஏ.ரி.எம். அட்டைகள், ஒரு தொகை பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## 36 கிலோ கேரள...

மாவட்ட போதைத் தடுப்புப் பிரிவும் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தன.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அல்வாயிலுள்ள வீடு ஒன்றுக்குள் சோதனையிடப்பட்டது.

உரப்பைகளில் பொதியிடப்பட்ட நிலையில் 36 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள் நிலமட்டத்துக்கு மணல் போடப்பட்டு புதைக்கப்பட்டிருந்தது.

அதனை புதைத்து பதுக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அந்த வீட்டின் உரிமையாளரான 44 வயதுடைய குடும்பத் தலைவர் கைது செய்யப்பட்டார்.

கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-3,60,101)

## நாட்டு மக்களை...

ருந்தன.

இந்த சம்பவத்தின்போது, நான் நாட்டில் இருக்கவில்லை. அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷவும் நாட்டில் இல்லை. ஆனால், அந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் இன்று அமைச்சுப் பதவிகளை வகித்து வருகிறார்கள்.

இவ்வாறானவர்கள்தான் உண்மையில் பயங்கரமானவர்கள். இவர்களின் உண்மையான முகங்கள் இன்று வெளிவந்து கொண்டிருக்கின்றன. நாம் என்றும் சிறுபான்மையின மக்களுக்கு எதிராக செயற்பட்டது கிடையாது. அவர்களுக்கான முழுமையான பாதுகாப்பினை வழங்க நாம் என்றும் தயாராகவே இருக்கிறோம். இதற்கான பொறுப்பையும் நாம் எடுக்கின்றோம் என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தண்டனையிலிருந்து தப்பிக்க...

ராக ஐ.நா உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இலங்கையின் இராணுவதளபதியாக நியமிக்கப்பட்டுள்ள சவேந்திர சில்வா நம்பகதன்மை மிக்க குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதே இதற்கு காரணம்.

இலங்கையின் 26 வருட ஈவிரக்கமற்ற யுத்தத்தின் இறுதியில் சவேந்திர சில்வா தலைமை வகித்த படையணியொன்று கைதுசெய்யப்பட்டவர்களை சுட்டுக்கொன்றதுடன் அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டது என ஐ.நாவின் விசாரணைக் குழுவொன்று 2015 இல் கண்டுபிடித்திருந்தது.

யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணை செய்து நீதிவிசாரணைகளை முன்னெடுப்பதாக அரசாங்கம் உறுதியளித்த போதிலும் அது இன்னமும் இடம்பெறவில்லை. 2012 இல் ஐக்கியநாடுகளிற்கான பிரதிதூதுவராக பணியாற்றிய வேளை சவேந்திர சில்வா அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் காரணமாக அமைதிப்படை நடவடிக்கைகள் குறித்த ஐநாவின் விசேட குழுவிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். 1980களில் இலங்கையின் தென்பகுதியில் ஜேவிபியினருக்கு எதிரான நடவடிக்கைகளின் போதும் சவேந்திரசில்வா மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான யுத்தத்தின் இறுதி தருணங்களில் 40ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கொடூரம் காரணமாக ஐநாவின் நடவடிக்கைகளில் மனித உரிமைக்கு முக்கியம் என்ற கொள்கையை ஐ.நா பின்பற்ற தொடங்கியது.

இந்த நடவடிக்கைகள் கடந்த சில வருடங்களில் அலட்சியப்படுத்தப்பட்டுள்ள போதிலும் இது அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடும் படையினருக்கும் நாடுகளிற்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது.

இலங்கை தொடர்பான ஐ.நாவின் கொள்கையை அடிப்படையாக கொண்ட நிலைப்பாடு ஐ.நாவின் புதிய அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது என எதிர்பார்ப்போம்.

அமைதிப்படை நடவடிக்கைகளில் தங்கள் படையினரை ஈடுபடுத்தும் நாடுகளிற்கு தங்கள் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா என விசாரணை செய்து ஆராயும் கடப்பாடு உள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் லெபனானில் பணிபுரிய அனுப்பப்பட்ட இலங்கை படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா என்பது குறித்து ஆராயப்படவில்லை என்பது தெரியவந்தது.

2017 இல் ஹெய்ட்டியில் அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபட்ட இலங்கை படையினர் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்களிற்காக திருப்பி அனுப்பப்பட்டனர். விசாரணைகளை மேற்கொள்வதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ள போதிலும் இன்னமும் அது இடம்பெறவில்லை.

சவேந்திர சில்வாவின் நியமனம் இலங்கை இராணுவம் பாரிய துஸ்பிரயோகங்களை இழைத்தவர்களிற்கு தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை ஸ்தாபனமயப்படுத்தியுள்ள ஒன்று என்பதை அம்பலப்படுத்தியுள்ளது.

ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரசினதும் ஐக்கியநாடுகளின் அமைதிகாக்கும் நடவடிக்கைகளிற்கான ஸ்தாபனத்தினதும் நடவடிக்கை யுத்தகுற்றங்களை மூடி மறைப்பதற்கான முயற்சிகளை ஐ.நா அலட்சியம் செய்யாது என்ற செய்தியை தெரிவித்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (ம-3)

## ஜனாதிபதி...

களுக்கு பதில் அளிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நான் எந்த முன்நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை எனது கொள்கைகளை மாத்திரம் வலியுறுத்தினேன் என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் வெளியிட்டுள்ள கருத்துக்கள் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியவேளை ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவது குறித்து மட்டுமே நான் கவனம் செலுத்துகின்றேன் என சஜித்பிரேமதாச தெரிவித்துள்ளார். (ம-3)

சுபிரி வாசனா

திகதி 2019/09/28

சீட்டிழுப்பு இலக்கம் 1464

எழுத்து 23 வெற்றி இலக்கம் 11 40 42 48 01 03

தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 28-09-2019

சீட்டிழுப்பு இலக்கம் 978

ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 7 4 0 6 0 9

தேசிய லொத்தர் சபை

செவன

திகதி 2019/09/28

சீட்டிழுப்பு இலக்கம் 222

F 09 38 59 63

NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத

திகதி 2019.09.28

சீட்டிழுப்பு இலக்கம் 2254

G 01 05 52 77

தேசிய லொத்தர் சபை

# இலங்கை சிங்களவர்களின் நாடல்ல என்பதை சஜித் நினைவில் வைத்திருக்க வேண்டும்

## வாராந்த கேள்வி பதிலில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

கொழும்பு றோயல் கல்லூரிக் கல்வியும் அவரின் பௌத்த மதப் பின்னணியும் மேலும் லண்டன் பொருளாதாரக் கல்லூரியிலும் வேறு கல்லூரிகளிலும் அவர் பெற்ற கல்வியுமானது அவருக்கு "வாழ் மற்றவரையும் வாழவிடு" என்ற மனோநிலையைக் சஜித்திற்கு கொடுத்திருக்கும் என்று நம்புகின்றேன் எனத் தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

நேற்று அவர் அனுப்பி வைத்துள்ள வாராந்த கேள்வி பதிலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிய கேள்வி பதில் குறிப்பில்,

**கேள்வி:-** சஜித்துக்கு ஜனாதிபதி வேட்பாளராக வரத் தற்போது பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது. அவரை எவ்வாறு பார்க்கின்றீர்கள்? பதவிக்கு வந்தால் அவர் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார் என்பது என்ன நிச்சயம்?

**பதில்:-** சஜித்தைத் தேர்ந்தெடுத்தமை எனக்குத்தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. அவர் இளம் வயதினர். கொழும்பு றோயல் கல்லூரியில் தாராள மனப்பாங்குடைய ஆரம்ப காலக் கல்வியைப் பெற்றவர். ஆனால் அவர் காலத்தில் வகுப்புகள் மொழி ரீதியாகப் பிரிக்கப்பட்டிருந்தன. எங்கள் காலத்திலோ சகல இன மக்களும் ஒரே வகுப்பில் இருந்தோம். ஒருமொழி எம்மைப் பிணித்தது (ஆங்கிலம்). ஆனால் அடிப்படையில் கொழும்பு றோயல் கல்லூரிக் கல்வியும், அவரின் பௌத்தமதப் பின்னணியும் மேலும் லண்டன் பொருளாதாரக் கல்லூரியிலும் வேறு கல்லூரிகளிலும் அவர் பெற்ற கல்வியுமானது அவருக்கு "வாழ் மற்றவரையும் வாழவிடு" என்ற மனோநிலையைக் கொடுத்திருக்கும் என்று நம்புகின்றேன்.

தருணசவிய மூலம் இளைஞர்களுடன் அவர் வெற்றி கண்டுள்ளார். அவருக்கு ஒரு கெட்டியான பௌத்த பின்னணி இருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால் ஒருசிலவிடயங்கள் அவர் தமிழர் மீது தன்னுறுதியில்லாத மனோநிலையைக் கொள்ளக் கூடியவாறு அமைந்திருக்கலாம். அவரின் தந்தையார் தமிழ்ப் போராளிகளின் வன்முறைக்கு இலக்கானார் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை ஒருகாரணம்.

அடுத்தது நிறுவனமயப்படுத்தப்பட்ட பௌத்தத்திற்கும் புத்தரின் போதனைகளுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை அவர் உணர்ந்துகொண்டுள்ளாரோ தெரியவில்லை. எமது அரசியல் யாப்பானது புத்தரின் போதனைகளை ஆங்காங்கே உட்புகுத்தியிருக்கலாம். ஆனால் நிறுவனப்படுத்தப்பட்ட பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்தமை தவறென்று நான் பலமுறை கூறியுள்ளேன். நிறுவனமயப்படுத்தப்பட்ட பௌத்தம் வேறு புத்தபெருமானின் போதனைகள் வேறு. முல்லைத்தீவில் பொதுபலசேனா இயற்றிய கூத்துக்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டபௌத்தத்தால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை வெளிக்கொண்டு வருகின்றன. அவற்றின் குற்றவியல் தன்மையையும் வெளிக்காட்டிநிற்கின்றன.

மேலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அவரின் "இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு" என்ற அதிதீவிர சிந்தனை தடையாக இருக்கலாம். ஆனால் அவர் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நாடுசிங்கள பௌத்தர்களுக்குரிய நாடு அல்ல. புத்தர் காலத்திற்கு முன்பிருந்தே இந்தநாடு சைவத் தமிழ் நாடாக இருந்தது. பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதே தமிழ் இந்துக்கள் மத்தியில் தான். மேலும் சிங்கள மொழியானது நடைமுறைக்குவந்தது கி.பி.6ம் அல்லது 7ம் நூற்றாண்டிலேயே.

இன்று 2000 ஆண்டுகளுக்கு மேலான தொல்பொருள் சார்ந்த பௌத்த எச்சங்கள் என்று கூறப்படுபவை தமிழ் பௌத்தர்கள் கால எச்சங்கள்.

இன்று நாட்டின் 75 சதவிகிதமானவர்கள் சிங்கள் பௌத்தர்கள் என்பது உண்மையே. ஆனால் வடகிழக்கின் 85 சதவிகிதத்திலும் அதிகமானவர்கள் தமிழ் பேசும் மக்களே. எங்களைப் பொறுத்தவரையில் எந்த மதத்திற்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டியஅவசியம் இல்லை என்பதே எமதுநிலைப்பாடு. வடக்கில் இந்து சமயமானது ஆதிகாலந் தொட்டு கோலோச்சி வந்துள்ளது. அது மற்றையமதங்கள் யாவற்றையும் மதிக்கும் ஒருசமயம். "உண்மை ஒன்று அதைஞானிகள் பலநாமங்களால் குறிப்பிடுகின்றார்கள்"என்பதே இந்து மக்களின் கருத்து வெளிப்பாடு. அதனால்த்தான் வடகிழக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் தமக்கு பிரிக்கப்படாத நாட்டினுள் சுயாட்சியைக் கோருகின்றார்கள்.

அவரின் தந்தையைநான் அறிந்திருந்தேன். தன் தந்தையாரின் செயலாற்றல் திறமையை மகன் பெற்றிருந்தால் இது வரையில் "தேசிய அபிமானிகள்" என்ற வகையில் ஆட்சி ஓச்சியவர்களில் இருந்தும் வித்தியாசமான ஒருவராக சஜித் சிறந்து விளங்க முடியும். இதுவரையில் ஆட்சி ஓச்சியவர்கள் அறிவுடைமையையும் உணர்வுடைமையையும் வெளிக்காட்ட முடியாதவர்களாகவே இருந்தார்கள்.

தன்னால் பின்னப்பட்ட மேற்கூறப்பட்ட வலையில் இருந்து சஜித் விடுபட்டாரானால் எல்லா மக்களும் பாராட்டும் அதிசிறந்த ஜனாதிபதியாக வரக்கூடிய தகைமைகள் கொண்டவர் அவர் என்பது எனது கருத்து.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் அண்மையில் கத்திரிக்கப்பட்டிருந்தாலும் அவர் தனது சிறப்பினை வெளிக்காட்டக்கூடியவர் என் பதே எனது கருத்து எனத் தெரிவித்துள்ளார்.(ம-3)


## கணனி திருத்தம்

உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா?
உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம்.
கணனிகள் விற்றல், வாங்குதல், பழைய கணனிகளும் வாங்கப்படும். (460)

**ALM Computer System**

தொடர்புகளுக்கு: 077 243 8537

## வேலையாட்கள் தேவை

பருத்தித்துறையில் இயங்கிவரும் பிரபல ஸ்ரூடியோவிற்கு அடிப்படைக் கணனி அறிவுள்ள பெண் பிள்ளைகள் மற்றும் ஆண்கள் தேவை.

பருத்தித்துறை பிரதேசத்துக்கு அண்டிய பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.



(C-7738) தொடர்புகளுக்கு

021 226 5454,
077 704 6623,
077 087 1070

## சமையல் வல்லுநர் (Chef) தேவை

கனடாவில் புகழ்பெற்ற நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட இருக்கும் உணவகத்திற்கு ஈழத்து சைவ மற்றும் அசைவ உணவு வகைகள் மற்றும் சிற்றுண்டிகள் செய்வதில் 5 வருடத்துக்கும் மேலான அனுபவமுள்ள சமையல் விற்பன்னர் தேவை.

**கொத்து ரொட்டி மற்றும் சிற்றுண்டி செய்வதில் வல்லவராக இருத்தல் வேண்டும்.**
**வயது 28 - 45, இரண்டு வருட வேலைவாய்ப்பு மற்றும் நீடிப்புக்கான வாய்ப்பு. உழைப்புக்கான ஊதியம் மற்றும் இதர சலுகைகள், கடுமையான உழைக்கும் திறமை, குறிப்பிட்ட நேரத்துக்குள் செயலாற்றும் ஆற்றல் மற்றும் சக ஊழியர்களை வழிநடத்தும் திறமை**

போன்றன சிறப்பியல்புகளாக கருதப்படும்.

நேர்முகத்தேர்வினூடாக தெரிவு இடம்பெறும். மேற்கூறிய தகைமைகள் இருக்கும் பட்சத்தில் மட்டும் தொடர்பு கொள்ளவும். சுயவிபரக்கோவையை ஒக்ரோபர் 03ஆம் திகதிக்கு முன்னர் Email:chef.jaffna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்புக்கு: 077 692 9463 (401)

## British College of Higher Studies

# IELTS

Academic / General Life skills A1, B1 Exam

**Spoken/Diploma English**

Starting New Batch!!! For all age groups

Sirambiydi Lane, Off Stanley Road, Jaffna.
Tel No:0212224550 / 0761380212 (C-7736)

## விற்பனைக்கு

பாவனையில் உள்ள தேங்காய் எண்ணெய் அரைக்கும் இயந்திரம் - 1
நல்லெண்ணெய் அரைக்கும் இயந்திரம் - 1

077 841 1969

## கடை விற்பனைக்குண்டு

295/6 K.K.S வீதி
யாழ்ப்பாணத்தில் உள்ள கடை
(1 மாடி) விற்பனைக்குண்டு.
தொடர்புகளிற்கு
0777721740 / 0765944947 (415)

## 3 மாத கால அலுவலக பயிற்சிகள்

2019 இல் A/L எடுத்தவர்கள் மாத்திரம்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதங்கேணி

- எமது அனைத்து கிளைகளிலும் 3 மாத கால வேலை வாய்ப்பு பயிற்சிகள் உண்டு.
- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- A/L பெறுபேறுகள் கிடைக்கும் வரையிலான காலப்பகுதியில் மட்டும்.

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

## வாடகைக்கு

சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (C-7727)
தொடர்பு
0779689119

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வீடு ஒன்றில்
தங்கி நின்று 2 வயது குழந்தையைப்
பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவை,
(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்) (461)
தொடர்புகளுக்கு:
0774326401, 0772487789

## தையலாளர் தேவை

யாழ் - நல்லூர் பகுதியில் உள்ள
நிலையத்தில் தையல் வேலை
செய்யக்கூடியவர் தேவை.
(Bag, பேர்ஸ் தைக்கக்கூடியவர்)

077 217 4741
021 221 9815

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg
(C-7539)

0768226240
V2 TRAVELS

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெல்லியடி, கொடிகாமம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மானிப்பாய், திருகோணமலை, சாவகச்சேரி, சுன்னாகம், மருதங்கேணி

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 236

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 29.09.2019 தொலைபேசி : 021 222 3378



## எரிப்பும் எரிச்சலும்





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம். என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

பண்டிதரின் முகம் காய்ந்து போய் இருந்தது. இதனை அவதானித்த சாத்திரியார் என்ன பண்டிதர் ஐயா ஒரு மாதிரியாக இருக்கிறியள் என வினவினார்.

**பண்டிதர்:** என்ன சாத்திரியார் செய்யிறது. முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோயில் வளாகத்தில புத்த பிக்குவின்ர பூதவுடல் தகனம் செய்யப்பட்டிருக்குது. என்னைப் பொறுத்தவரை இது நாட்டிற்கு நல்லதல்ல.

**விதானையார்:** முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோயில், முன்பு பௌத்த விகாரையாக இருந்தது எண்டு பௌத்த பிக்குகள் சொல்லுகினம். இதைச் சிங்கள மக்களும் நம்புகினம். ஆனால் தொல்லியல் திணைக்களம் நீதிமன்றில் சாட்சியமளிக்கையில் பௌத்த விகாரை அங்க இருந்ததற்கான சான்றாதாரங்கள் எதுவும் இல்லை என்பதை ஒத்துக் கொண்டுள்ளன.

**மூப்பர்:** தொல்லியல் திணைக்களம் சொன்ன பிறகும் முல்லைத்தீவு நீராவியடியில் புத்த விகாரை இருந்ததென்று பௌத்த பிக்குகள் எப்படிச் சொல்ல முடியும்.

**சிறாப்பர்:** என்ன இருந்தாலும் புத்த பிக்குவின் உடல் பிள்ளையார் ஆலய வளாகத்தில் தகனம் செய்யப்பட்டது என்றவுடன் எங்கட மக்கள் அணி திரண்ட பேரெழுச்சி உண்மையிலேயே மனதுக்கு ஆறுதலைத் தருகிறது.

இவ்வாறு சம்பாஷனை நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பண்டிதரின் முகத்தில் ஏதோ ஒரு கவலை வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது. இதனை அவதானித்த வாத்தியார் வைத்திலிங்கம் என்ன பண்டிதர் உடல் நிலை சரியில்லையோ. முல்லைத்தீவு நீராவியடியில நடந்த கண்டனப் பேரணியில நீங்கள் கலந்து கொண்ட களைப்புப்போல.

**பண்டிதர்:** பேரணி நடந்ததெல்லாம் சரி. ஆனால் மரபுரிமை பேரவை, ஐ.நா. வதிவிடப் பிரதிநிதிக்கு அனுப்பி வைத்த மனுவில் மரபுரிமைப் பேரவையின் மூன்று இணைத்தலைவர்கள் கையொப்பமிட்டிருக்கினம்.

ஆனால் அந்த மூவரில ஒருவர் கத்தோலிக்க பாதிரியார். இது வரவேற்கப்பட வேண்டும். ஆனால் அந்த மனுவில் ஒரு இந்து மதத்தலைவரும் ஒப்பமிட்டிருந்தால் பிள்ளையார் ஆலயம் என்ற வகையில பொருத்தப் பாடாக இருந்திருக்கும்.

**வாத்தியார்:** ஏன் எங்கட தென்கயிலை ஆதீன சுவாமிகளும் மரபுரிமைப் பேரவையின்ர இணைத் தலைவர்களில ஒருவர் எண்டு நான் அறிந்தனான்.

**கங்காணி:** எங்கட இந்து சமயத் தலைவர்கள் எண்டால் அவர்களிட்ட கையொப்பம் வாங்கமாட்டினம். அந்தக் கையொப்பத்திற்குப் பெறுமதி இல்லை எண்டு நினைச்சு அதைத் தவிர்த்திருப்பினம்.

**விதானையார்:** என்ன கங்காணியார் சொல்லுறியள். பிள்ளையார் ஆலயம் என்கிற போது ஒரு இந்து மதத் தலைவரும் ஒப்பமிடுகிறது தானே பொருத்தம்.

**பண்டிதர்:** விதானையார் நீங்கள் இதைச் சொல்லுறியள். ஆனால் புத்த பிக்குவின் தகனத்தை தொடர்ந்து நடந்த கண்டனப் பேரணியில ஒரு இளைஞன் ஒரு பதாகையை ஏந்தியிருந்தான். அதில,

***தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே! தமிழர்களுக்காக நீங்கள் உங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்யத் தயாரா?***
என்று எழுதப்பட்டிருந்தது.

எனினும் பேரணியின் ஏற்பாட்டாளர்கள் அந்தப் பதாகையை வைத்திருப்பதற்கு அனுமதிக்கவில்லை. அதனைச் சிலர் வாங்கி மடித்து எங்கோ மறைத்து விட்டனர். அந்த இளைஞனும் பல தடவைகள் அவர்களுக்குச் சொல்லிப் பார்த்தான் சரியாகவில்லை.

**மூப்பர்:** ஏன் எங்கட கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் ஒரு சந்தர்ப்பத்தில தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கட பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் எனக் கூறினவர். அந்தக் கருத்து நியாயமானதென்று கருதப்பட்டது. ஆனால் அந்த இளைஞன் வைத்திருந்த பதாகையைக் கொண்டு செல்ல அனுமதிக்காதது ஏன் என்பதுதான் புரியவில்லை.

**சிறாப்பர்:** தமிழரசுக் கட்சிக்குச் சார்பாகச் செயற்பட வேணும் எண்டு ஏற்பாட்டாளர்கள் நினைத்திருப்பினம் போல.

**வாத்தியார்:** சிறாப்பர் நாங்கள் அப்படியொரு முடிவுக்கு வரத் தேவையில்லை.

ஆனால் முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் புத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்ததென்பதற்கு அரசாங்கத்தை ஆதரிக்கிற எங்கட அரசியல்வாதிகளும் காரணம் என்பதுதான் என்ர நிலைப்பாடு.



## சிதம்பரத்து புண்ணிய நாச்சியார்மடம் கைமாறிப் போகுது பாருங்கள்

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. தனியப் புத்த பிக்குகளையும் சிங்களத் தரப்புக்களையும் நாங்கள் எதிர்க்கிறது என்பதில நியாயம் இருக்கிறதாக எனக்குத் தெரியல்ல. சிங்கள ஆட்சியாளர்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரித்துக் காப்பாற்றி நிற்குது.

தவிர, பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவதை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் வரவேற்றவர்தானே. ஆயிரம் விகாரைகளை வடக்கு-கிழக்கு மாகாணங்களில அமைப்பது என்பதுதான் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரகடனம். அந்தப் பிரகடனம் செய்த அரசாங்கத்தை தமிழரசுக் கட்சிதான் காப்பாற்றுது.

இதுபற்றியெல்லாம் கவனிக்காமல் தனித்து பௌத்த பிக்குகளை எதிர்ப்பது என்பது என்னைப் பொறுத்தவரை ஒரு நடுநிலையான செயலாகத் தெரியவில்லை.

இந்து ஆலயத்தில புத்த பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டது எண்டால், அதற்கு அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழரசுக் கட்சியும்தான் பொறுப்பு.

**பண்டிதர்:** சில பேர் பாருங்கோ. இராவணனுக்கு எந்த ஊறும் விளைவிக்காமல், அவனைக் குறை சொல்லாமல் சீதையைச் சிறை மீட்கிறது எண்டு வெளிக்கிட்டிருக்கினம்.

ஒரு கொஞ்சக் காலம் போக மாயை நீங்கும். அப்ப உண்மைத் தோற்றம் புரியும். அதுவரை நாங்கள் பொறுமையாக இருப்பம்.

**வாத்தியார்:** நாங்கள் இப்படியே சொல்லிச் சொல்லிப் பொறுமை காக்க, எங்கட தலையில இடியும் விழச் சரியா இருக்கும்.

வாத்தியார் இவ்வாறு கூறியதும் ஆலடி மாநாட்டில இருந்தவர்கள் திணுக்குற்றனர்.

என்ன வாத்தியார் சொல்லுறியள். கங்காணி கார்த்திகேயன் பதற்றத்தோடு கேட்டார்.

**வாத்தியார்:** சிதம்பரத்தில இருக்கிற புண்ணிய நாச்சியார்மடம் எங்கட யாழ்ப்பாண சைவபரிபாலன சபையின்ர சொத்து.

அந்த மடத்தில, இது சைவபரிபாலன சபையின் கட்டடம் என்று கருங்கல்லில பொறித்திருந்தது.

ஆனால் இப்ப அங்க இருக்கிற ஒரு குடும்பம் அந்தக் கருங்கல்லை அகற்றிப்போட்டு கண்ணாடி ஒன்று வைச்சிருக்குதாம்.

**மூப்பர்:** அப்ப இங்க இருக்கிற சைவபரிபாலன சபை என்ன செய்யுது.

**சாத்திரியார்:** அவர்கள் மீண்டும் நிர்வாகத்தைக் கைப்பற்றுவது எப்படி என்று திட்டம் போடுகினம். இங்க சைவசமயம் அழிஞ்சு போகுது. சைவபரிபாலன சபைக்கு ஆரோ புண்ணியவான்கள் கொடுத்த சொத்துக்கள் அழிஞ்சு போகுது. என்ன செய்வம். பெருமூச்சுவிட்டபடி சாத்திரியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


**ஆதித்தன்**

# ஜனாதிபதித் தேர்தல்

## தமிழ் மக்களின் வியூகம் என்ன?







அரச தலைவர் பதவிக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டதையடுத்து ஆதரவு தேடும் படலம் ஆரம்பித்துவிட்டது.

ஜனாதிபதித் தேர்தல் என்றதும் தென்பகுதி அரசியல்; வியூகம் அமைக்கத் தலைப்பட்டுள்ளது.

தனது ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிறேமதாஸ என்ற அறிவிப்பை ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்ததைத் தொடர்ந்து, முதன்மையான அரசியல் கட்சிகள் உசாரடைந்துள்ளன.

ஆம், பொதுஜன பெரமுன சார்பில் கோத்தபாய ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியில் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பியில் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ளனர்.

இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்னமும் தனது வேட்பாளரை அறிவிக்காத நிலையில், மேற்குறிப்பிட்ட மூன்று வேட்பாளர்களும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்ற அடிப்படையில் மும்முனைப் போட்டி தொடங்கிவிட்டது.

இங்கு ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியை தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகளே தீர்விடப் போகிறது என்ற வகையில், ஜனாதிபதி வேட்பாளர்கள் மூவரும் தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதில் அதீத கவனம் செலுத்துவர்.

அதேநேரம் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெறுவதில் தாம் ‘அதிக கரிசனை காட்டுவதாகத் தென்பகுதியில் வெளிப்படுத்தாமலும் மறைப்புச் செய்வர்.

அதாவது நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது என்று வெளிப்படையாகக் கூறுவார்களாயின், அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஏனைய கட்சிகள் முற்படும்.

அதாவது தமிழ் மக்கள் பெயர் குறிப்பிட்டு இந்த வேட்பாளரையே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கப் போகின்றோம் என்று பகிரங்கப்படுத்தினால், குறிப்பிட்ட வேட்பாளர் தமிழ்த் தரப்புக்களுடன் ஒப்பந்தம் செய்துவிட்டார்.உடன்படிக்கை கைச்சாத்தாகிவிட்டது.

எனவே பிரஸ்தாப வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் இந்த நாடு பிரிந்துவிடும் என எதிர்ப்பிரசாரம் செய்யப்படும்.

இந்நிலையில் தமிழர்கள் ஆதரிக்கின்ற வேட்பாளரை சிங்களவர்கள் ஆதரிக்காத நிலைமையும் ஏற்படலாம்.

சந்திரிகா குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முதலாவது தடவையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனக் கூறியே அவர் தேர்தலில் வெற்றி பெற்றார். இந்த நிலைமை 2009 ஆம் ஆண்டு வரை நீடித்தது.

அதாவது வன்னிப் பெரும் போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படும் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று பிரசாரம் செய்பவர்களே ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட தேர்தல்களில் வெற்றி பெற்றனர்.

ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்பான தென்பகுதி நிலைமை மாற்றமடைந்தது.

தமிழ் மக்களுக்கு எதுவும் வழங்கமாட்டோம். இது பௌத்த சிங்கள நாடு என்று அதியுச்சமாக யார் உரத்துக் கூறுகின்றனரோ அவர்களுக்கே வெற்றி பெறும் வாய்ப்பு என்பதாக நிலைமை மாறிவருகிறது.

இந்த நிலைமை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் பிரதிபலிக்கவே செய்யும்.

அதாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும், தமிழ் மக்களுக்கு உரிமை வழங்குவேன் என்று கூறுகின்ற வேட்பாளர் பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகலாம் என நினைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதில் தமிழ் அரசியல் தரப்புகளுடன் உடன்படிக்கை செய்தல் என்ற விடயத்திற்கு அவர்கள் எவரும் முன்வரப் போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் எழுத்து மூலமான உத்தரவாதங்கள் அல்லது இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் உறுதிமொழி என்பவற்றின் உத்தரவாதத்தின் பேரில், தமிழ் மக்கள் தங்கள் ஆதரவை வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் நல்லாட்சியை நம்பி ஏமாந்த நிலைமை மீண்டும் ஏற்படும்.

ஆம், நல்லாட்சி அரசு என்பது தேசிய அரசாகவே இருக்கமுடியும் என்பதாக எம் கருத்தியல் இருந்தது.

ஆனால் தேசிய அரசு என்றால் அதன் வடிவம், ஆளுமை எவ்வாறாக இருக்கும் என்பதை அனுபவ ரீதியாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

தவிர, தேசிய அரசின் இருநிலைக் கொள்கையை எமக்குச் சாதகமாக்கிக் கொள்கின்ற ஆளுமையும் எங்கள் தமிழ் அரசியல் தலைமைகளிடம் இருக்கவில்லை.

அதாவது ஜனாதிபதி மைத்திரியுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் சமாந்தரமானதும் சமத்துவமானதுமான உறவு நிலையைப் பேணி இரு தலைவர்கள் மூலமாகவும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெட்டித் தீர்க்கின்ற நுட்பம் எங்கள் அரசியல்வாதிகளிடம் அறவே இருக்கவில்லை.

அவர்கள் விலைபோனவர்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் மீளா அடிமைகளாகி தங்கள் முழுப்பலத்தையும் கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைப் பாதுகாப்பதாகவே இருந்தது. இவ்வாறு அவர்களைப் பாதுகாப்பதில் தமிழ் மக்களுக்கு நன்மை என்னவென்றால் எதுவுமில்லை.

ஆக, காலசூழ்நிலைக்கேற்ப அரசியலைக் கையாளும் பக்குவம் கொண்ட மனநிலை நம் தமிழ் அரசியல்வாதிகளிடம் இல்லாதபோது, இம்முறை ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் எவ்வாறு கையாளப்படும் என்பது தான் இப்போதுள்ள கவலை.

எது எவ்வாறாயினும் தமிழ்த் தரப்புக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல், ஒருமித்த முடிவுக்கு வருதல் என்ற வழிமுறையூடாக மட்டுமே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள முடியும்.

**விதுரன்**

# விரதம் அனுஷ்டித்தல்

என்றும் நமது உடலும் உள்ளமும் உறுதியும் அமைதியும் பெற அன்றே ஞானிகளால் தவ சிரேஷ்டர்களால் பல நூறு கோட்பாடுகள் வரையறுத்து வைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்றுதான் விரதம் அனுஷ்டிக்கும் முறை. விரதம் என்பது பசியைக் கட்டுப்படுத்திக்கொள்வது அல்ல. அதை அடக்கிவைத்து தன் சொல்லை கேட்கவைப்பது. காட்டுக்குதிரையை கைக்குள் அடக்கி வைப்பது போன்றதான நிலை அது. ஆக இந்த விரதம் என்பது சாதாரண ஒன்று அல்ல. தற்போது எல்லாம் ஏதோ ஒரு காரணத்திற்காக விரதங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. இப்படியான விரதங்களை வெறும் விரதமாக மட்டும் நாம் பாவித்துவிடக் கூடாது. விரதம் என்பதே உடலும் உள்ளமும் ஒன்றாய் பயணப்படும் மனோ ரதம் போன்றது. ஆன்மா ஒன்றிய நிலையில் சுயம்



இழந்து பரம் தேடும் பரமானந்தம் அது. ஒரு விரதம் உண்மையாக அனுஷ்டிக்கப்படும் போது ஓடும் காலம் நிற்கும். ஓயாத சிந்தனை அடங்கும். முருகன் அருணகிரிநாதனுக்குச் சொன்ன "சும்மா இரு சொல்லறவே" எனும் ஆன்மப் பாடம் கண்டிப்பாய் நமக்கு வாய்க்கும். ஏழை இருக்கும் விரதம் இல்லாமை. எல்லாம் இருந்தும் கொள்ளும் விரதம் நிலைக் கொள்ளாமை.

அன்றைய ஞானிகள் விரதத்தை உணவு உண்பதற்காக மட்டும் கடைப்பிடிக்காமல் மௌனிகளாக வனத்தில் வாசம் செய்ததன் குறிக்கோள் எதற்கெனில் இறைவனைத் தேடுகின்ற வெற்றியில் தன் இருப்பிடத்திற்கே இறைவனைத் தேடி வர வைக்கின்ற நிலைக்காகத்தான் என்ற நோக்கமாக இருந்தால் விரதம் அவர்களுக்கு இறை முகத்தை காட்டியது. அவர்களுக்கும் இறைவனுக்குமான பரஸ்பரத்தை கூட்டியது. ஆக நாம் எல்லையில்லாத பல வெற்றிகளைக் குவிக்க எதன் பெயரிலேயாவது விரதத்தை அதற்கான அனுஷ்டானங்களுடன் கடைப்பிடிக்க என்றுமே நமக்கான வெற்றி என்பது நிச்சயம்.

**"செம்மான் மகனைத்திருடும் திருடன்**
**பெம்மாள் முருகன் பிறவான் இறவான்**
**சும்மா இரு என சொல் அறவே அம்மா**
**பொருள் ஒன்று அறிந்திலனேன்"**

கந்தர்–அனுபூதி

*-சிவனடியான்-*

# பழமொழிகள்

- கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.
- நாவு அசைய, நாடு அசையும்.
- சாகிற வரையில் வைத்தியன் விடான், செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்.
- இட்டவர்கள், தொட்டவர்கள், கெட்டவர்கள், இப்போது வந்தவர்கள் நல்லவர்கள்.
- பூ மலர்ந்து கெட்டது, வாய் விரிந்து கெட்டது.
- எழுதுகிறது பெரிதல்ல, இன்னும் அறிந்து சேர்க்கிறது பெரிது.




## விடுகதைகளும் விடைகளும்

- பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்தவாய் அவள் யார்?
  **கிளி**
- ஓயாமல் இரையும் இயந்திரமல்ல, உருண்டோடி வரும் பந்தும் அல்ல அது என்ன ?
  **கடல்**
- மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கல்ல, பட்டை போட்டிருப்பான் சாமி அல்ல அவன் யார்?
  **அணில்**




மே 2019 இலிருந்து, நான்கு இலங்கைப் படகுகள் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவைச் சென்றடைய முயற்சித்தன. இவற்றில் எவையுமே வெற்றிகாணவில்லை. படகிலிருந்த அனைவருமே இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவில் குடியேற முயற்சிக்கும் எவரையுமே அவுஸ்திரேலியா ஏற்றுக்கொள்ளாது. இதில் விதிவிலக்குகள் எவையும் கிடையாது.

நீங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, திருப்பி அனுப்பி வைக்கப்படுவீர்கள். அத்துடன், இனிமேல் ஒரு போதுமே அவுஸ்திரேலியாவுக்குச் செல்லவோ, அங்கு குடியிருக்கவோ அல்லது தொழில் புரியவோ அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

கடந்து ஐந்து வருடங்களில், இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவைச் சென்றடைய எத்தனித்த ஒவ்வொரு ஆட்கடத்தல் படகும், இலங்கை அல்லது அவுஸ்திரேலிய அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத புலம் பெயர்வுக்கான வாய்ப்பு உங்களுக்கு அறவே கிடையாது.


AUSTRALIA.GOV.AU/ZEROCHANCE

Australian Government

அறவே இல்லை





ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் எப்படி?

இருப்பவர்கள் இருந்தால் எங்கள் தேசத்துக் குள் நுழைவார்களா?

திலீபனின் தியாகம் எப்பேற்பட்டது?

**தமிழ் — பருத்தித்துறை**

**திலீபனின் தியாகம் எப்பேற்பட்டது?**

வார்த்தைகளால் சொல்ல முடியாது. அவனது மன உறுதி எப்படிப்பட்டது என்றால் நான் எனது சுய நினைவை இழந்து துடிதுடித்தால் கூட எனக்கு ஒரு சொட்டு நீரைக்கூட வாயில் ஊற்றக் கூடாது.

நான் செய்யும் இந்த அறப்போராட்டம் எனது உயிரிலும் மேலான தமிழ் மக்களுக்கானது. எனது உயிர் போனாலும் போகும். நான் என் கொள்கையில் இருந்து சற்றும் விலக மாட்டேன் என்று அகிம்சையை இந்த உலகிற்கு வெறும் 12 நாட்களில் கற்பித்து விட்டுச் சென்று விட்டான் திலீபன்.

**நிலா — சுழிபுரம்**

**உமக்குக் கோபம் வருவதுண்டா? அப்படி வந்தால் என்ன செய்வீர்?**

வருவதுண்டு வராவிட்டால் நான் மனிதன் இல்லேயே. கோபத்தை எந்த இடத்தில் காட்டவேண்டும், எந்த இடத்தில் காட்டக்கூடாது என்பதை நன்கு கற்று வைத்திருக்கிறேன். அதனால் என்னை ரொம்ப நல்லவன் என்று சொல்கிறார்கள்.

**சுதன் — குப்பிளான்**

**சிங்கள மக்களுக்கு மட்டுமா இறையாண்மை உண்டு?**

அப்படித்தான் சிங்கள ஆட்சியாளர்கள் நினைத்துப் பேசுகிறார்கள், செயற்படுகிறார்கள். சரி அதுதான் போகிறது. அவர்கள் தங்கள் அரசியல் ஆதாயத்திற்காக பேசுகிறார்கள் என்றால்,

மதத்தலைவர்கள் அதைவிட மோசமாகவல்லவா இருக்கிறார்கள். ஒவ்வொரு மதத்தவருக்கென ஒவ்வொரு முறைமை இருக்கிறது.

கிறிஸ்தவர்கள் இறந்த உடலை தேவாலயத்தில் வைத்து ஆத்மசாந்தி செய்வார்கள். அதே இந்துக்கள் 31 நாள் வரை ஆலயப்பக்கம் கூடச் செல்லாமல் இருப்பார்கள்.

இவ்வாறு ஒவ்வொருவருடைய உணர்வுகளையும் புரிந்து கொண்டு நடப்பது இந்த நாட்டுக்கு நல்லது. இல்லையேல் மீண்டும் இரத்த ஆறு ஓட இது வழிவகுக்கும்.

**சயன் — யாழ்ப்பாணம்**

**இது சிங்கள பௌத்த நாடு. விரும்பாவிட்டால் வெளியேறலாமாமே?**

எம் முப்பாட்டன் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தேசம் இது. எங்கள் தேசத்திலிருந்து எம்மை வெளியேறச் சொல்ல இங்கு எவருக்கும் உரிமையில்லை. முதலில் இதை இந்த இடத்தில் பதிவிடுகிறோம்.

ஒரு குட்டிக் கதை: ஒரு திரைப்படத்தில் வடிவேல் சொல்லுவார் புள்ளப்பூச்சிக்கெல்லாம் கொடுக்கு முளைக்குமென்று நான் கனவா கண்டேன் என. இப்போது அதுதான் நினைவுக்கு வருகிறது.

**பானுப்பிரியா — தொண்டைமானாறு**

**ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் எப்படி?**

சஜித் பிரேமதாஸ என அறிவித்து விட்டார்கள். அவரும் ஒரே நட்டுக்குள் இரண்டு இனங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வை வழங்குவேன் எனக் கூறுகிறார். என்னவோ சமீபத்தில் தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வாக்குறுதிகளை நம்பியது வீண் என்று புலப்பட்டது.

இப்போது புதிதாக இதை நாம் கேட்கவில்லை தான். இருந்தாலும் சொல்பவர் புதிதாக இருக்கிறார். பொறுத்திருந்து பார்ப்போமே.

**திகழன் — யாக்கரு**

**இருப்பவர்கள் இருந்தால் எங்கள் தேசத்துக் குள் நுழைவார்களா?**

அட தம்பி அதுதான் இப்போது இல்லையே. அது தான் ஆட்டம் போடுகிறார்கள்.

சரிவிடு. புலியென்று சொல்ல அந்தரப்பட்டு ஓடி மொட்டை மாடியிலிருந்து கீழே விழுந்து கால் முறிந்து கிடந்த காலங்களை அவர்கள் மறக்கலாம் எங்களால் மறக்க முடியாது.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**மாதவி — யாழ்ப்பாணம்**

**தமிழருக்கு அதி உச்ச அதிகாரப் பகிர்வாம் நம்பலாமா?**

காலம் காலமாக சிங்கள ஆட்சியாளர்களால் சொல்லப்படும் தேன்பூசிய பொய்.

ஏனோ அந்தப் 'பகிர்வு'மாயையில் வீழ்ந்து ஆதரவு தெரிவிக்க, அவர் ஆட்சியமைப்பார். அதன் பின் இது சிங்கள பௌத்த நாடு. இங்கு சிங்களவர்களுக்குத்தான் முக்கியத்துவம்.

மற்றைய இனங்கள் வாழலாம். ஆனால் ஏதும் பேசக்கூடாது. நாங்கள் உங்கள் தலையிலும் ஏறி ஆட்டம் போடுவோம். நீங்கள் ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டும். மீறி ஆடி எங்களுக்குச் சேதாரம் ஆகிவிட்டால் எங்கள் பொறுமையை அடக்க முடியாது என்று அறிக்கை விடும் அளவில் வந்து நிற்கும்.

போங்கடா நீங்களும் உங்கட அதிகாரப் பகிர்வும். அடியைப் போல் அண்ணன் தம்பி உதவான். ஆக இதுதான் கற்றுக் கொண்ட பாடம்.

**ஜீபா — கரவெட்டி**

**நீதிமன்றக் கட்டளைகள் மீறப்படுகின்றனவே?**

அண்மையில் தோட்டத் தொழிலாளி ஒருவர் இறந்து விட அவரை அந்த தோட்ட மயானத்தில் தகனம் செய்ய தடை வேண்டி நீதிமன்ற உத்தரவு பெற்றார் அந்தத் தோட்ட முதலாளி.

இதை அறிந்த பாராளுமன்ற உறுப்பினர் பாலித தேவப்பெரும அங்கு விரைந்து சென்று நீதிமன்ற தடையை மீறி அந்த முதியவரின் உடலை அங்கு அடக்கம் செய்தார். அவர் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டார். இதேபோல பிக்குவின் உடலை தகனம் செய்வதற்கும் நீதிமன்றத் தடை விதிக்கப்பட்டது.

ஆனால் அதையும் மீறி அங்கு அவர் உடல் தகனம் செய்யப்பட்டது. ஆனால் இன்னும் இந்தத் தடையை மீறியவர்கள் அழைக்கப்படவில்லை.

**நேதாஜி — வதிரி**

**சம்பவத்தைப் பார்க்கும் போது முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் போல் உள்ளதே?**

எடுக்கலாம் ஆசைதான். ஆனாலும் என்ன செய்ய, பல்லுப் பிடுங்கிய பாம்பாய் தமிழினம் இருக்கும் போது முள்ளை முள்ளால் எப்படி எடுக்க முடியும். குற்றிய முள்ளு வெளியே வர மஞ்சள் அரைத்துக் கட்டி காத்திருக்கும் நிலையில் இருக்கிறது தமிழினம்.

இந்த இலட்சணத்தில் முள்ளை முள்ளால் எடுப்பதா. முதலில் ஏதும் வேலையிருந்தால் பாருங்கள். முள்ளை முள்ளாலெடுப்போமென நீங்கள் அவரைச் சந்திக்கச் செல்வீர்கள். நீங்கள் பேசிக் கொண்டிருப்பீர்கள். ஆனால் அவர் பத்திரிகையை புரட்டிக் கொண்டிருப்பார். இந்த அவமானம் உங்களுக்குத் தேவையா என்ன

**சாரு — யாழ்ப்பாணம்**

**வீட்டில் ஜாம் மரக்கன்று வைக்கக் கூடாதாமே?**

யாரடா இந்த பீதியைக் கிளப்பிவிட்டது. ஜாம் மரம் ஒரு வருடத்தில் மரமாகி நல்ல நிழல் தரக்கூடியது. அத்துடன் அதன் பழங்கள் மிகுந்த சுவையும் சத்தும் உடையது மட்டுமல்ல அந்தப் பழத்தை உண்ண பல வகைப் பறவைகள் வீடு தேடி வரும். இது மனதிற்கு மகிழ்வைத் தரும். இதையெல்லாம் பாராமல் யாரோ கிளப்பிவிடும் வதந்தியை நம்பி நாம் நம்மை முட்டாள் ஆக்க வேண்டாமே.

**பானு — கரவெட்டி**

**பொறுமைக்கும் ஒரு எல்லையிருக்கிறது தானே வியாசரே?**

தாயில்லா பிள்ளைக்கு அடிக்கக் கூடாது என்ற மரபு ஊர்களில் உண்டு. இப்போது தமிழினமும் தாயில்லாப் பிள்ளை தான். ஆரம்பத்தில் கன்னங்களில் அறைந்தார்கள். இப்போது தலைதாழ்த்தி இரண்டு காலிடுக்கிலும் வைத்து முதுகில் கும்முகிறார்கள். ஆண்ட பரம்பரை அடிமையினமாகி மீள வழியின்றித் துடிக்கிறது.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## கருகத் திருவுளமோ

உலக்கை தேய்ந்து தான்
இன்று உளிப் பிடியானதே
கழுதை தேய்ந்து தானின்று
சிறு கட்டெறும்பானதே
ஈழத்தமிழினத்துக்கே
இன்று இவர்களால் இழுக்கு
வெறும்
எலும்புத் துண்டை சுவைக்கத்தான்
இவர்களுக்கு லாயக்கு
கொலைகாரர் கட்சியுடன்
வேண்டாம் கூட்டு என்றே
இனக்கலவரக் கட்சியாருடன்
கோலாகலமான ஒரு கூட்டு
தலைமைகள் ஏலத்தில்
விலைபோகும் நிலைமைகள்
ஏமாற்றிவிட்டார்கள் என்கிறார்கள்
மீண்டும் எம்மை ஏமாற்ற
செயலில் இருந்திடாத தமிழ்த் தேசியம்
பெயருக்கு ஏதோ இருந்தது மெய்
அதுவும் கூட இன்று பொய்
முட்டுக் கொடுத்து வாழ்ந்து பழகியதால்
தட்டிக் கேட்கவும் இன்று திராணியில்லை
அதனால்
உரிமைகளை விட்டுக்கொடுத்துவிட்டு
தம் உடைமைகளைப் பெருக்குகின்றார்
முண்டாசுக் கவிஞன் முன்பு பாடினான்
தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா
இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம்
கருகத் திருவுளமோ?

வாணியழகன்
கிளிநொச்சி



## சிந்தனை செய்ததுண்டா தமிழா!

பாரத தேசத்தின் காந்தியை மிஞ்சிய
எங்கள் ஈழ தேசத்தின் காந்தியான
எங்கள் திலீபனை நாம் மறப்பதுண்டோ– தமிழா?

தமிழர்களின் விடிவுக்காக
பன்னிரண்டு தினங்களும் பட்டினியாகக்
கிடந்து தன்னுயிரை தியாகம் செய்த மாவீரன்
திலீபனை நாம் மறப்பதுண்டோ– தமிழா!

உடல் தளர்ந்த போதிலும் தான் கொண்ட
கொள்கையில் மனம் தளராது மரணத்தை
வென்று தன்மானத்தை காத்த உத்தமனை
நாம் மறப்பதுண்டோ– தமிழா?

திலீபன் திருவாய் மொழிந்த அமிர்தம்
போற்ற வார்த்தைகள் எத்தனையோ?
அத்தனையையும் கேட்டதுண்டோ– தமிழா?

திலீபனைப் போல ஒரு மாபெரும்
தியாகி இவ்வுலகில் கண்டதுண்டோ– தமிழா?

தமிழீழப் போராட்டத்தையும் திலீபனின்
தியாகத்தையும் சிந்தனை செய்ததுண்டோ– தமிழா?

மட்டுவில் க.பிரதிதன்

## எழுந்து வா தமிழினமே!

எழுந்து வாருங்கள்
தமிழினமே
எழுக தமிழுக்கு
ஆதரவு கொடு
எழுந்திராவிடில் விடிவு
நமக்கில்லை
வீழ்ந்த இனம் மீண்டும்
எழும் சந்தர்ப்பம்
விடியலை நோக்கிய
பயணமதில்
வீறுடன் நடை போடு
வெற்றி எம் கண் முன்னே
தெரியும்
எமது வெற்றியை
நாமே தீர்மானிப்போம்
வரும்காலம் நல்லதாய்
அமையட்டும்
சகலரும் நம்மை
திரும்பிப் பார்ப்பர்
சர்வதேசமும்
கண் திறக்கும்
காலம் கனிந்து
வருகின்றது
கண் திறந்து
பார் தமிழினமே
எழுக தமிழ்
பேரணி ஊடாக
ஒரு குரலால்
ஓங்கி ஒலிப்போம்
தமிழர் நாம்
விடிவை நோக்கியே

பெ.தனா
தெல்லிப்பழை

## வதம் செய்யும்

கீழடியில் நம் தமிழன்
ஆண்டான் உலகை என்ற
வியப்புச் செய்தி வெளிவரும் பொது
இங்கு எம்மை விரும்பாவிட்டால்
வெளியேறலாம் என்கிறது பேரினம்

எம் கலாசாரம் பண்பாட்டை
தட்டித் தரைமட்டமாக்கி
நீதியைக் குழி தோண்டிப் புதைத்து
சாது தீக்கிரையாக்கப்படுகிறது

நீரும் வேண்டாம் உம் சகவாசமும் வேண்டாம்
ஆனாலும்
நாம் வாழ்ந்த பூமிக்குள் வராதே
என்று கர்ச்சித்தவருக்கு
எச்சில் சுடுநீர் ஊற்றி
ஏளனம் செய்கிறது போதி பரம்பரை

எமது நிலம்
எமக்கு வேண்டும் என்றோரை
சாதுமிரண்டால் காடு கொள்ளா
என அதட்டல் கதை பேசப்படுகிறது

நீறு பூத்த நெருப்பாய்
கொளுந்துவிடும் எம் நெஞ்சங்களில்
இனவாத எண்ணெய்
ஊற்றப்பட்டுக் கொண்டேயிருக்கிறது

ஊருக்கு உபதேசம்
உனக்கில்லை என்று
சாது ஏது செய்தாலும்
வேடிக்கை பார்க்கிறது
காவலுக்கு நிற்கும் வேலிகள்

ஏது கதைத்தாலும்
இது எமது நாடு
இங்கு நீங்கள் வாழலாம்- ஆனால்
உரிமைகொள்ள முடியாது என
வாதம் பேசுகிறார்
வதம் செய்யும் எண்ணத்துடன்

மாவை. நா. கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 466



## எழுக தமிழ்

விருட்சம் தரும் விதைகளாய்
எழுந்து நிற்கும் தமிழ்– இன்று
பாறைகள் மீது வீசப்பட்டதோ!
முடங்கிப் போக மூட்டைப் பூச்சியென
நசுக்கிவிட நினைத்தீரோ!
மறந்தீரோ அவன் மரபனு தமிழ்
இது மொழி அல்ல
சிற்பம் செதுக்கும் உளி
வெல்க தமிழ்! எழுக தமிழ்

நிருஷினி
ஆனந்தராஜன்

## மௌனத்தின் தேடல் –467



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## நாம் ஒன்றுபடுவோம்

எழுக தமிழ் போராட்டம் மூலம் தம்
உரிமைகளைக் கேட்டு
யாழ். முற்றவெளியில் அலையலையாய்
திரண்டெழுந்த தமிழினமே
உங்கள் ஒற்றுமை நம்மிடம்
என்றுமிருந்தால் நிச்சயம் நம்
வாழ்வு விடியும்–அதை எந்தக்
கொம்பனாலும் தடுக்க முடியாது

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## எழுக தமிழ்

மழலையின் முதல் வார்த்தை
அம்மா என்ற பாசத்தமிழ்
பள்ளிப் படிப்பில் எழுத்து
வடிவம் தந்ததும் அழகிய தமிழ்
பெரியவனாக வளர்ந்தும்
பேசியதும் பாடியதும்
எழுதியதும் எங்கள் தமிழ்
இன்றோ உரிமை கேட்டு
உன்னத வாழ்வு தேடிடும்
பெரிய தமிழ் எழுக தமிழ்
எழுக தமிழ் என்றே பாடிடுவோம்

அபிகுலமாலிகா, சங்கானை

## ஏற்றம் கொண்டு எழுக தமிழே

தமிழர் நாம் தலைகுனிந்து
வாழ்ந்தது போதும்
வாட்டத்துடன்
தன்மானம் காத்திடயிங்கே
தாயகம் அமைத்திட வாரும்
முடிசூடியாண்ட
மூவேந்தர் வழிவந்த
முத்தமிழிங்கே மூடர் கையில்
முடங்கியதாலா?
உரத்த குரலில் எழுக தமிழை
உரைத்து உலகக்குணர்த்தி
எம்மினத்தின் விடிவிற்காய்
எழுச்சி பெற்றெழுவாய்
எழுக தமிழால் என்னவாகும்
என்று எதிரிகள் கொக்கரிக்க
எம்மினம் ஒன்றுதிரண்டால்
எதுவுமாகும் என்று
நாம் எடுத்துரைக்க
ஏற்றம் கொள்வாய்
எழுக தமிழே

சி.திவ்வியா
யா/ப.மெ.ம.வி.

## இருள் விலக

தமிழின் தொன்மையை
மனோன்மணியாசிரியர்
கல்தோன்றி
மண்தோன்றா
காலமென்று கூறுவார்
இது மிகைபோல்
தெரிந்தாலும்
இதன் உள்ளார்ந்த
சாரத்தை
பின்வந்தோர்
நன்குணர்ந்து
இன்னல்கள்
யாவும் விலக
அமுதத் தமிழுக்காக
முன்கோபதாபங்களை
புறம்தள்ளிவிட்டு
குரல் கொடுத்திருந்தால்
இருள் விலகியிருக்கும்

ப.ஷோபிகா
சாவகச்சேரி

## காவல்காரன் யாரு?


தமிழுக்கு அமுதென்றும்
பெயர்– ஆனால் தமிழனோ
வேற்றிடம் சென்று
பலபல மொழிகளைக்
கற்று வந்து
தமிழை மறந்தும் மறைத்தும்
வாழ்கின்றான் சுயநலமாக
யாழ்ப்பாணத்தில் தமிழ்
அழிந்து போகும் கட்டத்தில்
தமிழைக் காப்பாற்றுவது யாரு?
எழுக தமிழ் ஊர்வலத்தில்
கலந்து கொள்வது யாரு?
சிங்களப் பாதுகாப்பு
படையினர் மட்டும்
தானா? காவலுக்கு

இரா.ஜெ.துஷ்யந்தா
சூராவத்தையூர்

## தமிழருக்காய் எழுந்த எழுக தமிழ்

தமிழருக்கு நேர்ந்த
பிரச்சினைகளுக்கு
நீதி கேட்கவும்
தமிழர்தம் உரிமைகளை
வென்றெடுக்கவும்
தமிழருக்காய்
எழுந்தது எழுக தமிழ்
இன அழிப்புப்
போராட்டம்
முடிவுற்று பத்து
வருடங்கள் கழிந்தும்
தமிழ் மக்களுக்கு
தீர்வு கிட்டாமையால்
எழுக தமிழ்
எழுச்சி பெற்று
வெற்றி பெற்றதுவே

இ.தனுப்பிரியன்
தொல்புரம் கிழக்கு



சிறுகதை

# பொக்கிஷம்

இனிய தென்றல் உடலை வருஷ்சென்ற போதும்... பேரம்பலத்தாரின் கண்கள் மட்டும் வீதியோர வாசல் கதவை கூர்ந்து பார்த்த வண்ணம் இருந்தது. பேரம்பலத்தாரின் மனதில் ஏதோ ஏக்கம் குடி கொண்டிருந்தது. வீட்டு முற்றத்தில் பலா மரம் ஒரு கரையாகவும் வேப்ப மரம் இன்னொரு கரையாகவும் இருந்து குளிர்ச்சி தந்து பரந்து விரிந்திருக்க கனகேஸ்வரியுடன் வாழ்ந்து ஆறு பிள்ளைகளைப் பெற்றெடுத்து கடுமையான வறுமையின் மத்தியிலும் தோட்டத்தின் மூலம் வந்த வருமானத்தால் பிள்ளைகளை படிப்பித்து வைத்தியர் ,பொறியியலாளர், ஆசிரியர், வங்கி முகாமையாளர் ,அரசாங்க அதிபர், தொழிலதிபர் என உருவாக்கி குடிசையில் வாழ்ந்த மனிதன் மூன்று மாடி வீடு கட்டி வாழ்ந்தாலும் இன்று முதியோர் இல்லத்திலிருந்து வாசலை உற்றுப்பார்க்க வேண்டிய நிலைமைதான் காணப்படுகின்றது.

வாசலை ஒற்று நோக்கிய பேரம்பலத்தாருக்கு கதை கொடுத்தார் சண்முகத்தார். "என்ன ஜயா? நானும் ஒரு வாரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறன் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது போல இருக்கு. உங்கட மனைவியும் உங்களுடன் இங்கு தான் இருக்கிறா... பிறகு யாரை எதிர்பார்க்கிறியள்... என்றதும் பேரம்பலத்தார் தொடர்ந்தார். இல்லை நாளை மறுதினம் ஐப்பசி முதலாம் திகதி முதியோர் தினமும் சிறுவர் தினமும் ஒன்றாய் வருகிறது. முல்லைத்தீவிலிருக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் ஏதாவது வாங்கிக் கொடுத்து விட வேண்டும். அதுதான் யாரும் தெரிந்தவர்கள் வருகிறார்களா? என்று பார்க்கிறன் என்று பெருமூச்சுடன் சொல்லி முடித்தார்.

என்ன ஜயா ஆறு பிள்ளை பத்து பேரப்பிள்ளைகள் என்று இருந்தும் இன்று நீங்கள் முதியோர் இல்லத்தில் இருக்கிறியள். பிறகு எதற்கு இந்த ஏக்கம் என்றதும் பேரம்பலத்தாருக்கு கோபம் பத்திக் கொண்டு வந்தது. "ஏதோ நீ மட்டும் தனியாளா இருந்து முதியோர் இல்லத்திற்கு வந்தது போல கதைக்கிறாய்" எல்லாரும் ஒரு காலத்தில சோலை யா இருந்தவர்கள் தான்... நாங்கள் எங்கள் சுய விருப்பின் பெயரில் தான் இங்க வந்தனாங்கள் இங்க வந்தப்பிறகு தான் உறவுகளை விட்டுவிட்டு தனியாக இருப்பதன் வலிபுரியுது என கூறியவர் தனது கடந்த காலத்தை சண்முகத்தாருக்குச் சொல்ல தொடங்கினார்...

நான் சாதாரண விவசாயக் குடும்பத்தில் தான் பிறந்தவன். சிறு வயதில் நன்றாகப் படிக்கக்கூடிய நான் வீட்டுச் சூழ்நிலை காரணமாக என் படிப்பினை இடைநடுவில் நிறுத்தி விட்டு விவசாயம் செய்யத் தொடங்கி அதில் வந்த வருமானத்தால் என் தாய் தந்தையை காப்பாற்றியது மட்டுமல்லாது எனது சகோதரர்களையும் படிப்பித்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்தேன். பிறகு எனக்கென்று ஒரு வாழ்க்கையினை பெற்றோர் விருப்பத்திற்கிணாங்க கனகேஸ்வரியுடன் ஆரம்பித்தேன். உண்மையில் கனகேஸ் எனக்கு கிடைத்த பெரும் செல்வம். என் நிலைமையினை உணர்ந்து அதற்கேற்ப வாழ்க்கையினை நடத்தினாள். என்னுடன் இணைந்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டாள். அந்தக் காலத்தில் தான் அரசினால் மூடிய பொருளாதார கொள்கை கொண்டு வரப்பட்டது. இதனால் எமது விவசாய உற்பத்திகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட வருமானமும் கைநிறையக் கிடைத்தது. நாங்களும் தமிழர் எண்ணிக்கையை பெருக்குவம் என்று நான்காவது பிள்ளை பெற்றெடுத்த கையோடு திறந்த பொருளாதாரக் கொள்கை வந்ததும் எங்கட மக்கள் வெளிநாட்டு நுகர்ச்சிப் பொருட்களை நாடிச் செல்ல உள்ளூர் உற்பத்திகளுக்கான கேள்வி குறைவடைய மீண்டும் வறுமையை நோக்கி நம் வாழ்க்கை நகர்வடைந்தது. இருந்தாலும் நாங்கள் தொடர்ந்தும் முயற்சி செய்து எமது பொருட்களைச் சந்தைப்படுத்தி வருமானத்தைப் பெற்று மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தியது மட்டுமல்லாது தொடர்ந்து ஐந்தாவது ஆறாவது பிள்ளைகளைப் பெற்றோம். ஆறாவது மகன் ஆறுமுகன் பிறந்தது ஆடி மாதம். அந்த மாதம் தான் ஆடிக் கலவரம் தலைதூக்க எமது பிழைப்பு மிகவும் கஷ்டமாகிப் போனது... வறுமையின் பிடியில் நாங்கள் சிக்கிக் கொண்டாலும் பிள்ளைகளைப் படிப்பித்து பெரியவர்களாக்க வேண்டும் என்பதில் நானும் கனகேஸ்சும் குறியாக இருந்தோம். கனகேஸ் தான் ஒருநேரம் சாப்பிட்டாலும் பரவாயில்லை. பிள்ளைகள் மூன்று நேரமும் சாப்பிட்டு ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்று இயற்கை அன்னை எமக்குத் தந்த கொடைகளில் இருந்து பச்சை மரக்கறிகளையும் இலை வகைகளையும் உணவாகக் கொடுத்து பிள்ளைகளை வளர்த்தெடுத்தாள்.

இந்தக்காலம் மாதிரி மருந்தடித்த மரக்கறிகளோ, கலப்படமான உணவுகளோ இல்லை. அதுமட்டுமல்ல வெளிநாட்டுக் காசும் வருவதில்லை. பெற்றோர் ஆசிரியர்களை மதித்து அவர்கள் சொல் கேட்கும் சமூகமும் ,கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு திருப்தியானதும் ஆரோக்கியமானதும் வாழ்வினை நடத்திய மக்களும் தான் வாழ்ந்தனர் என்று தொடர்ந்து மூச்சுவிடாது சொன்ன பேரம்பலத்தார் மெல்ல மூச்சை விட்டார்.

மீண்டும் தொடர்ந்தார் பேரம்பலத்தார். இப்ப மாதிரி நகர்புற இழுவிசையில் சிக்குண்டு பிள்ளைகள் சின்னாபின்னமாகவில்லை. என்வீட்டுக்கு அருகில் இருந்த பாடசாலையிலையே என் ஆறு பிள்ளைகளையும் படிப்பித்தன். கடைசி பொடி ஏழாம் தரம் படிக்கும் போது யாழ்ப்பாணத்தை விட்டு இடம்பெயர்ந்து பல இன்னல்களை சந்தித்த போதும் ஒரு நாள் விடியும் என்ற நம்பிக்கையில் எல்லாத் துன்பங்கள்,இன்னல்களையும் தாங்கி கொண்டு வாழ்ந்தோம். இங்கு கவனிக்க வேண்டிய ஒரு விடயம் நாங்கள் எத்தனை தடவை இடம்பெயர்ந்தாலும் முதலில் எடுத்துக் கொண்டு செல்வது பிள்ளைகளின் புத்தகங்களைத் தான்.... இதனால் தான் மூத்தவள் வங்கி முகாமையாளர் , இரண்டாவது மகன் பொறியியலாளர், மூன்றாவது மகள் வைத்தியர் நான்காவது மகள் ஆசிரியர், ஐந்தாவது பொடி அரசாங்க அதிபர், கடைக்குட்டி தொழிலதிபர் என்று பெரிய பதவிகளுக்கு வர முடிந்தது. இவர்களைத் திருமணம் செய்து வைத்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தில வாழுகிறார்கள். நாங்கள் எவ்வளவு இன்னல்களின் மத்தியில் பிள்ளைகளை வளர்தது பிள்ளைகளுக்குத் தெரியும். அதனால ஒரு பிள்ளைகளும் எங்களை ஒதுக்கி வைக்கல வேலை நிமிர்த்தம் மூத்தவளும் இரண்டாவதும் கொழும்பிலும் மூன்றாவது கண்டியிலும் நான்காவது வவுனியாவிலும் ஐந்தாவது முல்லைத்தீவு கடைக்குட்டி மட்டும் இப்ப ஊரில இருக்கு அவனுக்கு இப்பத்தான் திருமணம் செய்து வைத்தோம். சின்னஞ் சிறுசுகள் சந்தோசமா இருக்கட்டும் எங்களுக்கும் வயசாகிப் போச்சு எங்களால் அவர்களுக்கு கரைச்சல் ஒன்றும் வரக் கூடாது என்று தான் நாங்களாக இங்கு வந்து சேர்ந்தோம். கடைசி மருமகள் எங்களை இங்குவிடமாட்டன் என்று ஒற்றைக்காலில் நின்றாள் நாங்கள் தான் இதை விரும்பித் தேர்ந்தெடுத்தோம்... என்றதும் சண்முகத்தார் எடுத்து விட்டார்

"ஐயா நீங்கள் கொடுத்து வைத்தவர்" மருகள் கூட நீங்கள் முதியோர் இல்லம் வர வேண்டாம் என்று மறிக்க மறிக்க இங்கு வந்துள்ளீர்கள். நான் ஒன்றே ஒன்றைப் பெற்று கண்னே கண்ணென்று அதிக செல்லம் கொடுத்து வளர்த்து விட அவன் திருமணம் கட்டியதும் நான் வீட்டில இருந்தால் தங்களுக்கு பெரும் கரைச்சல் என்று என்னைக் கொண்டு வந்து இங்க சேர்த்து விட்டு தானும் மனைவியும் மட்டும் அந்தப் பெரிய வீட்டில வாழுகிறார்கள். எது எப்படியிருந்தாலும் அவர்கள் நல்லாக வாழ்ந்தால் எனக்குப் போதும்...

இவ்வாறு இருவரும் கதைத்துக் கொண்டிருக்கும் போது முதியோர் இல்ல வாசலில் ஒரு கார் வந்து நின்றது யார் என இருவரும் ஆவலுடன் பார்த்தார்கள் அது வேறு யாருமில்லை. பேரம்பலத்தாரின் அரசாங்க அதிபர் மகனும் அவனுடைய மனைவி மற்றும் மூன்று பேரப்பிள்ளைகளும் தான். பேரம்பலத்தாரின் சந்தோசத்திற்கு எல்லை இல்லை "வாங்கடா என்ட செல்லங்களா என்று கூறியவாறு எழுந்து விரைந்து சென்று மூன்று பேரப்பிள்ளைகளையும் இறுக்க கட்டியணைத்து நெத்தி முகர்ந்தார். "என்னப்பா கோகுலன் நலமா இருக்கிறீயா மருமகளே நீங்கள் எப்படியிருக்கிறீர்கள் என தொடர் வினாக்களைத் தொடுத்தார். கோகுல் குரல் கொடுத்தான் "அப்பா அம்மா எங்கே? இருவரும் வாங்கோ எங்கட வீட்டுக்குப் போவோம்.. நான் வருகின்ற மாதம் இங்கு மாற்றலாகி வரப் போறன் என்னுடைய குடும்பத்துடன் நீங்கள் இருக்கலாம் எல்லாப் பிள்ளைகளும் அழைத்தும் கூட மண்ணையும் வாழ்ந்த மனையையும் விட்டு வரமாட்டன் என்று சொல்லிவிட்டு இங்கு வந்து விட்டிர்கள். இனி நான் நீங்கள் வாழ்ந்த பூர்வீக நிலத்திலேயே வாழப் போறன் இனி ஒரு சாட்டும் சொல்லாமல் எங்கள்டன் வாங்கோ என்றதும் பேரம்பலத்தார் மறுத்தார்.

"இங்க பார் கோகுல் நீ அங்க இங்க என்று கூட்டங்களுக்குப் போக வேண்டி வரும் அலுவலக வேலையாக வெளியில் செல்ல வேண்டியேற்படும். பிறகு எங்களால் மருமகளுக்குத்தான் சிரமம். பேசாமல் போய்சந்தேசமாக வாழ். இந்த முதியோர் இல்லத்தில் பக்குவமாக பார்த்துக் கொள்கிறார்கள். சகோதரர்கள் போல இந்த சண்மு மற்றும் பலர் இருக்கிறார்கள். நாங்கள் உங்களுக்கு சுமையாக இருக்கவிரும்பவில்லை.. நாங்கள் "சுமைதாங்கியாக இருந்தது" போதும் நீங்கள் மகிழ்வாக இருந்தால் அது போதும் என்று சொல்லி வாய்மூட முன் மருமகள் தொடர்ந்தாள்

"இல்லை மாமா நீங்கள் சுமையல்ல எங்களுக்கு முதிசம் ஆண் வீட்டுச் சீதனம் உங்களைப் பொக்கிஷமாகப் பார்க்க வேண்டியது எங்கள் பொறுப்பு நீங்கள் எங்களுடன் நிச்சயம் வரவேண்டும் வாங்கோ என்று கையைப்பிடித்து கேட்டாள். மறுக்க முடியாதவராக விழித்துக் கொண்டிருந்த பேரம்பலத்தாருக்கு "பேரப்பிள்ளைகளின் குரல் அப்பப்பா நாளை மறுதினம் சிறுவர் தினத்தன்று அப்பா முல்லைத்தீவிலிருந்து இங்கு வந்திடுவார் நாங்கள் இன்றே இங்கு வாந்திடுவோம் சிறுவர் தின அன்பளிப்பாக நீங்களும் அப்பம்மாவும் எங்கட வீட்ட வாங்கோ வேற பரிசு ஒன்றும் எங்களுக்கு வேண்டாம் என்றதும் ஒன்றும் செய்ய முடியாதவராய் முதியோரில்லத்தில்ஆகவேண்டியவேலைகளை முறைப்படி முடித்து விட்டு மனைவி கனகேஸ்வரியுடன் மகனின் காரில் ஏறிப் புறப்பட்டார்.

பேரம்பலத்தார் செல்வதில் சண்முகத்திற்கு மகிழ்ச்சியிருந்தாலும் தானும் தன் மகன் மற்றும் மருமகளுடன் இருக்க வேண்டும் என்ற ஏக்கம் சண்முகத்தாருக்குள் இருக்க, முதியோர் தினம், சிறுவர் தினம் என்று கொண்டாடப்பட்டாலும் "குடும்ப தினம்" என்று ஒன்று எல்லா உறவுகளும் ஒன்றாக இணைந்து மகிழும் ஒரு தினமாக கொண்டாடப்பட வேண்டும் என எண்ணியவாறு வாசலை நோக்கி தன் பார்வையை விரித்தார் சண்முகத்தார்.

அரியாலையூர்
குணரத்தினம் பிரதீபன்

# நான் உணர்வு இழந்த பிறகும் என்வாயில் ஒருசொட்டு நீர்கூட ஊற்றக்கூடாது

## கொண்ட கொள்கையில் உறுதியாய் நின்ற பார்த்தீபன்





**என்ன மிஞ்சியது, நில உரிமை இல்லை, வரி வசூல் செய்யும் உரிமை இல்லை, பொலிஸ் அதிகாரம் இல்லை, கல்வி உரிமையில் பாகுபாடு... எனில் அவர்கள் கொடுக்கும் மாகாண முதல்வர் எனும் அதிகாரத்தால் என்ன செய்துவிட முடியும்?**

இன்றிலிருந்து சரியாக 32 ஆண்டுகளுக்கு முன்பாக, உலகின் தென் கிழக்கு மூலையில் 23 வயது இளைஞன் ஒருவன் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தான். அவனுக்குப் பெற்றோர் இட்ட பெயர் பார்த்திபன். இயக்கம் தந்த பெயர் திலீபன். ஆம், பெயரின் மூலம் சாதி, மதம், பிராந்தியம் அறிந்து அதன் மூலம் சிறு பிரிவு ஏற்படா வண்ணம், தமிழ்ப்பெயர் சூட்டிக்கொள்ளும் கட்டுப்பாடும் ஒழுக்கமும் நிறைந்ததொரு இயக்கத்தின், பிராந்திய அரசியல்துறை பொறுப்பாளன். உண்ணா நோன்பு என்றாலே நகைப்புக்குரிய ஒன்றாக மாறிவிட்ட இக்காலச் சூழலில், கொண்ட கொள்கைக்காக சொட்டு நீர் அருந்தாமல் உயிர் துறந்து, உலகத்தின் செவிப்பறைகளில் உண்ணா நோன்பின் மகத்துவத்தை ஓங்கி ஒலித்தவன் அவன். பிறந்த மூன்றே மாதத்தில் தன் தாய்மடி இழந்தவன், 23 வயதில் தன் தாயகத்தின் மடியில் உயிர் துறந்தான்.

**எதற்காக, ஏன், எப்படி?**

சிங்கள ஆட்சியாளர்களிடம் அடிமைப் பட்டிருந்த தன் தாய் நிலத்தை, தன் இன மக்களை மீட்கும் போராட்டத்தில் சின்னஞ் சிறுவயதிலேயே, தன்னை இணைத்துக்கொண்டான். ஏற்கெனவே ஓர் இனத்தின் கொடுமையை, ஆதிக்கத்தைத் தாங்கமுடியாமல் துயருற்ற நேரத்தில், இரு இனங்களுக்கிடையே சுமுக உறவை உண்டாக்க இந்தியப் பெருநிலத்திலிருந்து, வந்த அமைதிப் படையின் ஆதிக்கமும் சேர்ந்துவிட செய்வதறியாது திகைத்தனர் ஈழத்தமிழ் மக்கள். போராட்டக் குழுக்களுக்கிடையிலும் பெரும் குழப்பங்கள். நாவிழந்து நாதமணி பேச்சிழந்து தூண் துவண்ட மாதிரியாகப் போய் முடியப் போகிறாயா..

**"காற்றே நீ நிறுத்து;<br>கடல் அலையே நீ நிறுத்து;<br>கூற்றுவனா அவனைக் கொண்டு<br>வந்து தூக்கிலிடு"<br>ஈழக்கவி புதுவை ரத்தினதுரை<br>இப்பெரிய தேசத்தை எதிர்த்து நிற்பதா? சரணடைவதா இல்லை அவர்கள் கொடுப்பதைப் பெற்றுக் கொண்டு மண்டியிடுவதா?"**

கொடுப்பதைப் பெற்றுக்கொண்டு மண்டியிடுவதற்கா இத்தனை ஆண்டுக்காலப் போராட்டம். தம் முன்னோர் முப்பதாண்டுக்கும் மேலாக அமைதி காத்ததன், அறவழியில் போராடியதன் விளைவு தான் என்ன?

என்ன மிஞ்சியது, நில உரிமை இல்லை, வரி வசூல் செய்யும் உரிமை இல்லை, பொலிஸ் அதிகாரம் இல்லை , கல்வி உரிமையில் பாகுபாடு... எனில் அவர்கள் கொடுக்கும் மாகாண முதல்வர் எனும் அதிகாரத்தால் என்ன செய்துவிட முடியும், கூடுதலாகக் கொடுக்கும் அடக்கு முறைகள் வேறு. அதற்குப்பிறகுதான் ஈழத் தமிழ் இளைஞர்களின் கையில் ஆயுதம் வந்து சேர்ந்தது. சிங்களப் படையின் ஆயுதங்களுடன் நேருக்கு நேர் மோதியது.

அத்தகைய சூழலில்தான் இந்தியப் படை ,அமைதியை நிலைநாட்ட ஈழ மண்ணுக்குள் நுழைந்தது.

அமைதி ஒப்பந்தம் என்கிற பெயரில் ஈழத் தமிழ் மக்களின் உரிமைகள் பறிபோக மீண்டும் ஓர் ஒப்பந்தம் கையொப்பமானது. ஈழ மக்கள் அதை ஏற்றுக் கொள்ளவும் நிர்பந்திக்கப்பட்டனர். அதை மறுத்த காரணத்தால், அமைதியை நிலைநாட்ட வந்தவர்கள் தந்த ஆயுதங்களும் ஈழத் தமிழ் மக்களை கொன்றொழிக்க, அவர்களுக்கு, அவர்களின் வழியிலேயே பதில் சொல்லத் துணிந்தான் திலீபன். உண்ணா நோன்பு, அஹிம்சை வழி என மகாத்மா காந்தி இவ்வுலக்கு விட்டுச் சென்ற போராட்ட வழிமுறையை கையிலெடுத்தான்.

**"நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து இறுதி விடைபெறுகிறேன்.-திலீபன்"**

"பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, இன்னமும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள், உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

வடகிழக்கு மாகாணங்களில், பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவ்து உடன டியாக நிறுத்தப்பட வேண்டும்.

இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில், ஊர்க்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப்பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் குடி கொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்" என்ற ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து, நல்லூர் முருகன் ஆலயத்துக்கு முன்பாக 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி உண்ணா நோன்பைத் தொடங்கினான் திலீபன்.

கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாவிரதம் இருப்பேன். ஒரு சொட்டு தண்ணீர்கூட குடிக்க மாட்டேன். மருத்துவப் பரிசோதனை செய்யக் கூடாது.

**"நான் உணர்வு இழந்தபிறகும் வாயில் தண்ணீர் ஊற்றக் கூடாது. இறக்கும் வரை எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக் கூடாது - திலீபன்**

"திலீபன் அழைப்பது சாவையா. இந்தச் சின்ன வயதில் இது தேவையா"" எனும் சோக முழக்கங்களோடு, கூட்டம் கூட்டமாக திலீபனைக் காணவந்தனர் ஈழத் தமிழ் மக்கள். தான் அங்கம் வகித்த இயக்கத்தின் தலைவர், இந்த உண்ணா விரதம் வேண்டாம் என்று சொல்ல,

"நமது கொள்கையின் தீவிரத்தை நிரூபிக்க இதைவிட்டால் வேறு வழியில்லை. நாம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்கவில்லை என்பதை ஈழ மக்களுக்கும் தமிழக மக்களுக்கும், உலகத் தமிழர்களுக்கும் சொல்ல வேண்டிய தருணம் இது. இன்னொரு இராணுவம் எங்கள் மண்ணில் நிலை கொள்வதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பதையும் அழுத்தமாகச் சொல்லவேண்டிய தருணம். அதையும் இந்தியாவின் வழியிலேயே சொல்ல உண்ணாவிரதம்தான் ஒரே வழி " என்று பதில் சொன்னான்.

திலீபனின் உண்ணா நோன்பு அஹிம்சை தேசத்து ஆட்சியாளர்களின் காதில் விழாததால், அவனின் கோரி க்கை ஏற்கப்படாததால், காந்திய தேசம்தானே, காந்திய வழிப் போராட் டத்தை ஏற்பார்கள் என அவன் கொண் டிருந்த நம்பிக்கை சிதைக்கப்பட்டதால், பன்னிரண்டாம் நாள் (26.9.1987) மண்ணை விட்டுப் பிரிந்தான் தியாகி திலீபன்.

அவன் மறைந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகும், அவன் முன்வைத்த அதே ஐந்து அம்சக் கோரிக்கைகள் உட்பட ஆறு அம்சக் கோரிக்கைகளோடு, கடந்த வாரம் "எழுக தமிழ் எழுச்சிப் பேரணி" பல்லாயிரக்கணக்கான ஈழ மக்கள், யாழ்ப்பாண மண்ணில் போராட்டம் நடத்தினர். ஈழ மண்ணில் மட்டு மல்லாது, இனப்படுகொலைக்கு நீதி கேட்டு உலகெங்கும் பேரணிகள் நடந்தன.




ஆயுதப்போராட்டம்தான் ஈழத் தமிழ் மக்களின் உரிமைக்குத் தடையாக இருக்கிறது எனப் பேசியவர்கள், அது கைவிடப்பட்டு பத்தாண்டுகள் ஆன பின்பும் அதே நிலை நீடிப்பது குறித்து வாய் திறக்காமல் மௌனியாக இருக்கிறார்கள். எனில், அங்கே அமைதிக்குத் தடையாக ஆயுதமோ அஹிம்சை வழிப் போராட்டங்களோ இல்லை என்பது நிரூபணமாகிறது. மறுக்கப்படும் உரிமைகள்தான் அம்மக்களை மீண்டும் மீண்டும் போராடத் தூண்டுகிறது என்பதும் புலப்படுகிறது.

பார்த்தீபன் இப்போது மட்டுமல்ல, ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளும் அவர்களுக்கான நீதியும் மறுக்கப்படும் காலம் வரைக்கும் பசியோடுதானிருப்பான்... பசியோடுதானிருப்பான்.

**நன்றி: விகடன்**

# போராடினேன்... தேர்ச்சி பெற்றேன்... ஒதுக்கப்பட்டேன்

## பாயும் யுவராஜ் சிங்

"போராடுவது, வீழ்வது அந்த வீழ்ச்சியிலிருந்து எழுந்து மீண்டும் முன்னேறி நடப்பது எப்படி என்பதை இந்த விளையாட்டு எனக்குக் கற்றுத்தந்தது. அது ஓர் அழகான கதை. அந்தக் கதை இப்போது முடிவுக்கு வந்தது" ஓய்வு முடிவை அறிவித்தபோது, யுவராஜ்சிங் உதிர்த்த வார்த்தைகள் இவைதான். அந்தக் கதையின் முடிவு யுவராஜ்க்கு மட்டுமல்ல இந்திய ரசிகர்களுக்கும் நிறைவைக் கொடுக்கவில்லை. ஓய்வு என் வாசலையும் ஒருநாள் தட்டும் என எல்லா வீரனுக்கும் தெரியும். இந்தியாவின் கனவையும் ஏக்கத்தையும் தீர்த்தவன். தனது விருப்பத்தை செவிகொடுத்துக் கேட்க ஆள் இல்லாத விரக்தியில், யுவி எனும் மகத்தான வீரன் தனது ஓய்வை அறிவித்தான்.

ஓய்வு முடிவு, இந்திய அணியில் சந்தித்த பிரச்சினைகள் குறித்து செய்தி ஊடகமான Aaj Tak -யிடம் யுவராஜ் பேசியுள்ளார். "கேன்சரில் இருந்து நான் மீண்டு வந்த பின்னர், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். உள்ளூர் தொடர்களில் சரியாக ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் இரண்டு வருடங்களாகத் தடுமாறினேன். அந்தச் சூழலில் கடுமையாக உழைத்தேன். அதன் பலனாக மீண்டும் இந்திய அணிக்குத் திரும்பினேன். இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில், எனது அதிகபட்ச ஓட்டங்களைக் குவித்தேன். அது மிகப்பெரிய சாதனை. ஆனால், அதன் மறுபக்கம் மிகவும் வேதனையானது. நிர்வாகத்திடம் இருந்தோ அல்லது அதைச் சுற்றியிருந்த மக்களிடம் இருந்தோ எந்த ஆதரவும் இல்லை. எனக்கு அந்த ஆதரவு கிடைத்திருந்தால் உலகக் கோப்பையில் ஆடியிருப்பேன்.

நான் எந்த கோட் பாதரையும் கொண்டிருக்கவில்லை. புற்றுநோயிலிருந்து மீண்டு வந்து கிரிக்கெட் ஆடியதே மகிழ்ச்சி. 2017 அணியிலிருந்து ஓரங்கட்டப்பட்ட சமயத்தில், நான் 8 முதல் 9 போட்டிகளில் விளையாடியிருந்தேன். அதில், 2 போட்டிகளில் ஆட்ட நாயகன் விருது பெற்றேன். அப்போது, என்னுடைய ஆவரேஜ் 42 ப்ளஸ் , ஸ்ட்ரைக் ரேட் 98 ஆக இருந்தது. மிடில் ஆர்டரில் சிறப்பாகத்தான் செயற்பட்டிருந்தேன். காயம் காரணமாக, மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான இருபது-20 போட்டியிலிருந்து விலகினேன். இலங்கை அணிக்கு எதிரான தொடருக்குத் தயாராகும் விதமாக அந்த முடிவை எடுத்தேன். அந்தக் காலத்தில் திடீரென யோ-யோ டெஸ்ட் இந்திய அணியில் அறிமுகமானது. என்னுடைய தேர்விலும் அது ஒரு திருப்பு முனையாக மாறியது. 36 வயதில் யோ-யோ டெஸ்டுக்காகக் கடுமையாக உழைத்தேன். என்னால் அதில் தேர்ச்சிபெற முடியாது என்றே நினைத்தார்கள். யோ-யோ டெஸ்டில் தேர்ச்சியடைந்தேன். மீண்டும் உள்ளூர் தொடர்களில் விளையாட அறிவுறுத்தப்பட்டேன். ஏற்கனவே, அதைத்தான் செய்துகொண்டிருந்தேன்.


உண்மையில் நான், யோ-யோ டெஸ்ட்டில் தேர்வாக மாட்டேன் என்றுதான் அவர்கள் நினைத்திருந்தார்கள். ஏனெனில், அது சற்றுக் கடினமானதாக இருந்தது. அதுமட்டுமல்லாமல், நான் அதில் தேர்ச்சிபெறவில்லை என்றால், என்னிடம் எளிதாகத் தெரிவித்துவிடலாம் என நினைத்திருக்கலாம். சர்வதேச கிரிக்கெட்டில் 15 முதல் 17 வருடங்கள் விளையாடிய ஒரு வீரரை எதற்காக ஒதுக்குகிறீர்கள் எனக் கூற வேண்டும். நீங்கள் அவருடன் அமர்ந்து காரணத்தை விளக்க வேண்டும். யாரும் என்னிடம் எதுவும் தெரிவிக்கவில்லை.

எனக்கு மட்டும் இந்தப் பிரச்சினையில்லை. விரேந்திர சேவாக், ஜாகீர் கான் ஆகியோரிடம் தெரிவிக்கவில்லை. அவர்களை ஒப்பிடும்போது, நான் அந்த அளவிற்கு கிரிக்கெட் ஆடவில்லை. ஆனால், ஒரு வீரரை ஒதுக்கும்போது அவரிடம் சரியான காரணத்தைக் கூற வேண்டும். அந்தப் பொறுப்பில் இருப்பவர்கள் சம்பந்தப்பட்ட நபரை அழைத்து, இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கும்பொருட்டு இந்த முடிவை எடுத்துள்ளோம் எனக் கூறலாம். முதலில் வருத்தமாகத்தான் இருக்கும். ஆனால், முகத்திற்கு நேராக உண்மையைக் கூறினார்கள் என்று பெருமை கொள்ளலாம்.

உலகக்கோப்பை தொடரில் அரையிறுதியுடன் இந்தியா வெளியேறிய தற்கு, தெளிவு இல்லாத முடிவே காரணம். நான் ஓரங்கட்டப்பட்ட பின் மனிஷ் பாண்டே, கே.எல்.ராகுல் இன்னும் 2 வீரர்கள் அணியில் இடம் பிடித்தனர். கே.எல்.ராகுலைக் கொண்டு வந்தனர். அதன்பின் ரெய்னா ஆடினார். ராயுடுவுக்கு சிறிது மாதங்கள் வாய்ப்பு அளிக்கப்பட்டது. அவரும் 8 மாதங்கள் தொடர்ந்து ஆடினார். நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் 90 ஓட்டங்கள் எடுத்தார். அந்தப் போட்டியில், அவருக்கும் ஆட்டநாயகன் விருது கிடைத்தது. அணியும் அப்போது ஒரு நல்ல கலவையுடன் சிறப்பாக இருந்தது. உலகக்கோப்பைப் போட்டிக்கு முன்பு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் 3-2 என்ற கணக்கில் இந்தியா தோல்வியடைந்தது. அது, ராயுடுவுக்கு மோசமான தொடராகவும் அமைந்தது.

ராயுடுவை விலக்கிவிட்டு, விஜய் சங்கருக்கு வாய்ப்பு வழங்கினார்கள். உலகக்கோப்பைத் தொடரில் இந்திய அணியில் 4 ஆவது இடத்தில் ஆடிய வீரர், அதிகபட்சமாக 48 ஓட்டங்கள்தான் எடுத்திருந்தார். இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இங்கிலாந்து கண்டிஷனில் நம்பர் 4 என்ற இடம் எவ்வளவு முக்கியமானது என்பது கப்டன், பயிற்சியாளர், பட்டிங் கோச் என யாருக்கும் தெரியவில்லையா? அந்த இடத்தில் ஆடும் வீரர் டெக்னிக்கலாக வலுவாக இருக்க வேண்டும். அதேபோல், அவருக்கு நிறைய வாய்ப்புகள் வழங்க வேண்டும்.

> 'நீங்கள் ஒரு வீரரிடமிருந்து சிறந்ததைப் பெற விரும்பினால், அவர் பாதுகாப்பாக உணர வேண்டும். ஒரு வீரர் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கும்போது அவரால் ஒருபோதும் சிறப்பாகச் செயற்பட முடியாது"



விஜய் சங்கருக்குப் போதிய அனுபவம் இல்லை. ரிஷப் பொண்ட் இற்கும் அதே பிரச்சினைதான். தினேஷ் கார்த்திக் அனுபவம் மிக்க வீரர். ஆனால், அவரை வெளியில் அமரவைத்து விட்டு திடீரென அரையிறுதியில் ஆடவைக்கிறீர்கள். என்ன நடக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நீங்கள், ஒரு வீரரிடமிருந்து சிறந்ததைப் பெற விரும்பினால், அவர் பாதுகாப்பாக உணர வேண்டும். ஒரு வீரர் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கும்போது, அவரால் ஒருபோதும் சிறப்பாக செயற்பட முடியாது. இதுதான், இந்தியா உலகக்கோப்பையை வெல்ல முடியாததற்கான காரணம். உலகக் கோப்பைத் தொடரில் இந்தியா, இங்கிலாந்து அணிகள் வலுவானதாக இருந்தது. இந்தியா, இறுதிப் போட்டியில் விளையாடியிருக்கக்கூடாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை.

எந்தச் சூழலில் இருக்கிறோம் என்பதை ரிஷப் பொண்ட் புரிந்துகொள்ள வேண்டும். அவரைப் பற்றி நிறைய விமர்சனங்கள் வருகின்றன. அது வரவேண்டிய அவசியம் இல்லை. அவரது சூழலில் இருந்து புரிந்துகொள்ள வேண்டும். ரஞ்சி டிராபி போட்டியில் சிறப்பாக விளையாடியுள்ளார். இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகளுக்கு எதிராக இரண்டு சதங்களைப் பதிவு செய்துள்ளார். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாடி வருகிறார். அவர், 10 ஒருநாள் போட்டியில்தான் விளையாடியுள்ளார். அவரிடம் நீங்கள் இன்னும் என்ன எதிர்பார்ப்பு வைத்துள்ளீர்கள்? அணியின் பயிற்சியாளர், தேர்வுக்குழுவினர் அவரிடம் அமர்ந்து பேச வேண்டும். அணி மோசமாக இல்லை. தொடர்ந்து வெற்றிபெற வேண்டும். வீரர்களின் திறன்களை வளர்க்க வேண்டும்" என்று பேசியுள்ளார்.

# இந்தியப் பெருங்கடல் அமைதிக்கு ஈழத்தமிழர் இருப்பு அவசியம்!

## உண்மையை விளக்கும் மனிதவுரிமைகள் செயற்பாட்டாளர் சண் மாஸ்டர்



ஈழத்தமிழர் உரிமைக்காக உரக்க குரல்கொடுத்துவருபவர், மனித உரிமைச் செயற்பாட்டாளர் சண் மாஸ்டர். இறுதி யுத்தத்துக்குப் பிறகு இலங்கை இராணுவத்திடமிருந்து தப்பித்து தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தவர். கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இலங்கைப் போர்க்குற்ற ஆவணங்களைச் சேகரித்து ஐ.நா. மன்றத்தில் சமர்ப்பித்து அதிரவுகளை ஏற்படுத்தியவர். தமிழர் போராட்டம், ஜனாதிபதித் தேர்தல், புதிய இராணுவத் தளபதி நியமனம் என இலங்கை அரசியல் நிலவரம் குறித்து அவர் தெரிவித்த போது,

**"தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகான இலங்கை, எப்படி இருக்கிறது?"**

"ஈஸ்டர் குண்டுவெடிப்புகள், தமிழ் மக்களை நசுக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு வலுசேர்த்து விட்டது. ஐ.எஸ் பின்புலத்தில்தான் மட்டக்களப்பில் குண்டு வெடித்தது என்று உலகுக்குச் சொன்னது இலங்கை அரசு. ஆனால், குண்டுவெடிப்பைக் காரணம் காட்டி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களைக் கைதுசெய்தது. அன்று எம் மக்களை சிங்கள இராணுவத்தால் காணாமல் செய்தது. இன்று எமது தாயக நிலம் சிங்கள அரசால் கபளீகரம் செய்யப்படுகிறது.

உலக வரைபடத்தில் காணாமலடிக்கப்பட்ட தேசமாக தமிழர் பகுதி மாற்றப்படுகிறது. ஆறு தமிழர்களுக்கு ஒரு சிங்கள இராணுவவீரர் என்ற நிலையில் இரா ணுவம் நிறுத்தப்பட்டு, தமிழர் பிரதேசம் இராணுவ பூமியாகக் காட்சியளிக்கிறது. மக்கள், மிகுந்த அச்சத்தில் வாழ்கிறார்கள்."

"வலுவான மக்கள் போராட்டங்கள் இல்லாமல் எதுவும் நடக்காது. மக்கள் போராட்டங்களின் நியாயத்தை ஏற்று எமக்காக உலக மன்றத்தில் வலிமையான ஓர் அரசு குரல் எழுப்ப வேண்டும். அப்படி குரல்கொடுக்க வேண்டிய வலிமையும் கடப்பாடும்கொண்டது இந்திய அரசுதான்."

**"போர்க்குற்றம் சாட்டப்பட்ட சவேந்திர சில்வாவை புதிய இராணுவத் தளபதியாக இலங்கை அரசு நியமித்திருக்கிறது... விளைவுகள் என்னவாக இருக்கும்?"**

"முள்ளிவாய்க்காலில் சில்வாவின் 58ஆவது படைப்பிரிவுதான், வெள் ளைக் கொடியுடன் வந்தவர்களை வேட் டையாடியது. வெறுங்கையுடன் சரணடைந்தவர்களையும் காணாமலடித்தது. இதற்கு தலைமை தாங்கிய ஒருவருக்கு பதவி உயர்வு கொடுப்பது, 'இன அழிப்புச் செய்தால் பதவி உயர்வு' என்ற உணர்வை சிங்களப் படையினருக்கு ஏற்படுத்து வதாக உள்ளது. பதவியேற்றதும், 'இராணுவப் புலனாய்வுக் கட்டமைப்பை நவீனப்படுத்துவேன்' என்று சொல்லியிருக்கிறார் சில்வா. அதாவது, சிங்கள இராணுவம் குடிகொண்டுள்ள தமிழர் பிரதேசத்தில் உரிமைக்கா கவும் உறவுகளுக்காகவும் போராடிக் கொண்டிருப்போரின் கழுத்தை



நெரிக் கப்போகிறார் என்பதே அதன் அர்த்தம்."

**"ஆனால், 'அத்தனையும் ஆதாரமற்ற பொய்யான குற்றச்சாட்டுகள்' என்று மறுத்திருக்கிறாரே சவேந்திர சில்வா?"**

"2009 மே மாதம், மேஜர் ஜெனரல் சில்வாவின் 58-ம் படைப்பிரிவு, தமிழர்களை என்னவெல்லாம் செய்தது என்பதை ஐ.நா அறிக்கைகள் விவரமாகக் கூறியுள்ளன. மேஜர் ஜெனரல் சில்வா, 2011-ம் ஆண்டு நியூயோர்க்கில் ஒரு போர்க்குற்ற வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர். 'இராஜதந்திர விலக்கு பெற்றவர்' என்ற அடிப்படையில் மட்டுமே, அந்த வழக்கு தள்ளுபடியானது. இந்தக் குற்றச்சாட்டுகளால்தான், ஐ.நா அமைதிக் காப்புக் குழு ஒன்றிலிருந்தும் சில்வா அகற்றப்பட்டார். சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறிய ஒருவருக்கு பதவி உயர்வு கொடுத்திருப்பது குறித்து, ஐ.நா மனித உரிமை ஆணையர் மிசேல் பச்செலட்டும் கவலை தெரிவித்துள்ளார். இவற்றைவிட வேறென்ன ஆதாரங்கள் வேண்டும்?"

**"சவேந்திர சில்வாவின் நியமனத்தின் பின்னால் மகிந்த ராஜபக்ஷவின் கரங்கள் இருக்கின்றனவா?"**

"ரணில் - மைத்திரிபால சிறிசேன கூட்டணி எப்போதோ முறிந்துவிட்டது. கடந்த 2018ஆம் ஆண்டு இறுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, திடீரென மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் ஆக்க முயற்சி செய்தபோது, இருவரது நட்பும் வெளிப்படையாகவே அம்பலமானது. நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவின் தம்பி கோத்தபாய போட்டியிடுகிறார். சவேந்திர சில்வாவை படைத் தளபதி ஆக்கியிருப்பது கோத்தபாயவின் வெற்றிக்கு பெரியளவில் உதவும்."

**"இராணுவத்தினரும் காணாமல் போயுள்ளதாக இலங்கை அரசு ஐ.நாவின் மனித உரிமை மன்றத்தில் கூறியிருக்கிறதே?"**

"காணாமல்போன உறவுகளுக்கு நீதி கேட்டு, பாதிக்கப்பட்ட தமிழர்கள் ஆரம்பித்த போராட்டம் ஆயிரம் நாள்களை நெருங்குகிறது. இடைவிடாது நடக்கும் இந்தப் போராட்டங்களால், சிங்கள அரசு கடுமையான நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இதிலிருந்து தப்பிக்கவே இராணுவத்தினரும் காணவில்லை என்ற புதுக்கதையை, இலங்கை அரசு அவிழ்த்துவிட்டுள்ளது.

சர்வதேசத்தை நம்பி இறுதி யுத்தத்தில் விடுதலைப்புலிகள் சரணடைந்தார்கள். சில போராளிகள் தங்கள் குடும்பத்தினருடன் சரணடைந்தார்கள்.

**"தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகள் எப்படியிருக்கின்றன?"**

"காணாமல்போனோர் செயலகத்தை அமைப்பதற்கான திருத்தச்சட்டத்தை இலங்கை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் காலையில் அதை எதிர்த்துக் கடுமையாகப் பேசினார்கள். ஆனால், மாலையில் அவர்களே அதற்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன்மூலம், அத்தனை உறவுகளின் நம்பிக்கையையும் அவர்கள் தகர்த்தெறிந்துவிட்டார்கள். இந்த இரட்டை வேடத்தாலேயே, 'கூட்டமைப்பை நம்பி பயனில்லை' என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் தாயகத்தின் அத்தனை மாவட்டங்களிலும் அவர்கள் கண்ணீருடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியொரு சூழ்நிலையில், இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைப் பேரவை, கால அவகாசம் கொடுத்ததையாவது கூட்டமைப்பு கடுமையாக எதிர்த்திருக்க வேண்டும். அதையும் அவர்கள் செய்யவில்லை."

**"இந்த விவகாரத்தில் சர்வதேச கவனத்தைத் திருப்ப, மக்கள் போராட்டங்கள் மட்டுமே போதும் என்று நினைக்கிறீர்களா?"**

"வலுவான மக்கள் போராட்டங்கள் இல்லாமல் எதுவும் நடக்காது. ஆனால், இந்த மக்கள் போராட்டங்களின் நியாயத்தை ஏற்று எமக்காக உலக மன்றத்தில் வலிமையான ஓர் அரசு குரல் எழுப்ப வேண்டும். அப்படி குரல்கொடுக்க வேண்டிய வலிமையும் கடப்பாடும்கொண்டது இந்திய அரசுதான். புவிசார் அரசியல் போட்டிகள் தீவிரம் அடையும் ஒரு கால கட்டத்தில், இந்தியப் பெருங்கடலின் அமைதிக்கும் இந்திய மக்களின் பாதுகாப்புக்கும் ஈழத்தமிழர்களின் இருப்பு மிக அவசியம். எனவே, அது உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கு, இலங்கைத் தீவில் இந்தியாவின் உண்மையான நட்புச் சக்தி ஈழத்தமிழர்கள்தாம் என்பதை இந்திய வெளியுறவுக் கொள்கையில் பிரதிபலிக்கச் செய்வதில், நாங்கள் வெற்றி பெற்றாக வேண்டும்.

இந்திய அரசை எமக்காகப் பேச வைப்பதற்கு தமிழகத் தமிழர்கள் எப்போதும்போல் உற்றதுணையாய் இருப்பார்கள் என்றும் நாங்கள் உளப்பூர்வமாக நம்புகிறோம்."

ஜூனியர் விகடன்

# இந்த ஆறும் அழியும் அபாயத்தில்

**நாம் குடிநீர் பஞ்சம், எண்ணெய் தட்டுப்பாடு, அல்லது தேனீக்கள் அழிகிறது என்று கேள்விப்படுகிறோம் ஆனால் அதைத் தவிர சில பொருட்களும் அழிந்துவருகிறது. அல்லது நாம் சில பொருட்களைத் தவறாக நிர்வகிப்பதால் அது நமது வாழ்வை பெரிதும் பாதித்து வருகிறது. அவ்வாறான 6 விஷயங்கள் இதோ இங்கே,**

## சுற்று வட்டப் பாதையில் இடமில்லை

2019 ஆண்டில் சுமார் 5 லட்சம் பொருட்கள் பூமியை சுற்றுகின்றன. அதில் வெறும் 2000 பொருட்கள் மட்டுமே செயல்படுகின்றன. அதில் சில செயற்கைக்கோள்கள் நாம் தொலைத்தொடர்பு, ஜிபிஎஸ் மற்றும் பிடித்தமான படங்களைப் பார்ப்பதற்கும் பயன்படுகிறது. அதைத் தவிரப் பிற பொருட்கள் எல்லாம் ராக்கெட் ஏவுதலால் வந்த குப்பைகள்அதனால் என்ன பிரச்சினை? அந்த 5 லட்சம் பொருட்கள் என்பது நம்மால் கண்டுபிடித்து கூற முடிந்த பொருட்கள் கண்டுபிடிக்க முடியாமல் பல இருக்கலாம்.

தொழில்நுட்பம் வளர்ச்சியடைய வளர்ச்சியடைய சுற்று வட்டப் பாதையில் ஏதேனும் செலுத்துவதற்கு எளிதானதாகவே உள்ளது. இது நமக்கு ஒரு நல்ல செய்தியாகத் தெரியலாம் ஆனால் அங்குப் பூமிக்கு மேல் சுற்றிக் கொண்டிருக்கும் பொருட்களுக்கு எந்த போக்குவரத்து கட்டுப்பாடும் இல்லை. அவற்றைச் சுத்தம் செய்வதற்கான எந்த ஒரு வசதியும் இல்லை.

எனவே இந்த பொருட்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டால், நாம் மேப் பார்ப்பதற்கும், தொலைத் தொடர்பு வசதிகளுக்கும், வானிலையை தெரிந்து கொள்வதும் பாதிக்கப்படலாம். இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் நாம் இருக்கிறோம் ஆனால் தற்போது வரை இதற்கு எந்த தீர்வும் இல்லை.

## மணல்

இங்கு நீங்கள் ஒரு குழப்பத்தில் ஆழலாம், நமது கடற்கரைகள் மற்றும் பாலை வனங்களில் மணல் கொட்டிக் கிடக்கும்போது அது எப்படித் தீர்ந்துபோகும் என்று தோன்றலாம். மணலை நாம் அதிகப்படியாக சுரண்டுகிறோம்.

இயற்கை முறையாக மணல் உற்பத்தி ஆகும் விகிதத்தைக் காட்டிலும் அதனை நாம் பயன்படுத்தும் விகிதம் அதிக அளவில் இருப்பதாக ஐ.நாவின் அறிக்கை கூறுகிறது.

மணல் அழிந்து போனால் அது நமது சுற்றுச்சூழல் அமைப்பைப் பெரிதும் அது. அதிகப்படியாக மணலை பயன்படுத்துவதைக் கண்காணிக்கச் சர்வதேச அளவில் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

## ஹீலியம்

நாம் சில விழாக்களில் ஹீலியம் நிரப்பிய பலன்களைப் பறக்கவிட்டிருப்போம். ஆனால் அது குறித்து நாம் என்றாவது கவலைப் பட்டிருக்கிறோமா? ஹீலியமும் நாம் பூமியை தோண்டி கிடைக்கக்கூடிய ஒரு வளம். ஆனால் நம்மிடம் உள்ள இருப்பு சில தசாப்தங்களுக்கு வரும் அளவுக்குத்தான் உள்ளது. சில நிபுணர்கள் வெறும் 30-50 ஆண்டுகளில் ஹீலியம் தட்டுப்பாடு ஏற்படலாம் என்கின்றனர்.

ஹீலியம் வெறும் பலூன்களை மட்டுமே நிரப்பப் பயன்படுவது அல்ல. ஹீலியம் மருத்துவ ரீதியாகவும் பயன்படுகிறது. எம்ஆர்ஐ ஸ்கேன்கள் பயன்படுவதற்கான காந்தத்தைக் குளிர்ச்சியாக வைக்கவும் இந்த ஹீலியம் பயன்படுகிறது. எனவே புற்றுநோயை கண்டறிவதிலும், மூளை மற்றும் முதுகுத் தண்டு காயங்களுக்குமான சிகிச்சையிலும் ஹீலியம் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## வாழைப்பழங்கள்

தற்போது பெருமளவில் நாம் வியாபாரத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாழைப்பழத்துக்குப் பூஞ்சையால் ஏற்படக்கூடிய பனாமா நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது நாம் "கேவண்டிஷ்" என்ற ரக வாழைப்பழத்தை உண்டு வருகிறோம். பனாமா நோய் வாழைமரங்களில் விரைவாகப் பரவக்கூடிய தன்மை கொண்டது.

1950ஆம் ஆண்டு பனாமா நோயால் ஏறக்குறைய அனைத்து வாழை மரங்களும் அழியும் நிலக்கு சென்றன. தற்போது பூஞ்சையைத் தாங்கும் பயிரை உருவாக்க விஞ்ஞானிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

## மண்

மரம் செடிகளுக்குத் தேவையான சத்துக்களை மண் தான் வழங்குகிறது. கடந்த 150 வருடங்களில், உலகின் மண்வளம் பாதியளவு குறைந்துவிட்டது என்கிறது டபிள்யூ டபிள்யூ எஃப் என்ற அரசு சாரா நிறுவனம். ஆனால் ஒரு இன்ச் மண் உருவாக 500 வருடங்களாகும்.

மண் அரிப்பு, தீவிர விவசாயம், மரங்களை அழிப்பது, உகை வெப்பமாதல், ஆகிய அனைத்தும் மண்வளம் குறைவதற்கான காரணங்கள். இந்த மண் வளத்தை நம்பிதான் சர்வதேச உணவு உற்பத்தி இருக்கிறது.

## பொஸ்பரஸ்

இதை முதலில் கேட்கும்போது பாஸ்பரஸ் என்பது நமது அன்றாட வாழ்வில் அதிகம் தேவைப்படாத ஒன்றாக தோன்றலாம். இது உயிரியல் தொடர்பாக மட்டும் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. விவசாயத்துக்கு தேவையாக பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கவும் இந்த பாஸ்பரஸ் தேவைப்படுகிறது. அதற்கு மாற்று இல்லை.

தாவரம் மற்றும் விலங்குகளின் கழிவு மூலம் இவை மண்ணுக்குள் மீண்டும் செல்வதற்கு பதிலாக, விவசாயப் பொருட்களின் மூலம் நகரத்திற்குள் செல்கிறது நாம் அதை கழுவி சாக்கடைக்குள் விடுகிறோம்.

# இது நம்ம கதைகள்... 59

# அறுவடை



புகைபிடித்தலை தடுப்பதற்காக அல்லது குறைப்பதற்காக இன்று பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது இடங்களில் புகைத்தலைத் தடை செய்தல், புகையிலை விளைச்சலைக் குறைத்தல், வயது குறைந்தோருக்கு புகைத்தலுக்கான பொருட்களை விற்கத்தடை விதித்தல், சிகரெட், பீடி போன்றவற்றிற்கான வரிகளை அதிகரித்தல், பாடசாலைகளிலிருந்து 500 மீற்றருக்குள் புகைபொருட்கள் விற்பனையை தடைசெய்தல் , புகைபொருள் விற்பனை செய்யாத வியாபாரிகளுக்கு மெச்சுதல், சான்றிதழ் வழுங்குதல், புகைப் பொருள் பொதிகளில் அவற்றின் தீமைகளை விளக்கும் படங்கள் பொறித்தல் எனப் புகைத்தலுக்கெதிரான பல்வேறு நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் இலங்கையில் புகைபிடிப்பவர்கள் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவது பெரும் சவாலாகவேயுள்ளது.

இலங்கையில் நடத்தப்பட்ட அண்மைய ஆய்வுகளில் மொத்த சனத் தொகையில் 29.4 சதவீத ஆண்களும், ஒரு சதவீதப் பெண்களும் புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர் என்பது புலனாகிறது. நாளாந்தம் 1.5 மில்லியன் சிகரெட் புகைப்பவர்களால் 11 மில்லியன் சிகரெட்கள் புகைக்கப்படுவதாக ஆய்வுகள் சுட்டுகின்றன. இலங்கை புகையிலை கூட்டுத்தாபனத்தின் வருட வருமானம் 104 பில்லியன்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளன. அதேவேளை வயது வந்தோரின் இறப்பு விகிதத்தில் 10 பேரில் ஒருவர் புகைத்தல் சம்பந்தப்பட்ட நோய்களால் இறப்பதாகவும் தரவுகள் சுட்டுகின்றன. மேலும் வாராந்தம் சராசரி 222 பேர் புகைபிடிப்பதால் இறப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. புகைத்தல் புகைபிடிப்பவருக்கு மட்டுமின்றி அவரைச் சுற்றியுள்ளோருக்கும் பாதிப்பை விளைவிக்கக்கூடியது என்பதை புகைபிடிப்பவர் உணர்வது அவசியம்.

நட்பு வட்டத்தில் பொழுதுபோக்கிற்காக ஆரம்பிக்கும் புகைப்பழக்கம் நாளடைவில் கைநெகிழ முடியாததாகிவிடுகின்றது.

சுருள்சுருளாகப் புகைவிடுவதை (F) பெஷன் என்று கருதுபவர்கள் இறுதியில் புகைக்குள் புதைந்து மடிவதே நிதர்சனம்.

இனி இவ்வாரக்கதை......

நாசா நிறுவனம் விண்வெளிக்கு ரொக்கெட் ஒன்றை முன்று வீரர்களுடன் அனுப்பத்திட்டமிட்டது. ஆய்வின் பொருட்டு அதில் செல்பவர்கள் 5 வருடங்களை விண்வெளியில் செலவழிக்கவேண்டும். எனவே நீண்ட காலத்தனிமை என்பதால் அவர்கள் விருப்பமானதொன்றை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

முதல் வீரர் தன் மனைவியை உடன் கூட்டிச் செல்ல அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. மற்றைய வீரர் ஸ்பானிய மொழி கற்க விரும்பினார் அதற்கான புத்தகங்கள், கருவிகள் வழங்கப்பட்டன. மூன்றாவது வீரர் 5 வருடங்களுக்குப் புகைபிடிப்பதற்கான சிகரெட்களைக் கேட்டார். அவரின் தேவையும் நிறைவேற்றபட்டது.

ஐந்து வருடங்களில் நிறைவில் விண்வெளியோடம் நாடு திரும்பியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் வீரர்களை வரவேற்பதற்காக குழுமியிருந்தனர். விண்வெளியோடத்தின் கதவைத் திறந்துகொண்டு முதல் வீரர் தன் மனைவி மற்றும் விண்வெளியில் பிறந்த இரு குழந்தைகளுடன் வெளியே வந்தார். உற்சாக கரகோஷம் வானைப்பிளந்தது.

இரண்டாவது வீரர் வெளியே வந்தார். ஐந்து நிமிடங்கள் ஸ்பானிய மொழி யில் சரளமாகப் பேசினார். மீண்டும் மக்களின் கரகோஷம் எதிரொலித்தது.

மூன்றாவது வீரர் இருமிக் கொண்டே வெளியே வந்தார். கண்களிலும் கன்னங்களிலும் குழிவிழுந்திருந்தன. தாடியும், தலைமுடியும் தாறுமாறாகி விருந்தன. எலும்பும் தோலுமாக தள்ளாடியபடி வெளியே வந்தார். கையசைக்கக்கூட முடியவில்லை. "யாரிடமாவது தீப்பெட்டியிருக்கிறதா?" எனக் கேட்டுக்கொண்டே சுருண்டுவிழுந்தார். அதன் பின் அவர் எழுந்திருக்கவேயில்லை.

**புகை நம் உடலுக்கு சிதை.**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# அலாஸ்காவில் உச்சம் தொட்ட வெப்பம்




உலக நாடுகளிலுள்ள பனிப்பாறைகள் கிடுகிடுவெனக் கரைந்து வருவதாக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதே நிலை நீடித்தால் பெரும் ஆபத்து ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளனர்.

உலக நாடுகள் அனைத்துக்கும் மிகப் பெரும் அச்சுறுத்தலாக உள்ள ஒரே விடயம் புவி வெப்பமயமாதல். மனிதனின் செயற்பாடுகளால் ஓசோன் படலம் பாதிக்கப்பட்டு வெப்பமயமாதல் அதிகரித்துள்ளது. இதைக் குறைக்கவே பாரிஸ் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு, பல நாடுகள் அதைப் பின்பற்றி வருகின்றன. மேலும், உலகில் உள்ள பல காலநிலை ஆர்வலர்களும் வெப்பமயமாதலைத் தடுக்க வேண்டும் எனக் குரல்கொடுத்து வருகின்றனர்.

Global Warming

இவர்களின் வரிசையில் சிறுவர்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர். கிரேட்டா தன்பெர்க் என்ற 16 வயது சிறுமியும் புவி வெப்பமயமாதலுக்கு எதிராக அனைத்துத் தலைவர்களும் உடனடியாக நடவடிக்கை

## 150 மைல் தூரம் காணாமல் போன பனிப்பாறைகள்



எடுக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறார். இந்நிலையில், வெப்பமயமாதல் காரணமாக உலக அளவில் கடல் நீர்மட்டம் 2 மடங்கு அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதே நிலை நீடித்தால், 2100 ஆம் ஆண்டில் கடல் நீர்மட்டம் தற்போதைவிட 4 மடங்கு அதிகரித்து, மக்களுக்கு பெரும் ஆபத்தாக இருக்கும் என ஐ.நா.எச்சரித்துள்ளது.

ஐஸ்லாந்தில் உள்ள ஒக்ஜோகுல் (Okjokull) என்ற பகுதியில் உள்ள பனிப்பாறைகள் மிகவும் வேகமாகக் கரைந்து வருவதாகக் கூறப்படுகிறது. இதேநிலை உலகம் முழுவதும் உள்ளதாகவும் நாம் பனிப்பாறைகளின் இறுதி நாட்களை எண்ணிக்கொண்டுள்ளோம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். 1880 ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்டு வரும் வெப்ப அளவில், இந்த வருடம் ஜூலை மாதம் தான், முன் எப்போதும் இல்லாத அளவு அதிக வெப்பம் பதிவாகியுள்ளது.

அதிக வெப்பம் நிறைந்த ஜூலை மாதங்களில் பத்தில் ஒன்பது மாதங்கள் 2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு இருந்துள்ளன. இந்த 20 ஆம் நூற்றாண்டில் மட்டும் ஜூலை மாதங்களில் 43 முறை அதிக வெப்பம் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், கிரீன்லாந்தில் பனிக்கட்டிகள் மிகவும் வேகமாக உருகுவதைப் பார்த்து ஆராய்ச்சியாளர்கள் வியப்பில் உள்ளனர்.

இதே நிலை 2070 ஆம் ஆண்டு வரை அங்கு நீடித்தால், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பனிக்கட்டிகள் உருகுவது அதிகரிக்கும். கிரீன்லாந்தில் கடந்த மாதம் ஒரே நாளில் 12.5 பில்லியன் அளவிலான பனிப்பாறைகள் உருகி உச்சம் தொட்டுள்ளது. ஒருவேளை கிரீன்லாந்தில் இருக்கும் பனிப் பாறைகள் அனைத்தும் உருகி னால் உலக அளவில் கடல் நீர் மட்டம் 20 அடி அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அலாஸ்காவில் உள்ள பனிக்கட்டிகள் முற்றிலும் உருகி, வெறும் பாறைகள் மட்டுமே காணப்படுகின்றன. அப்படிப் பார்த்தால், முன்னர் பனிப்பாறைக்ள் நிறைந்து கிடந்த இடங்களில் 150 மைல் தூரத்துக்கு தற்போது பனிப்பாறைகளையே பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தேசிய வானிலை சேவை மையம் அறிவித்துள்ளது.

இந்த வருடம் அலாஸ்காவின் வடக்கு மாகாணத்தின் வெப்பத்தின் அளவு உச்சத்தைத் தொட்டதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. அலாஸ்காவில் பனிப்பா றைகள் முற்றிலும் கரைந்தது இது முதல் முறையல்ல. இதற்கு முன் 2017 ஆம் ஆண்டும் இதேபோன்று நிகழ்ந்துள்ளதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : இதயவீணை
இயற்றியவர் : வாலி
இசை : சங்கர் கணேஷ்
பாடியவர்: ரி.எம்.சௌந்தரராஜன்




இன்றுபோல என்றும் வாழ்க!
எங்கள் வீட்டுப் பொன்மகளே வாழைக்
கன்றுபோலத் தலைவன் பக்கம்
நின்றிருக்கும் குலமகளே!

திருநிறைச் செல்வி மங்கையர்க்கரசி
திருமணம் கொண்டாள் இனிதாக - என்
இருவிழிபோலே இருவரும் இங்கு
இல்லறம் காணட்டும் நலமாக
இல்லறம் காணட்டும் நலமாக

மஞ்சள் குங்குமம் மலர் சூடி
மணமகள் மேடையில் அங்கிருக்க
நெஞ்சம் நிறைய வாழ்த்துக்கள் ஏந்தி
நல்லவன் ஒருவன் இங்கிருக்க
ஆயிரம் காலம் நாயகன் கூட
வாழ்ந்திடு மகளே வளமாக
ஆனந்ததாலே கண்ணீர் பொங்கும்
ஏழையின் கண்கள் குளமாக

திருநிறைச் செல்வி மங்கையர்க்கரசி
திருமணம் கொண்டாள் இனிதாக
திருமணம் கொண்டாள் இனிதாக

எங்கள் வானத்து வெண்ணிலவாம் - இவள்
இன்னொரு வீட்டுக்கு விளக்கானாள்
எங்கள் குலம்வளர் கண்மணியாம் - இவள்
இன்னொரு குடும்பத்தின் கண்ணானாள்
தாய்வழி வந்த நாணமும் மானமும்
தன்வழி கொண்டு நடப்பவளாம்
கோயிலில் இல்லை கும்பிடும் தெய்வம்
கொண்டவன் என்றே நினைப்பவளாம்

ஒருவரை ஒருவர் அன்புகொண்டு - வரும்
சுகத்திலும் துயரிலும் பங்கு கொண்டு
இருவரும் ஒருவரில் பாதியென்று - இங்கு
இன்புற வாழட்டும் பல்லாண்டு
குறள்வழி காணும் அறம் பொருள் இன்பம்
குறைவின்றி நாளும் வளர்ந்திடுக!
தென்னவர் போற்றும் பண்புகள் யாவும்
கண்ணெனப் போற்றி வாழ்ந்திடுக!

திருநிறைச் செல்வி மங்கையர்க்கரசி
திருமணம் கொண்டாள் இனிதாக - என்
இருவிழிபோலே இருவரும் இங்கு
இல்லறம் காணட்டும் நலமாக
இல்லறம் காணட்டும் நலமாக




குடும்பங்கள் பார்க்கும் கதைகள் வருவது அதிகமாகி வருகிறது. வருட ஆரம்பத்தில் வந்த விஸ்வாசம் படத்தை தொடர்ந்து அண்ணன்-தங்கை செட்டிமென்ட்டை வைத்து இப்போது தயாராகி இன்று வெளியாகியுள்ள படம் நம்ம வீட்டுப் பிள்ளை.

சிவகார்த்திகேயன் இப்படத்தின் மூலம் ரசிகர் களின் மனதில் இடம் பிடித்தாரா? பார்ப்போம்.

சிவகார்த்திகேயன் பெரிய குடும்பத்தில் எந்த ஒரு நல்லது கெட்டது என்றாலும் முதல் ஆளாக தோள் கொடுத்து அனைத்து சொந்த பந்தங்களையும் விட்டுக் கொடுக்காமல் முறை செய்கிறார்.

ஆனால், அவருக்கு அப்பா இல்லை என்பதால் மற்ற அனைவருமே அவரை குடும்பத்தில் ஒருவராக பார்ப்பதில்லை. சிவகார்த்திகேயன் தங்கையான ஐஸ்வர்யா ராஜேஸையும் சேர்த்து.

தங்கைக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை பார்க்க வேண்டும் என சிவகார்த்திகேயன் ஊர் முழுவதும் அலைகிறார். ஆனால், யாருமே கட்டிக் கொள்ள முன்வராத போது நட்டி அவரை திருமணம் செய்ய முடிவெடுக்கின்றார்.

ஆனால், அவர் முன் வருவது சிவகார்த்திகேயனுடன் ஏற்கனவே இருக்கும் ஒரு பகைக்காக தான், அது தெரியாமல் தங்கையை கட்டிக்கொடுக்க, அதன் பின் அவர் சிவகார்த்திகேயனை மதிக்காமல் இருக்க, பதிலுக்கு சிவகார்த்திகேயன் தங்கைக்காக இறங்கிப்போக, கடைசியில் என்ன ஆனது என்ற பாசப் போராட்டமே இந்த நம்ம வீட்டுப் பிள்ளை.

சிவகார்த்திகேயன் இது தான் சார் உங்க ஏுட்டு என்று சொல்லும் அளவிற்கு கம்பேக் கொடுத்துள்ளார். எப்போது வீட்டிற்கு அடங்காத பையனாக பெண்களை சுற்றி வரும் சிவகார்த்திகேயன். இதில் பொறுப்பான பைய்னாக, அண்ணனாக, மச்சானாக என ரவுண்ட் கட்டி அடிக்கின்றார். அதிலும் கிளைமேக்ஸ் எமோஷனல் காட்சிகள் அவர் சொந்த வாழ்க்கை அனுபவத்தையும் சிறிது தட்டி விட ஓடியன்ஸ் கண்களை குளமாக்குகின்றார்.

ஐஸ்வர்யா ராஜேஸ் கண்டிப்பாக எந்த ஒரு ஹீரோயினும் பீக்கில் இருக்கும் போது முன்னணி ஹீரோவிற்கு தங்கையாக நடிப்பாரா என்றால் கேள்விக்குறி தான். ஆனால், அதையும் நடித்து அசத்தியுள்ளார். இதோடு பாரதிராஜா, அர்ச்சனா, சூரி, வேலாராம மூர்த்தி, சுப்பு, நட்டி என ஒரு நட்சத்திர பட்டாளமே தங்கள் நடிப்பை சிறப்பாக கொடுத்துள்ளனர்.

பாண்டிராஜ் படம் என்றாலே ஒரு சில கதாபாத்திரம் போகிற போக்கில் நல்லது செய்துவிட்டு செல்லும். அதுவும் க்ளிக் ஆகும், அந்த கதாபாத்திரத்தை இதில் சூரியின் மகனாக வரும் பாண்டிராஜின் ரியல் லைப் மகன் செய்கின்றார். முந்திரிகுட்டை என்ற கதாபாத்திரத்தில் அவர் அடிக்கும் கவுண்டர் வசனத்திற்கு ஒரு சில இடங்களில் சூரி வசனத்தை விட க்ளாப்ஸ் அள்ளுகிறது.

எப்படியும் இவர் படம் என்றாலே செண்டிமெண்ட் காட்சிகள் நிறைந்து இருக்கும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், இந்த படத்தில் செண்டி...மெண்ட் காட்சிகள் படம் முழுவதுமே உள்ளது. குறைந்தது 5 இடத்திலாவது அழ வைத்து விடுவார். அதே நேரத்தில் ஒரு கட்டத்தில் இன்னுமா என்று இரண்டாம் பாதியில் கொஞ்சம் யோசிக்க வைக்கின்றது.

ஏனெனில் சமுத்திரம் போன்ற படங்களில் பார்த்த கதை போலவே உள்ளதால், அட இது தான் நடக்க போகிறது என்று யூகித்துக்கொள்ளும் திரைக்கதை. அதிலும் முடிந்த அளவிற்கு இன்றைய ட்ரெண்ட் ரசிகர்கள் ரசிக்கும்படி கொடுத்ததே பாண்டிராஜின் மிகப்பெரிய வெற்றி.

படத்தில் மிகவும் தள்ளி நிற்பது, அனு இமானுவெல் கதாபாத்திரம் தான், படத்திற்கும் அவருக்கும் எந்த ஒரு விதத்திலும் தொடர்பு இல்லை. ஏதோ பாடலுக்காக சேர்த்தது போல் தான் உள்ளது, அந்த காட்சிகளை கொஞ்சம் குறைத்திருக்கலாம்.

நீரவ்ஷாவின் ஒளிப்பதிவில் தமிழகத்தின் தென் மாவட்டங்களின் பல பகுதிகளை மிக அழகாக அப்படியே கண்முன் கொண்டு வந்துள்ளார். டி.இமானும் தன் பங்கிற்கு கிராமிய இசை மற்றும் அவருடைய டெம்ப்ளேட் சில இசைகளை சேர்த்து ஸ்கோர் செய்துவிட்டார்.

படத்தின் நீளம், நிறைய செண்டிமெண்ட் காட்சிகள் என பல இருந்தும் எங்கும் பெரிய அளவிற்கு போர் அடிக்காமல் கொண்டு சென்றது.

பாண்டிராஜ் படம் என்றாலே வசனம் மிக முக்கியமாக பேசப்படும், அப்படி குடும்ப உறவுகள் குறித்த வசனங்கள் இதிலும் ரசிக்க வைக்கின்றது.

படத்தின் இரண்டாம் பாதி அடுத்து இது, அடுத்து அது என்று தெரியும்படி இருப்பது.

அனு இமானுவேல் கதாபாத்திரம் இன்னும் கூட கொஞ்சம் நன்றாக வடிவமைத்திருக்கலாம், அதைவிட யார் யாருக்கு சொந்தம் என்ன முறை என்பதை கொஞ்சம் தெளிவாக எடுத்து சொல்லியிருக்கலாம்.

மொத்தத்தில் குடும்பங்கள் கொண்டாடும் நம்ம வீட்டுப் பிள்ளை, சிவகார்த்திகேயனின் மாஸ் கம்பேக்.






# சிந்து சமவெளி முதல் கீழடி வரை தடம் பதிக்கும் தமிழர் வரலாறு




சங்ககாலத்தில் வைகைக்கரையில் நகரப் பண்பாடு நிலவியது என்பதற்கான முதல் அகழ்வாய்வுச் சான்றைக் கீழடி வழங்கியுள்ளது. இந்த அகழ்வாயின் மூலம் தமிழர் எழுத்தறிவு தொடர்பான கால நிர்ணயம் கி.மு ஆறாம் நூற்றாண்டிற்கு நகர்ந்திருக்கிறது. சங்க இலக்கியம் வெறும் கற்பனையோ, புனைகதையோ அல்ல... அது அக்கால வாழ்வியல் முறை பற்றிய தெளிவான படப்பிடிப்பு என்பதைக் கீழடி ஆய்வுகள் தெளிவாக்குகின்றன. ஆனால், கீழடி ஆய்வின் முக்கியத்துவத்தைத் தீர்மானிப்பவை இவை மட்டுமல்ல. இந்த அகழ்வாய்வு இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட காலகட்டங்கள் பற்றிய இரண்டு புதிர் முடிச்சுகளின் மீது ஒரே நேரத்தில் ஒரு புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சுகிறது. புதிர் முடிச்சுகளா? ஆமாம். அவை பற்றித் தெரிந்து கொண்டால் இந்த ஆய்வு முடிவுகள் தரும் வியப்பை நம்மால் முழுமையாக உணர முடியும்.

## இரண்டு புதிர்கள்!

சிந்துவெளி நகரப் பண்பாட்டை உருவாக்கிய மக்கள் பேசிய மொழி என்ன?சிந்துவெளிப் பண்பாடு எப்படி நலிவடைந்து, சிதைந்தது அப்பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் என்ன ஆனார்கள், எங்கே போனார்கள் இதுதான் வரலாற்று ஆய்வாளர்களுக்குக் கண்ணாமூச்சி காட்டிக்கொண்டிருக்கும் முதல் புதிர்.

இந்தியப் பண்பாட்டுப் பரப்பில் தனக்கென்று ஒரு தனித்துவமான அடையாளத்தையும், மிகத்தொன்மையான இலக்கண இலக்கிய மரபுகளையும் கொண்ட தமிழ்ப்பண்பாட்டுத் தொன்மங்களின் தோற்றப்புள்ளி எது. இது இரண்டாவது புதிர்.



இந்தியாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலகட்டத்தின் தெளிவற்ற தன்மையை மாற்ற இந்த இரு கேள்விகளுக்கும் விடைகாண வேண்டிய தேவை உள்ளது. ஆனால், உண்மையில் இந்த இரு கேள்விகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. இன்னும் சொல்லப் போனால் இவை ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள். இந்த வரலாற்று உண்மையை உலகம் அறிவதற்கான ஒரு சிறிய பங்களிப்பைச் செய்கிறது கீழடி அகழ்வாய்வு.


சிந்து சமவெளிப் பண்பாடு அநேகமாகப் பழந்தமிழ்ப்பண்பாட்டோடு தொடர்புடையதாக இருந்திருக்கக்கூடும் என்ற கருத்தை வங்காள மொழியியல் அறிஞர் சுனித் குமார் சட்டர்ஜி 1924இல் வெளியிட்டார். அதுவே, சிந்துவெளிப் பண்பாட்டின் 'திராவிடக் கருதுகோள்' எனப்படும் கருத்தியலின் தொடக்கம்.

அதன் பின்னர், சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட மொழிக்குடும்ப மற்றும் குறிப்பாகப் பழந்தமிழ்த் தொன்மத் தொடர்புகளை வலியுறுத்தும் வகையில் ஹீராஸ் பாதிரியார், அஸ்கோ பர்போலா, ஐராவதம் மகாதேவன் போன்ற அறிஞர்கள் கருத்து தெரிவித்திருந்தாலும், சிந்துவெளி நாகரிக மக்கள் பேசிய மொழி பற்றிய ஒருமித்த கருத்து இதுவரை ஏற்படவில்லை. சிந்துவெளி எழுத்துகளை ஐயத்திற்கு இடமின்றி இதுவரை வாசிக்கமுடியவில்லை என்பதே இதற்குக் காரணம்.

## சிந்துவெளியும் சங்கவெளியும்!

தற்கால மதுரை நகரத்திற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தொடர்ச்சியான வரலாறு இருக்கிறது என்பதில் ஐயமில்லை. மதுரையின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கிடைக்கும் சங்ககாலப் பெயர்களுடன் கூடிய தமிழ் பிராமி மற்றும் பழந்தமிழ்க் கல்வெட்டுகளும் ஏனைய சான்றுகளும் இதை வலியுறுத்துகின்றன.

ஆனாலும் ஒரு விரிவான நகர நாகரிகத்தின் எச்சங்கள் என்று கூறத்தக்க அகழ்வாய்வுச் சான்றுகள் இதுவரை கிட்டாமல் இருந்தன.வைகையின் இரு கரைகளிலும் 293 இடங்களை அடையாளப்படுத்தியும் அகழ்வாய்வுகள் துரிதகதியில் நடக்கவில்லை என்பதே உண்மை. இந்தக் குறையைத் தீர்க்கும் திறன் கொண்டது கீழடி அகழ்வாராய்ச்சி. அதுமட்டுமன்றி



அகழ்வாராய்ச்சிகள் பற்றிய பெரிய விழிப்புணர்வையும் கீழடி ஏற்படுத்தியுள்ளது.

சிந்துவெளியின் பழந்தமிழ்த் தொடர்பு பற்றிப் பேச்சு வந்தாலே அதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட முதல் வாதமே கால, நில இடைவெளிதான். அதாவது, சிந்துவெளிப் பண்பாட்டு நிலப்பகுதிக்கும் சிந்துவெளிப் பண்பாட்டுக் காலத்திற்கும் சங்க இலக்கிய காலத்திற்கும் இடையே உள்ள இடைவெளி. இந்த இடைவெளியை அகழ்வாய்வுகள் நிரப்ப வேண்டும். அதுமட்டுமன்றி, சங்க இலக்கியங்கள் பற்றிய சரியான அறிதலும் இதற்குத் துணை புரியும். சிந்துவெளி ஒரு நகர்மயப் பண்பாட்டின் உச்சக் கட்டம் என்றால், சங்க இலக்கியும் இந்தியாவின் நகர்மய இலக்கியத்தின் கம்பீரமான தொடக்கம்.

சங்க இலக்கியங்கள் பேசும் வாழ்வியலையும் கடந்த கால மீள் நினைவுகளையும் சங்ககாலத் தமிழ் அரசியல் எல்லைக்குள் அடக்கிவிட முடியாது. அதற்கும் அப்பால் உள்ள நிலப்பரப்புகள் வாழ்வியல் அனுபவங்கள், தொல் நிகழ்வுகளுக்கும் சாட்சியமாக இருக்கும் ஒரே இலக்கியம் சங்க இலக்கியம்தான். அதனால் தான் பாலைவனத்தில் பசி தாங்காமல் எலும்பு தின்ற ஒட்டகத்தைப் பற்றி அவ்வளவு தெளிவாகச் சங்க இலக்கியத்தால் பேச முடிகிறது.

பரந்த கடல் சார்ந்த வாழ்வியலையும் பரந்த பாலைவனத்தையும், மலைகளையும், மழைக் காடுகளையும் வயற்காடுகளையும் ஆற்றங்கரை நாகரிகத்தையும் ஒரே மூச்சில் பேசும் ஐந்திணை இலக்கியம் சங்க இலக்கியம் மட்டுமே. நகர்மய வாழ்வியலை, கடல் வணிக மரபை, 'கலம் செய்யும் கோ'-வான குயவரை, கைவினைக் கலைஞர்களை, கல்விப் பரவலாக்கத்தை, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று நேசம் வளர்க்கும் வாழ்வியலைக் கொண்டாடும் சங்க இலக்கியமும் அதன் உலகப் பார்வையும்தான் இந்தியப் பண்பாட்டு மரபில் சிந்துவெளி உன்னதத்தின் தொடர்ச்சிக்குச் சான்றளிக்க முடியும். அந்தத் தொடர்ச்சிக்குக் கீழடி கண்கூடான சாட்சியமாகிறது.

## கீழடிப் பகடை

கீழடியில் தந்தத்தாலும் சுடுமண்ணாலும் செய்த சில பகடைக்காய்கள் கிடைத்துள்ளன. இந்தப் பகடைக் காய்களையும், ஹரப்பா, லோத்தல் ஆகிய சிந்துவெளிப் பண்பாட்டுக் காலத்துப் பகடைக்காய்களையும் ஒரு மேஜையில் வைத்துக்கொண்டு சங்க இலக்கியத்தில் கலித்தொகையின் 136ஆவது பாடலைப் படித்தாலே போதும், சிந்துவெளி விட்ட இடமும் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றே என்பதும் அந்த வேர்நிலைத் தொடர்பிற்கு வெளிச்சம் தருவது கீழடி என்பதும் உடனே புரிந்துவிடும். பகடை விளையாட்டில் 'பத்து உருவம்', அதாவது பத்து என்ற எண் பெற்றவன் மனம் எப்படி மகிழ்வடையும் என்பது கலித்தொகைக் காட்சி. 'பகடைக்காய் உருட்டி பத்து பெறலாம்' என்பதற்கு ஒன்று முதல் ஆறு சிறுவட்ட அச்சுக்கீறல்கள் கொண்ட கன சதுர வடிவிலான கீழடிப் பகடை சாட்சி. அதைப்போலவே லோத்தல், ஹரப்பா பகடைகளும் சாட்சி. இரண்டாயிரம் மைல் இடைவெளியை உருட்டி விளையாடுகிறது இந்தப் பகடை. உண்மையில் சிந்துவெளிப்பண்பாட்டையும் இந்தியாவின் தொன்மங்களையும் அறிய கீழடியும் சங்க இலக்கியமும் உருட்டிவிட்டிருக்கிற புதிய பகடைகள் இவை.

## பானைக் கீறல்கள்

சிந்துவெளி எழுத்துப் பொறிப்புகளை இதுவரை வாசிக்க இயலவில்லை. அதற்குப் பின்னால், வாசிக்க முடியும் என்ற நிலையில் நம் கவனத்திற்கு வருவது தமிழி (தமிழ் பிராமி) எழுத்துகளும் வடநாட்டு பிராமி எழுத்துகளும்தான். சிந்து வெளி எழுத்துப் பொறிப்பிற்கும் அசோகர் கல்வெட்டுக்கும் இடையிலான காலகட்டத்தில் எழுத்தறிவுக்கு என்ன கதி நேர்ந்தது என்று யாருக்கும் தெளிவான விடை தெரியாது. ஆனால் சிந்துவெளிக் கீறல்களைப் போன்ற வடிவ ஒற்றுமை கொண்ட பானைக்கீறல்கள் சிந்துவெளியோடு தொடர்புடையவை. அவையே பிராமி போன்ற எழுத்து வடிவங்களுக்கு முன்னோடி என்ற கருத்து இப்போது வலுப்பெறுகிறது.

அத்தகைய பானைக் கீறல்களில் 75 சதவிகிதம் தமிழ்நாட்டில் தான் கிடைத்துள்ளன என்பதைப் புறக்கணித்துக் கடந்து செல்ல முடியாது. கீழடியில் தமிழகத் தொல்லியல்துறை நடத்திய அகழ்வாயவில் மட்டுமே 1001 பானைக்கீறல்கள் கிடைத்துள்ளன.

அவற்றில் பல சிந்துவெளிக் குறியீடுகளுடன் அச்சு அசலாகப் பொருந்துகின்றன. இதை எதேச்சையானது என்று சொல்லிவிட முடியாது. இதுகுறித்த விடிவான ஆய்வுகள் தேவை.

## கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம்

சிந்துவெளி நிலப்பகுதிகளில் இன்றுவரை நிலை பெற்றுள்ள கொற்கை, வஞ்சி, தொண்டி உள்ளிட்ட தமிழ்த்தொன்மங்களோடு தொடர்புடைய நூற்றுக் கணக்கான ஊர்ப் பெயர்கள் இந்தத் தொப்புள்கொடி உறவுக்கு சாட்சிகள். சிந்துவெளிப் பகுதிகளான பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் பகுதிகளில் இன்றும் இந்தத் தமிழ்ப்பெயர்களில் உள்ள ஊர்கள் அப்படியே உள்ளன. இப்பெயர்களுக்குத் தமிழ்ப் பண்பாட்டு மரபுகளைத் தவிர வேறு யாரும் உரிமை கொண்டாடவில்லை. வேறு எந்தப் பண்டைய இலக்கியங்களும் இப்பெயர்களை அறியவில்லை என்பதையும் மறந்துவிட முடியாது.

சிந்துவெளி விட்ட இடமும் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றே என்பது முழக்கம் அல்ல; உண்மை. சிந்துவெளி அகழ்வாய்வுத் தடயங்களையும் கீழடி போன்ற புதிய தடயங்களையும் இணைக்கும் புள்ளி சங்க இலக்கியம்தான். ஏனெனில் சங்க இலக்கியங்கள், இந்தியத் துணைக்கண்டத்தில் செழித்த ஓர் உயர்பண்பாட்டின் பட்டறிவை மீள்நினைவைப் பத்திரப்படுத்திய ஆவணக் களஞ்சியம். அதுவே நமது பண்பாட்டின் பன்முகத்தன்மையைக் கொண்டாடும் விழா மேடை.

ஒருவகையில் வைகை தாமிரவருணிக் கரைகள் இன்னும் முழுவதுமாக வாசிக்கப்படாத சங்க இலக்கியங்கள்... சங்க இலக்கியம், இன்னும் முழுவதுமாகத் தோண்டப்படாத கீழடி.

"மண்பானைத் தடம் எங்கள்
பண்பாட்டின் ஆழம்
சிந்துக்குள் சிதைந்தாலும்
கீழடியில் மீளும்"

என்பது எதிர்பார்ப்பு அல்ல; யதார்த்தம்.

# தர்மம் தலைகாக்கும்



அர்ஜுனனும் கிருஷ்ணரும் தெருவில் உலவிக் கொண்டிருந்த போது, ஒரு முதியவர் தர்மம் செய்யும்படி கேட்டார். அர்ஜுனன் ஆயிரம் பொற்காசுகளை கொடுத்தான். முதியவருக்கு மகிழ்ச்சி.

"ஆஹா... இது நம் குடும்பத்திற்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு போதுமே!" என்றெண்ணி வீட்டுக்குப் புறப்பட்டார். இதைக் கவனித்த ஒரு திருடன், பொற்காசுகளை வயோதிபரிடமிருந்து பறித்துச் சென்றுவிட்டான்.

சில தினங்கள் கழித்து, மீண்டும் அவ்வழியே வந்த அர்ஜுனனிடம் முதியவர் நடந்ததைச் சொல்ல, விலையுயர்ந்த நவரத்தினக் கல்லை கொடுத்து, அதையாவது பத்திரமாக கொண்டு செல்லும்படி கூறினான்.

முதியவரும் கவனமாக வீட்டுக்குக் கொண்டு சென்று, மனைவி, பிள்ளைகளிடம் கூட சொல்லாமல், பரணில் இருந்த பானையில் ஒளித்து வைத்து விட்டார். இதையறியாத அவரது மனைவி பரணிலிருந்த பானையை எடுத்துக் கொண்டு ஆற்றுக்கு தண்ணீர் எடுக்கச் சென்றாள். பானையை கழுவும் போது உள்ளிருந்த கல் ஆற்றில் விழுந்து விட்டது.

அவள் பானையுடன் வீட்டில் நுழைந்த போது, வெளியே சென்றிருந்த வயோதிபர் அந்த குடத்தைப் பார்த்து அதிர்ச்சியாகி "கல் எங்கே?" என மனைவியைக் கேட்டார். எதுவும் அறியாமல் அவள் விழிக்க, ஆற்றிற்கு சென்று பல மணி நேரம் தேடியும் பலனின்றி திரும்பினார்.

சில தினங்கள் கழித்து மீண்டும் கண்ணனும் அர்ஜுனனும் முதியவரை பார்க்கும் போது, அவர் நடந்ததை கூற அர்ஜுனன் கண்ணனிடம், "இவர் அதிர்ஷ்டக்கட்டை" என்றான். அதை ஆமோதித்த கண்ணன், "இந்த முறை நீ இவருக்கு இரண்டு காசு மட்டும் கொடு" என்றார்.

அர்ஜுனனும், அதைக் கொடுத்து அனுப்பி விட்டு கண்ணனைப் பார்த்து, "இரண்டு காசுகள் அவருக்கு என்ன சந்தோஷத்தை கொடுத்து விடும்?" எனக் கேட்டான். எனக்கும் தெரியவில்லை. இருந்தாலும் என்ன நடக்கிறது பார்க்கலாம் வா எனக்கூறிய கண்ணன் அர்ஜுனனுடன் முதியவரை பின் தொடர்ந்தார்.

செல்லும் வழியில் மீனவர் ஒருவர் உயிருடன் வைத்திருந்த இரண்டு மீன்களை வாங்கிக் கொள்ளும்படி முதியவரிடம் கேட்டான். யோசித்த முதியவர், இந்தக் காசுகள் எப்படியும் தன் குடும்பத்திற்கு ஒருவேளை பசியைக் கூட போக்காது என எண்ணி அந்த மீன்களை வாங்கி ஆற்றிலேயே விட்டு புண்ணியமாவது மிஞ்சட்டும் எனத் தீர்மானித்தார். அப்படி வாங்கியதில் ஒன்றை ஆற்றில் விட்டார்.

இன்னொரு மீனின் தொண்டையில் ஏதோ சிக்கியிருப்பதைப் பார்த்த அவர், மீனின் வாயைப் பிளந்து பார்த்தார். அதைப் பார்த்ததும் பிரமிப்பின் உச்சத்திற்கே சென்றார். அது அவர் மனைவி ஆற்றில் தவற விட்ட விலையுயர்ந்த கல்.

சந்தோஷ மிகுதியால் "சிக்கியாச்சு" என்று கூச்சலிட்டார். அதே நேரம் யதார்த்தமாக அவ்வழியே, இவரிடம் கொள்ளையடித்த திருடன் வர, அவன்திடுக்கிட்டு, தன்னை தான் முதியவர் கூறுகிறார் என்றெண்ணித் திரும்ப ஓடுகையில், கண்ணனும் அர்ஜுனனும் அவனைப் பிடித்து விட்டனர். அவனைச் சிறையில் அடைத்து விட்டு, அவன் வீட்டிலிருந்த திருட்டுப் பொருட்களை பறிமுதல் செய்தனர். அனைத்தையும் முதியவருக்கு கொடுத்தனர்.

அர்ஜுனன் கண்ணனிடம், "வாழ்வில் தான் எத்தனை விசித்திரங்கள். அதிலும் இது போன்ற நிகழ்வுகள் எப்படி சாத்தியம்?" என்று கேட்டான்.

கண்ணன் சிரித்துக்கொண்டே.. "இவர் நீ முன்பு கொடுத்ததை தனக்கும் தன் குடும்பத்துக்கு மட்டுமே எடுத்துச் செல்ல வேண்டும் எண்ணினார். அடுத்து நீ கொடுத்த விலையுயர்ந்த கல்லை தானும் உபயோகிக்காமல், மற்றவருக்கும் பயன்படாமல் ஒளித்து வைத்திருந்தார். ஆகவே அவையிரண்டும் அவரிடம்தங்கவில்லை. இப்போதோ தன்னிடமிருந்தது மிகக் குறைவானது என்றாலும், தனக்கு உதவாவிட்டாலும், இன்னொரு உயிராவது வாழட்டுமே என கருதினார். இந்த புண்ணியத்தால் இழந்த செல்வத்துக்கும் மேலாகவே அடைந்தார். பொது நலமுள்ளவர்களுக்கே லட்சுமி கடாட்ஷம் கிடைக்கும்" என்றார். சர்வம் கிருஷ்ணார்பணம்!!!!

# பெண்ணே...! பெண்ணே...!

சரியான பெண்ணை திரும ணம் செய்தால் தினமும் "காதலர் தினம்"

அன்பான பொண்ணை திருமணம் செய்தால் தினமும் "அன்னையர் தினம்"

தவறான பெண்ணை திருமணம் செய்தால் தினமும் "தியாகிகள் தினம்"

சோம்பேறி பெண்ணை திருமணம் செய்தால் தினமும் "உழைப்பாளர் தினம்"

பணக்கார பெண்ணை திருமணம் செய்தால் தினமும்" புத்தாண்டு தினம்"

அதிபுத்திசாலி பெண்ணை திருமணம் செய்தால் தினமும்"முட்டாள்தினம்"

லூசுப் பெண்ணை திரும ணம் செய்தால் தினமும் "குழந்தைகள் தினம்"

கோபக்கார பெண்ணை திருமணம் செய்தால் தினமும் "அடிமைகள் தினம்"

திருமணமே செய்யாமல் இருந்தால் தினமும் "சுதந்திர தினம்"



## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1843

### விஜய்

கவலைகளை இடம் தெரியாமல் மறைத்து வைப்பேன், துக்கங்களையும் தூள் தூளாக்குவேன்- நீ என்னை நாடினால் இப்படிக்கு புன்னகை



### அபிதா

மனநிலைக்குத் தகுந்தாற்போல் பேசிவிடாதீர்கள். ஏனென்றால் மனநிலை மாறலாம். ஆனால் பேசிய வார்த்தைகள் ஒருபோதும் மாறாது



### சுமதி

உன்னை எதிர்க்கும் உறவுகளிடம் ஏங்கி நிற்பதை விட உன்னையே எதிர்பார்க்கும் உறவை ஏற்றுக்கொள்



### சிவகுணால்

நேற்றுவரை முக்கியமாக இருந்த நாம் நாளை யாரோவாக உணரப்படுவோம் என்று அறிந்த நொடி அமைதியாக விலகிவிடுவது நல்லது!



### ராஜன்

இரக்க மனமும் இரும்பாகிப் போகிறது சிலர் சுயநலவாதி ஆகும் போது...



### நிர்மல்

அடுத்தவரின் வசதிக்கு மரியாதை கொடுக்காதீர்கள். வயதுக்கு மதிப்பளியுங்கள். ஏனென்றால் வசதி எல்லோருக்கும் வருவதில்லை. ஆனால் முதுமை எல்லோருக்கும் வரும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 200

## தூக்கத்தின் முக்கியத்துவம்

நவீன யுகத்தில் இயந்திரமயமான வாழ்க்கையால் மனிதன் தன்னை மாற்றிக் கொண்டே வருகிறான். ஒவ்வொரு நாளும் விதவிதமான பிரச்சினைகளில் சிக்கும் போது தன்னை மறந்த நிலையில் ஆறுதலுக்காக பல வழிகளை நாடுகிறான். அதனால் தூக்கம் கெடுகிறது.

தொலைந்த தூக்கத்தை சமாளிப்பதற்கு கையாளும் முறைகளால் மேலும் சிக்கல் ஏற்படுகிறது என்பதை மறந்து விடுகிறான். விளைவு பல நோய்களுக்கு அடிமையாகிப் போகிறான்.

நாம் தூங்கும்போதுதான் நமது உடலின் தினசரி பராமரிப்பு பணிகள் நடைபெறுகின்றன. அத்தகைய தூக்கம் தரமானதாக அமையாத போது தான் நம் உடலில் கழிவுகள் தேங்கி உடல் உபாதைகள் ஏற்படுகின்றன. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தூக்கத்தின் தரமும் அவசியமானதாகும்.

பெரும்பாலும் மக்கள் இதை உணராமல் இருக்கிறார்கள்.

நாம் இரவு ஒன்பது மணி அல்லது பத்து மணிக்கு படுத்து தூங்குவதாக சொல்ல முடியுமா? கடந்த இருபது ஆண்டுகளில் நாம் தூங்கச் செல்லும் நேரத்தின் சராசரி அளவு தள்ளிப் போய்கொண்டே இருக்கிறது. எட்டு மணிக்குள் இரவு உணவு உண்டுவிட்டு எட்டரைக்குள் வெளிச்சம் அணைத்து பேசிக் கொண்டே படுக்கையில் விழுந்தால், ஒன்பது மணிக்குள் தூங்கியது ஒரு காலம்.

ஆனால் இன்று ஒன்பது மணியென்பது மாறி பத்து மணி, நள்ளிரவாகி, இப்போது அதிகாலையாகி விட்டது. இரவு வேலையின் காரணமாக கண் விழித்திருப்பது என்பது என்றோ ஒருநாள் தூக்கம் வராமல் இருப்பது என்பது மாறிப் போய்விட்டது.

எக்காரணமுமில்லாமல் தொடர்ந்து இரவுகளில் கண் விழிப்போர் பெருகிக் கொண்டேயிருக்கிறார்கள். இதன் விளைவு அண்மையில் புதிது புதிதாக பெருகிவருகின்ற உடல் உபாதைகள். உடல் நலக்கேடுகள். இரவு தூக்கம் தள்ளிப் போவதற்கும் உடலில் ஏற்படும் தொந்தரவுகளுக்கும் நேரடித் தொடர்பு உண்டு.

இரவு தூக்கம் ஏன் தள்ளிப் போகிறது நமக்கு ஏன் தூக்கம் வருவதில்லை. இதற்கு நமது உடல் பிரச்சினைகள், மனக்கவலைகள் தான் காரணம் என்று நாம் எண்ணலாம். அது உண்மையில்லை. இரவு முழுவதும் முழுக்க முழுக்க டிஜிட்டல் சந்தை டிஜிட்டல் பொருட்களை நாம் சரியாக அணுகத் தெரியாமல் தடுமாறுவதையே வியாபாரம் ஆக்கி வருகிறார்கள்.

அதிகரித்து வரும் அன்றாட செலவீனங்கள் மற்றும் குடும்ப கடமைகளை சமாளிக்க நமக்கு பிடிக்காத வேலைகளையும் செய்கிறோம். அதுவும் தொழிலாளர் சட்டத்தை மதித்து எட்டு மணிநேரம் என்பதெல்லாம் இப்போது இல்லாமல் மாறிவருகிறது.

பத்து மணி நேரம் உழைக்க வேண்டும். அதிலும் டார்கெட் முடிக்க வேண்டும் மன உழைச்சல் தரும் இந்த வேலையை செய்துவிட்டு வெளியே வந்தால் இன்னும் பிரச்சனைகள். எனவே சோர்வுடன் வீட்டுக்கு வந்ததும் டிவியை ஆன் செய்துவிட்டு விடுகிறார்கள். டிவியில் வரும் மாய வண்ணக் காட்சிகளில் மனம் பரந்து விரிகிறது. கவலையை மறைக்க சில நேரங்கள் செல்கிறது.

இதில் இளம்வயதினர் முதல் பலரும் ஆட்படுகின்றனர். ஆனால் இன்று அதையும் விட்டு ஸ்மார்ட் போனில் மூழ்கி பேஸ்புக், வாட்சப் பார்ப்பது அதிகரித்து வருகிறது. சமூக வலைதளங்களில் மூழ்கி அதிலே உலா சென்றுவிட்டால் நேரம் போவதே தெரிவதில்லை.

முன்பெல்லாம் இரவு உணவு முடிந்த பின்பு திண்ணையில் நண்பர்களோடு, குடும்பத்தோடு பேசிவிட்டு உறங்கச் செல்லும் காலம்போய், வீட்டுத் திண்ணை வட்ஸ்அப் ஆகிறது. அந்த உரையாடலில் நேரம் போவதே தெரிவதில்லை.

சொந்த வீட்டிற்குள் இருந்து கொண்டே சமூக வலைத்தளங்களில் தொடர்பு கொள்ளும் நிலையும் இருக்கிறது. தினமும் நள்ளிரவு தாண்டிய பின்பு குட்மார்னிங் சொல்லி விட்டுத்தான் படுக்கைக்கு செல்கிறார்கள்.

இரவில் தூங்கிக் கொண்டிருக்கும்போது எழுந்து பேஸ்புக்கில் போட்ட போட்டோவுக்கு எத்தனை லைக் விழுந்துள்ளது என்று பார்ப்பவர்களும் உண்டு.

வட்ஸ் அப்பில் மெசேஜ் வந்துள்ளதா என அடிக்கடி பார்த்துக்கொண்டிருப்பதை கம்பல்சிவ் பிகேவியர் (compulsive behavior) என்று சொல்லப்படும் ஒருவகையான மனநலப்பிரச்சினை என்றும் கண்டிஷனல் இன்சோம்னியா (Conditional Insomnia) எனும் தூக்கமின்மை நோய் என்றும் சொல்கிறார்கள்.

பலர் தினமும் காலையில் விழித்ததும் செய்யும் முதல் வேலை மொபைலை எடுத்து இடர்நெட்டை ஒன் செய்து வட்ஸ் அப்பில் ஏதாவது மெசேஜ் வந்துள்ளதா என பார்க்கும் நிலை அதிகரித்து வருகிறது.

இரவு தூக்கம் தடைப்படுவதால் ஏராளமான உடல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நமது உடலுக்குள் சுழற்சிக் கடிகாரம் இருக்கிறது.

இரவு நெடுநேரம் கழித்து தூங்குவதாலும், ஆழ்நிலை தூக்கம் இல்லாமல் மேலோட்டமாய் தூங்கினால் பல நோய்கள் வருவதற்கு வாய்ப்புகள் அதிகமாகும். இதனால் சோர்வு, பதற்றம் ஆகியனவும் மனநலம் சார்ந்த பல பிரச்சினைகளுக்கும் காரணமாகிறது.

தரமான தூக்கத்திற்கு இயற்கை காற்றோட்டம் அவசியம். எனவே இரவில் ஜன்னலை திறந்து வைத்து தூங்குவது நல்லது. கொசுவர்த்தி சுருள், கொசுவிரட்டுவதற்கு பயன்படுத்தும் இரசாயனங்களை தவிர்க்க வேண்டும்.

எளிதில் செரிமானமாகக் கூடிய உணவுகளை மட்டுமே உண்ண வேண்டும். உணவு சரியாக செரிமானம் ஆகவில்லை என்றாலும் தூக்கம் பாதிக்கப்படும்.

நண்பர்களுக்கு, மொபைலுக்கு, டிவிக்கு என நேரம் ஒதுக்குவதில் தவறு இல்லை. உடலுக்கு கொஞ்சம் நேரம் ஒதுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். தூக்கத்தை பாதிக்கும் காரணிகள், வெளிச்சம், புகைப்பழக்கம், டீ, கோப்பி, செயற்கை குளிர்பானங்கள் போன்றவை.

எனவே தேவையற்றவற்றை தவிர்ப்போம். நல்ல தூக்கமே உடல் நலத்தை காக்கும் என்பதனை உணர்வோம். மன அழுத்தம், உடல் பருமனாவது, இதய நோய்கள், நரம்பு சம்பந்தமான நோய்கள் இவற்றிலிருந்தும் விடுதலை அடைவோம். நம்மோடு வாழ நாம் நம்மை தயாரிப்போம். நம்மை காத்துக் கொள்வோம்.

Dr.வி.அரவிந்தன்



### மாரடைப்பிற்கான அறிகுறிகள் என்ன?

நெஞ்சு பாரம் மற்றும் இறுக்குதல் போன்ற உணர்வு, இடது தோள்பட்டை, கீழ்த்தாடை மற்றும் இடது கைவலி, அதிக அளவு வியர்வை வெளியேறுதல், சத்தி வருவது போன்ற உணர்வு அல்லது சத்தி எடுத்தல்.

### மாரடைப்பு ஏற்பட்டவருக்கு செய்ய வேண்டிய முதலுதவிகள்?

முதலில் அவர்களைக் காற்றோட்டமான இடத்தில் அமரவைக்க வேண்டும்.

தண்ணீர், சோடா, பழச்சாறு போன்றவற்றைத் கொடுக்கக் கூடாது. இதனால், புரையேறி திடீர் இதயத்துடிப்பு முடக்கம் ஏற்படக்கூடும்.

அஸ்பிரின் 300mg மாத்திரை இருப்பின் உடனடியாக கொடுக்கலாம். இது இரத்தம் உறைதலைத் தடுக்கும். இதைக்கடித்து மென்று அல்லது சிறிதளவு தண்ணீரில் விழுங்கச் செய்யலாம். உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

Dr.வி.அரவிந்தன்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்